இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

# 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

## தூரநோக்கு

*வெள்ளப்பெருக்கு நீங்கிய உயிரியல் நேய சுற்றாடலையும் மாசுகள் நீங்கிய நீர் நிலைகளையும் உருவாக்கி அவற்றைப் பராமரிப்பதில் முதன்நிலை வகித்தல்*

## செயற்பணி

*மிகவும் போட்டித்தன்மையுடைய உந்துதல் பெற்ற ஒரு ஊழியர்படையினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மழை நீர் வடிகாலமைப்பு, நீர் நிலை முகாமைத்துவம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகிய பிரிவுகளில் பொறியியல் சேவைகளை வழங்குதல்*

# *உள்ளடக்கம்*


| | *பக்க இலக்கம்* |
|---|---|
| *தவிசாளரின் செய்தி* | 1 |
| பொது முகாமையாளரின் செய்தி | 3 |
| கூட்டுத்தாபனத் தகவல்கள் | 5 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 7 |
| நிறுவனக் கட்டமைப்பு | 8 |
| இயக்கச்செயற்பாடு சார் மீளாய்வு | 9 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 71 |
| முழுமையான வருமானக் கூற்று - 2013 | 73 |
| ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று | 70 |
| நிதி நிலை பற்றிய கூற்று | 74 |
| காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று | 75 |
| முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் | 77 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 79 |
| நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள் | 96 |
| 2013 ஆம் ஆண்டிற்கான முக்கிய குறிப்புகள் | 97 |
| திரண்ட முழுமையான வருமாக் கூற்று | 99 |
| திரண்ட நிதி நிலைக் கூற்றுக்கள் | 100 |
| ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று | 101 |
| திரண்ட காசுப்பாய்ச்சல் | 103 |
| திரண்ட நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 105 |

## தவிசாளரின் செய்தி

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இந்த இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இலங்கையை 'ஆசியாவின் அதிசய நாடாக' மாறச் செய்தல் என்ற மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் கனவை நனவாக்கும் தூரநோக்குப் பயணத்திற்கு பெருமளவில் பங்களித்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் உண்மையான குறிக்கோள்கள் மாத்திரமன்றி ஏரிகள், உயிரியல் பூங்காக்கள், நெற் காணிகள் முதலியவற்றை உருவாக்குதல் என்ற ஒரு வழிமுறையைக் கொண்டு ஒரு உயிரியல் நேய சுற்றாடலை ஏற்படுத்தும் பணியிலும் இ.கா.மீ.அ.கூ. தற்பொழுது ஈடுபட்டுள்ளது. இதனால் நகரங்களுக்கு புதிதாக அழகும் எளிலும் சேருகின்றன. நாட்டில் வெள்ளப்பெருக்கு நீங்கிய ஒரு சுற்றாடலைப் பேணிப் பராமரிக்கும் வேளையிலே தான் மேற்குறித்த இந்த அம்சங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கௌரவ கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய எண்ணற்ற ஆதரவைக் கொண்டு இ.கா.மீ.அ.கூ. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தனது இலக்குகளை அடைந்தது. அவர் எமக்கு வழங்கிய அந்தப் பங்களிப்பானது கூட்டுத்தாபனத்தை வழிநடத்துவதற்கு மாத்திரமன்றி மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கும் கூட துணையாக அமைந்தது. அதே நேரம் மனிதவலு, நிதிகள் முதலிய தேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அவ்வப்பொழுது கூட்டுத்தாபனம் குறித்த பிரச்சினைகளைத் தீர்க்கவிருந்த நேரத்திலும் இவரது தலையீட்டினால் அத்தகைய பிரச்சினைகளையும் எம்மால் தீர்த்துக்கொள்ள முடிந்தது.

நகர மீளுருவாக்கக் கருத்திட்டங்களின் கீழான மயுரா பிளேஸ் மற்றும் சலமுல்ல ஆகிய அதிக எண்ணிக்கையான வீடமைப்பு அலகுகளின் நிர்மாணம் சார்ந்த பணிகளை கையாளுவதிலும் எமது கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு உதவி வருகின்றது. இந்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும். எமது கூட்டுத்தாபனம் இது மாதிரியான கருத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

பிரதானமாக கொழும்புப் பெரும்பாகப் பகுதிகளில் நிகழும் வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் நிமித்தம் எமது கூட்டுத்தாபனம் உலக வங்கி நிதியிட்ட எம்சியூடீ கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகளை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்தது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ், எமது கூட்டுத்தாபனம் பெருமளவான இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டது. இதில் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப ஊழியர்களுக்கு இந்த இயந்திராதிகளிலிருந்து அனுகூல வெளியீட்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வெளிநாட்டில் ஒரு பயிற்சியும் கிடைத்தது. இந்தக் கருத்திட்டம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் கையாளப் படுகின்றது.

ஒரு இயற்கை உயிரியல் சுற்றாடலைப் பேணுவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, கொழும்பு நகரம் மற்றும் சுற்றுப்புறங்கள் என்பவற்றின் துரித நகரமயமாக்கல் பணி தொடர்பில் கூட்டுத்தாபனம் கொழும்புப் பெரும்பாக நீரேந்துபரப்புகளினுள் காணப்படும் சதுப்புநிலங்களுக்கான

ஒரு சதுப்புநில முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தது. தலவத்துகொடவில் ஒரு உயிரியல் பல்லினப் பூங்காவை அமைக்கும் பணி 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டில், எமது கூட்டுத்தாபனம் வெரஸ்கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கட்டம் I தொடர்பான நிர்மாணம் சார்ந்த பணிகளை ஆரம்பித்தது. நுகேகொட - ரத்தனபிட்டிய பகுதியில் சுமார் 3056 மீற்றர் நீளமான கால்வாய்களின் புனரமைப்புப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட அந்தப் புனரமைப்புப் பணியின் மொத்தப் பெறுமானம் 330 மில்லியன் ரூபாவாக இருந்தது.

முன்னைய ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட 2173 மில்லியன் ரூபா புறழ்வுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்தப் புறழ்வு 1477 மில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. மணல் குவியலில் இருந்த கடல் மணலின் குளோரைட்டு அளவு அதிகமாகவும் அந்த மணல் நிர்மாணம் சார்ந்த கைத்தொழில்களுக்குப் பொருத்தமற்றதாகவும் காணப்பட்டதால் முக்கியமாக கூட்டுத்தாபனத்தின் மூலம் கடல் மணலை விற்பனை செய்ய முடியாது போனமையினால் இந்த இலாபம் இவ்வாறு 2013 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் முழுமொத்த இலாபம் 1% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இறுதியாக, 2013 ஆம் ஆண்டிற்காக நாம் திட்டமிடப்பட்டிருந்த பணிகளை சுமுகமான முறையில் எமது கூட்டுத்தாபனம் நிறைவேற்றுவதற்கு துணை நின்ற எமது நிரல் அமைச்சின் அமைச்சராகிய மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அவர்கட்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். எமது இலக்குகளை அடைவதில் அமைச்சின் அதிகாரிகள், அலுவலர்கள், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், எமது கூட்டுத்தாபனத்தின் முகாமைமைத்துவ மட்ட ஊழியர்கள் மற்றும் பதவியணியினர், இலங்கை இராணுவப் படையினர், இலங்கைக் கடற் படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர், உரிய நேரத்தில் தமது சேவைகளை வழங்கிய ஒப்பந்தத் தரப்புகள் விநியோகத் தரப்புகள் ஆகிய பிரிவினர்கள் நல்கிய பங்களிப்புக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளவும் விரும்புகின்றேன்.

**கட்டடக்கலைஞர் ஹர்ஷன் த சில்வா**
தவிசாளர்
இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

## பொது முகாமையாளரின் செய்தி

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு கௌரவ கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள், மற்றும் இ.கா.மீ.அ.கூ. முகாமைத்துவத்தினதும் பதவியணியினதும் அயராத உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பன 2013 ஆம் ஆண்டினுள் அடைந்த இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. ஆதலால் இந்தக் கூட்டுத்தாபனம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களில் வெற்றிகரமான இலாபம் ஈட்டக்கூடிய ஒரு நிறுவனமாக மாறியது.

கடந்த 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட 2173 மில்லியன் ரூபா மொத்தப் புறழ்வுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தப் புறழ்வு 1477 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. கடந்த 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட 32 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னருள்ள இலாபம் 118 மில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. பிரதானமாக கடல் மணல் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டுத் தாபனத்தின் முழுமொத்த இலாபம் 22% வீதத்திலிருந்து 21% வீதம் வரை சற்று குறைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டு இறுதியிலும் 2013 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியிலும் புதிதாக அகழ்ந்தெடுக்கப்பட்ட கடல் மணல் கடும் மழைகளினால் அதன் அனுமதிக்கத்தக்க குளோரைட்டு அளவு வரையறைகள் குறைந்து போதுமானதாக இல்லாததாலும் மற்றும் காலம் கடந்திருந்ததாலும் நிர்மாண நோக்கங்களுக்கு விநியோகிக்க பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது. ஆகையால், 2013 ஆம் ஆண்டில் மண்ணிரப்பும் நோக்கங்களுக்காக மாத்திரம் அதிகமான கடல் மணல்கள் விற்பனை செய்யப்பட்டன.

எனினும், தற்போது களஞ்சியத்திலுள்ள 1,975,225,408 ரூபா பெறுமதியான கடல் மணலை நிர்மாண நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியும். களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள கடல் மணல் எதிர்கால விற்பனைக்கு போதுமானதாகும்.

கொழும்பு நகரத்தில் அழகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பாக கால்வாய் மற்றும் கால்வாய் வீதி அபிவிருத்தி போன்ற பல பிரிவுகளில் கூட்டுத்தாபனம் துல்லியமாக ஈடுபட்டிருந்தது. கொழும்பு நகரத்திற்கான நகர மீளுருவாக்கலுக்காக வெல்லவத்தை மயுரா பிளேஸ் மற்றும் சலமல்வத்தை ஆகிய இடங்களிலுள்ள பல மாடிக் கட்டிடங்களின் நிர்மாணங்களாவன கூட்டுத்தாபனம் முன்னெடுத்த சில முக்கிய நிர்மாணக் கருத்திட்டங்களாகும். சகல முக்கியமான செயற்பாட்டுப் பிரிவுகளிலும் கூட்டுத் தாபனம் தனது உற்பத்தித்திறன், வினைத்திறன் மற்றும் இலாபம் என்பவற்றை மேம்படுத்தியுள்ளது. ஆதலால் கூட்டுத் தாபனம் மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் தனது குறிக்கோள்களை அடைந்திருக்கின்றமை புலனாகின்றது.

முன்னுரிமையளிக்க வேண்டிய முக்கியமான உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் என்பவற்றை மேம்படச்செய்து கொழும்புப் பெரும்பாகத்தில் நிகழும் வெள்ளப்பெருக்கின் பௌதீக, சமூக பொருளாதாரத் தாக்கங்களைக் குறைப்பதன் மூலமான இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ந்து வருகின்ற நகர மீளுருவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவும் நோக்கில், கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான செயற்படுத்துகை முகவராண்மைகளில் ஒன்றாக இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் விளங்குவதால் இதற்கு குறித்த இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2017 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் நிருவகிக்கப்படும் என்பதுடன் இதன் செயற்படுத்துகைப் பொறுப்புக்கள் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அடங்கலாக அமைச்சின் கீழ் இயங்குகின்ற மூன்று முகவராண்மைகளுக்குரியதாகவும் காணப்படுகின்றன.

மேலும் வெரஸ்கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகைப் பொறுப்பும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயல்நோக்கின் கீழ் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கைத் தணிக்கும் பிரதான குறிக்கோளுடன், கூட்டுத்தாபனம் வெரஸ்கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றியது. ஏற்கெனவே காணப்படுகின்ற கால்வாய்த் தொகுதிகளை அகழ்ந்து துப்புரவாக்குதல், கரையோகப் பகுதிகளைப் பாதுகாத்தல், வெள்ளப்பெருக்கு நீரைத் தேக்கிவைக்கக்கூடிய ஏரிகளை பிரித்தொதுக்குதல், ஏற்கெனவே காணப்படுகின்ற சிறு மதகுகள், பாலங்கள் என்பவற்றை மேம்படுத்துதல், புதிய நிர்மாணங்களை நிர்மாணித்தல் மற்றும் சுற்றுப்புறப் பிரதேசங்களை அழகுபடுத்துதல் என்பன நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளில் சில செயற்பாடுகளாகும்.

நிலைபெறுதகு உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உயிரியல் சுற்றாடல் நேய சுற்றுச்சூழல்களுக்கான ஒரு திறமுறைப் பங்காளித்துவத் தரப்பு என்ற ரீதியில் கூட்டுத்தாபனம் தனது

பணி நெறி வரையறைக்கு அமைய பொறியியல் நிபுணத்துவத்தையும் வளங்களையும் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது.

இறுதியாக, குறித்த மீளாய்வு ஆண்டை ஒரு வெற்றிகரமான ஆண்டாக ஆக்குவதற்கு பல வழிகளிலும் எமக்கு வழிகாட்டி உதவிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும், உதவி ஒத்தாசைகளை பெருமனதுடன் நல்கிய அமைச்சின் ஏனைய அலுவலர்களுக்கும், இ.கா.மீ.கூ. தலைவருக்கும், பணிப்பாளர்கள் சபைக்கும், சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களுக்கும், இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய ஊழியர்களுக்கும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயல்நோக்கில் வருகின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களுக்கும், இலங்கை இராணுவப் படையினருக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும், சிவில் பாதுகாப்புப் படையினருக்கும், எமது விநியோகத் தரப்புகளுக்கும், ஒப்பந்தத் தரப்புகளுக்கும் மற்றும் ஏனைய அக்கறையுடைய சகல தரப்புகளுக்கும் இத்தருனத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**எம்.ஏ.எஸ்.எம்.கே. சேனாதீர**
பொது முகாமையாளர்
2014.02.27.

# நிறுவனத் தகவல்கள்

## பணிப்பாளர்கள் சபை

| | |
|---|---|
| திரு.எல்.ஏ.பி.ஹர்ஷன் டி சில்வா | தவிசாளர்,<br>இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| திரு.ரோகன் செனவிரட்ன | பணிப்பாளர்<br>மேலதிகச் செயலாளர்<br>பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு |
| .நிமால் பெரேரா | தவிசாளர்<br>நகர அபிவிருத்தி அதிகார சபை<br>செத்சிரிபாய<br>பத்தரமுல்ல |
| எந்திரி.திருமதி பண்டார கமலதாச | பதவி வழி அலுவலர்<br>நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்<br>நிர்ப்பாசன திணைக்களம் |
| திரு.மகிந்த சாலிய | திறைசேரி பிரதிநிதி<br>மேலதிக பணிப்பாளர் நாயகம் (அரச கணக்குகள்)<br>பொதுத் திறைசேரி |
| திரு.தம்மிக அட்டியாகல | பணிப்பாளர்<br>குழு பணிப்பாளர் - உபாலி கம்பனிகள் |
| கப்டன் எச்.எஸ்.பாலசூரிய | பணிப்பாளர்<br>பிரதிப் பணிப்பாளர் கடற்படை சிவில் பொறியியல் (விசேட கருத்திட்டங்கள்)<br>இலங்கை கடற்படை |
| திரு.சமன் கலபதி | பணிப்பாளர்<br>சட்டத்தரணி |

# நிறுவனத் தகவல்கள் (தொடர்ச்சி)

**<u>சட்ட அந்தஸ்து</u>**

கொழும்பு மாவட்ட (தாழ் நிலப் பிரதேச) மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை என முன்னர் அறியப்பட்ட இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், 1968இன் 15ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்ட்டடது. 1976இன் 27ஆம் இலக்க திருத்தச்சட்டத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் விரிவாக்கப்ட்டன. 1982இன் 52ஆம் இலக்க திருத்தச் சட்டம் சபையின் பெயரை இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமாக மாற்றியதுடன் முழு நாட்டையும் உள்ளடக்குவதற்கு அதன் அதிகார எல்லையினை விரிவுபடுத்தியது. இச்சட்டம், அதிகாரமளிக்கப்படாத காணி நிரப்புதல், நீர் நிலைகளை மாசுபடுத்தல் என்பவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்கி 2006இன் 35ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேலும் திருத்தப்பட்டது.

**தலைமை அலுவலகம்**

இல.3, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை
வெலிகந்தை

ராஜகிரிய

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

இல 306/72, பொல்துவ வீதி

பத்தரமுல்ல

**சட்ட ஆலோசகர்**

சட்டமா அதிபர்
சட்டமா அதிபர் திணைக்களம்
புதுக்கடை
கொழும்பு 12

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி
மக்கள் வங்கி

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு

| | |
|---|---|
| ஏந்திரி திருமதி. எம். ஏ.எஸ். எம். கே. சேனாதீர | பொது முகாமையாளர் |
| ஏந்திரி திரு. கே. ராஜபக்ஷ | மேலதிக பொது முகாமையாளர் (தொழிநுட்பம்) |
| பிரிகேடியர் டப்ளியு எஸ் ஆரியசிங்க | மேலதிக பொது முகாமையாளர் (அமுலாக்கல்) |
| ஏந்திரி திரு. டப்ளியு. ஆர். சி. பர்னாந்து | பிரதி பொது முகாமையாளர் |
| ஏந்திரி திரு. ஜி. எஸ். எம். அபேசேகர | பிரதி பொது முகாமையாளர் (பொறித்தொகுதி மற்றும் உபகரணம்) |
| திரு. டி.பீ. சந்திரசேகர | பிரதி பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி) |
| திருமதி. ஆர்.ஐ. சில்வா | பிரதி பொது முகாமையாளர் (நிதி) |
| திருமதி. பி. ஹேமலதா | பிரதி பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்) |
| ஏந்திரி திரு. சி. பீ. அமரசிங்க | பிரதி பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு) |
| ஏந்திரி திரு. எஸ். பி. முதுமல | பிரதி பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் மீட்டல்) |
| ஏந்திரி திரு. வை. பி. சி. த சில்வா | பிரதி பொது முகாமையாளர் (நிர்மாணம்) |
| ஏந்திரி திருமதி. ஏ எச் துசாரி | பிரதி பொது முகாமையாளர் (விசேட கருத்திட்டங்கள்) |
| ஏந்திரி கலாநிதி என் எஸ் விஜேரத்ன | பிரதி பொது முகாமையாளர் (சதுப்புநில முகாமைத்துவம்) |
| ஜி. டி. டீ. ஜே. அமரசிங்க | பிரதம சட்ட அலுவலர் |
| திரு. ஜே. ஏ. பி. கே. ஜயசிங்க | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| ஏந்திரி திருமதி. எல். சி. ஜி. சொயசா | உதவி பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு) |
| ஏந்திரி செல்வி. பி.எம்.பி. விஜேரத்ன | உதவி பொது முகாமையாளர் (சிவில்) |
| ஏந்திரி திரு. கே. ஐ. கஹவிட | உதவி பொது முகாமையாளர் (விசேட கருத்திட்டங்கள்) |
| ஏந்திரி திருமதி. எஸ். என். கமகே | உதவி பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் மீட்டல்) |
| திரு. எஸ். டீ. தர்மரத்ன | உதவி பொது முகாமையாளர் (விநியோகம்) |
| திரு. கே. டீ. அன்தர | உதவி பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்) |
| திருமதி. எச். ஏ. லக்மாலி திஸ்னா | பதில் உதவி பொது முகாமையாளர் (நிதி) |

# SRI LANKA LAND RECLAMATION & DEVELOPMENT CORPORATION

## *Organization Structure*



# தொழிற்பாட்டு மீளாய்வு

## வடிகால் மற்றும் மீட்டல் பிரிவு

### சொந்த கருத்திட்டங்கள்

### 1. கரையோர மணல் அகழ்தல் மற்றும் விற்பனைக் கருத்திட்டம்

திறந்த பொருளாதாரம் ஆரம்பித்ததிலிருந்து தோற்றம் பெற்ற இலங்கை நிர்மாணக் கைத்தொழிலின் எழுச்சி, வீடமைப்பு கட்டடத் தொகுதிகள், தொழிற்சாலைகள், சுதந்திர வர்த்தக வலயங்கள், பெருந்தெரு போன்ற பாரிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு வழிகோலியது. அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மணல் இன்றிமையாத தேவைப்பாடு ஒன்றாக காணப்படுகின்றமையினால் ஆற்று மணலுக்கான கேள்வி துரிதமாக அதிகரித்தது.

கட்டுப்பாடற்ற விதத்திலும் தேவக்கேற்றவாறும் ஆறுகளிலிருந்தும் மணல் அகழ்வதன் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு சூழல் பிரச்சினைகள் காரணமாக பாரியளயில் மண் அகழ்தல் தற்போது வரையறுக்கப்பட்டு இது தொடர்பில் சட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இம்மட்டுப்பாடுகளின் விளைவாக வேண்டிய நேரத்தில் வேண்டிய அளவில் மணலைப் பெற்றுக் கொள்வது நிர்மாண கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பிரதான பிரச்சினையொன்றாக உள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எமது நிறுவனம் கடற்கரையிலிருந்து எடுக்கப்பட்ட மணலினை சந்தைக்கு வழங்குவதற்கான கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

கெரவலபிட்டிய, முத்துராஜவெல சேகரிப்பு நிலையங்களுக்கு 3000000 கன மீற்றர் மணலை அகழ்வதற்கும் இறைத்து அனுப்புவதற்கும் பெல்ஜியத்தின் ட்ரெட்ஜின் இன்டர்நெஷனல் என்வி என்ற நிறுவனத்திற்கு 2011 பெப்ரவரி மாதத்தில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டது. ஒப்பந்தத் தொகை அ.டொ.19,860,000 ஆகவும் நாணய மற்றும் எரிபொருள் அதிகரித்தல் கட்டணங்கள் அ.டொ.1,411,456.80 ஆகவும் இருந்தது. பணி 2011 ஏப்ரல் மாதம் ஆரம்பித்து 2012 ஜனவரி மாதமளவில் பூர்த்தியடைந்தது. அதன் பின்னர் 756,593 கன மீற்றர் கரையோர மணல் மேலதிகமாக அதே ஒப்பந்ததாரர்களினால் அதே களஞ்சிய குவியலுக்கு 2013 பெப்ரவரி மாதம் அனுப்பப்பட்டது. மேலதிக அளவிற்கான ஒப்பந்த பெறுமதி அ.டொ.5197,539 (கோரிக்கைகள் உட்பட) ஆகும். 14,472 கன மீற்றர் மணல் 2013 டிசம்பர் 31 வரை சந்தைக்கு வழங்கல் செய்யப்பட்டுள்ளது.






## சேவைநாடிய கருத்திட்டங்கள்

### 1. பாணந்துறை மொரவில ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் வடிகால் மேம்படுத்தல் கட்டம் - I

மேற்குறித்த கருத்திட்டம் ரூபா 17.40 மில். மதிப்பிடப்பட்ட மொத்த செலவில் களுத்துறை மாவட்டச் செயலாளருக்காக மேற்கொள்ளப்பட்டது. இக் கருத்திட்டப் பணியின் நோக்கெல்லை 2012 ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கின்ற பிரதான வாய்க்கால்களை சுத்தப்படுத்தலும் மணல் அகற்றுதலும் கருங் கற்களால் கட்டப்பட்ட வடிகால் நிர்மாணித்தல் மற்றும் கல்வெட்டுக்கள் நிர்மாணித்தல் குறுக்கு கட்டமைப்புக்கள் மற்றும் கபியோன் சுவர் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் 2013.01.10 அன்று நிறைவு செய்யப்பட்டது. ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 2.18 மில். தொகையுடைய இவ்வாண்டின்போது செய்யப்பட்ட பணி உள்ளடங்கலாக ரூபா 16.75 மில். ஆகும்.

<u>கால்வாய் சுத்தப்படுத்ததலும் தோண்டுதலும்</u>







<u>குறுக்குக் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்</u>



**Crossing Structure – No. 02**



**Crossing Structure – No. 04**



குறுக்குக் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்




Crossing Structure – No. 08



Crossing Structure – No. 09



2. **பாணந்துறை மொரவில ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் வடிகால் மேம்படுத்தல் கட்டம் - II**

இக்கருத்திட்டம் ரூபா 44.14 மில். மதிப்பிடப்பட்ட மொத்த செலவில் களுத்துறை மாவட்டச் செயலாளருக்காக மேற்கொள்ளப்பட்டது. இக் கருத்திட்டப் பணியின் நோக்கெல்லை 2013 ஜுன் மாதத்தில் ஆரம்பித்து பிரதான வாய்க்கால்களை சுத்தப்படுத்தலும் தோண்டுதலும் கருங்கற்களால் கட்டப்பட்ட வடிகால் நிர்மாணித்தல் மற்றும் கல்வெட்டுக்கள் நிர்மாணித்தல், குறுக்கு கட்டமைப்புக்கள் மற்றும் கபியோன் சுவர் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இன்னும் பணி முன்னெடுக்கப்படுகின்றது. 2013 டிசம்பர் வரை ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 25.29 மில். ஆகும்.










## 3. முன்மொழியப்பட்ட விளையாட்டு கட்டடத் தொகுதி, ததல்ல – காலி கட்டம் III

மேற்குறித்த கருத்திட்டம் ரூபா 24.45 மில். மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்திட்ட பணியின் நோக்கெல்லை உயர் நிலங்களை வெட்டுதல் மற்றும் மட்டப்படுத்தல், சுருசுக் குழாய் வடிகால் நிர்மாணம் (450 மி.மீ. விட்டம்) வேலி, வாயில் நிர்மாணம் வரிசை ஆசனங்கள் மற்றும் படியமைத்தல் மைதானப் பகுதியில் பிரதான வாயில் அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இப்பணி 2013.02.28 அன்று ஆரம்பித்து 2013.11.30 அன்று நிறைவு செய்யப்பட்டது. 2013 டிசம்பரில் செய்யப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 23.93 மில். ஆகும்.








## 4. தெனியாய ஸ்ரீ புஸ்பதான ம.வி. இற்கான முன்மொழியப்பட்ட கபியோன் சுவர், சுருசுக் குழாய் கல்வெட்டு மற்றும் வடிகால் முறைமை நிர்மாணித்தல்

இக் கருத்திட்டம், ரூபா 12.87 மில். மதிப்பிடப்பட்ட மொத்த செலவில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டது. இக் கருத்திட்டத்தின் பணி நோக்கெல்லை நிலக் கால்வாய் மேம்படுத்தலும் (ஏ-பி மற்றும் சி-டீ), தற்போதுள்ள வாய்க்காலினை நிரப்புதல் ஏ-எப்-டீ (நீளம் 105 மீ), கபியோன் சுவர் மற்றும் சுருசுக் குழாய் மற்றும் கல்வெட்ட நிர்மாணித்தல் அத்துடன் வீதி புனரமைத்தல் என்பனவாகும். இப்பணி 2013.04.08 அன்று ஆரம்பித்து 2013.12.31 அன்று நிறைவு செய்யப்பட்டது. 2013 டிசம்பர் வரை செய்யப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 11.99 மில். ஆகும்.










### 5.நீர்கொழும்பு ஏரியிலிருந்து மகா ஓயாவின் இறுதி வரை ஹமில்டன் கால்வாயினை புனரமைத்தல் - கட்டம் II, 2012

நீர்கொழும்பு ஏரியிலிருந்து மகா ஓயாவின் இறுதி வரை ஹமில்டன் கால்வாயினை புனரமைத்தல் - கட்டம் II, 2012 புனரமைத்தல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட சுற்றுலாத்துறை வளங்கள் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 74.87 மில். ஆகும். அத்துடன் கருத்திட்ட பணி 2012 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்ட பணியின் பெறுமதி ரூபா 16.36 மில். ஆகும். கபியோன் சுவர்களால் கால்வாய்கரைகளைப் பாதுகாத்தல், வண்டல் படிதலுக்கான வலை நிர்மானம் மற்றும் அழகுபடுத்தல் பணிகள் இக்கருத்திட்டத்தின் பிரதான கூறுகளாகும். இப்பணி 2013.03.30 அன்று பூர்த்தி செய்யப்பட்டது.





### 6. முன்மொழியப்பட்ட மலர் கடைகள் நிர்மாணம் கட்டம் - II – வாட்டர்ஸ் எட்ஜ்.

வாட்டர்ஸ் எட்ஜ் வளாகத்தினைச் சுற்றி மலர் கடைகள் மற்றும் உணவு கூடங்களை நிர்மாணிப்பதற்கான காணி மேம்படுத்தல் பணிக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தம் ஒன்றை வழங்கியது. இப்பணி 2012 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பித்து 2013 மே மாதம் நிறைவு பெற்றது. செய்யப்பட்ட பணியின் பெறுமதி ரூபா 88.52 மில். ஆகும்.






# திறைசேரி மானியக் கருத்திட்டங்கள்

**விசேட கருத்திட்டங்கள்**

கொழும்பு மாநகர பிராந்தியத்திலுள்ள பல இடங்கள் வடிகால் முறைமையிலுள்ள பல்வேறு குறைபாடுகளின் காரணமாக மழைக்காலத்தின்போது நீரில் மூழ்குகின்றன. மிக மோசமான வெள்ள அனர்த்தம், பொது மக்கள் மற்றும் ஆதனங்களுக்கு மோசமான அசௌகரியங்களை ஏற்படுத்தி 2010 நவம்பர் மாதம் நிகழ்ந்தது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரையின் பேரில் எமது கூட்டுத்தாபனம் அவசர வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றியது. இது ஏரிகளில் நீரை பிடித்து வைப்பதனை உருவாக்குகின்ற தாழ் நிலங்களில் மணல் அகற்றுதல் மற்றும் தாழ் நிலங்களில் ஒழுங்கற்ற காணி நிரப்புதலினை கட்டுப்படுத்தல் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.

மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 2013ஆம் ஆண்டிற்கு ரூபா 1000 மில். ஆகும். அத்துடன் எமது கூட்டுத்தாபனம் விசேட வெள்ள தடுப்பு பணிகளின் கீழ் பின்வரும் வடிகால் கருத்திட்ட மேம்படுத்தல்களை மேற்கொண்டது.

## 1 பாகொட கிளைபிரியும் இடத்திலிருந்து பாராளுமன்ற வீதி பாலம் ஊடாக கோட்டை கால்வாயக்கான வடிகால் மேம்படுத்தல்.

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் அதிகாரமளிக்கப்படாத ஆக்கிரமிப்பிலிருந்து நீரைப் பிடித்து வைக்கும் பிரதேசங்களை பாதுகாப்பதாகும். தாழ் நிலங்கள் வெள்ளத்தினை பிடித்து வைக்கும் பகுதிகளாக செயற்படுவதுடன் அதிகமான மழைக்காலத்தின் போது வெள்ளத்தின் உச்ச நிலையினை குறைப்பதில் இன்றியமையாத பங்கு ஒன்றினையும் வகிக்கின்றன. எனவே பொழுதுபோக்கு, மகிழ்வூட்டல் போன்ற சமூக நலன்களை அதிகரிப்பதற்கு உதவுகின்ற அத்துடன் பொதுமக்களுக்கு சூழல் கல்வியினை வழங்குவதற்கும் இப்பிரதேசங்களில் சூழல் நட்புமிக்க செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவது எமது தேவையாகும். சில செயற்பாடுகள்: நடை பாதைகள், மலர் கடைகள், படகு சவாரிகள் மற்றும் பயணிகள் போக்குவரத்து படகுகள் போன்றவற்றை நோக்காகக் கொள்கின்றன. இக்கருத்திட்டம் சிக்கனமானதாகவும் நிலையானதாகவும் ஆக்கப்படுவதற்கு நியாயமான சிறிய கட்டணம் ஒன்று அறவிடப்படும். இப்பணிக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 300 மில். ஆகும். இச்சலெவு மேற்பரப்பை சுத்தப்படுத்தல், வாய்க்காலை தோண்டுதல், முன்மொழியப்பட்ட வழியின் கீழ் சுதந்திரமாக நீர் ஓடுவதற்கு வசதி ஏற்படுத்தவதற்கு வண்டல்கள் மீது பராமரிப்பு பாதை ஒன்றை தோற்றுவித்தல் அத்துடன் பிரதேசத்தின் தோற்றத்தினை அழகுபடுத்துவதற்கு சூழவுள்ள பகுதிகளை நிலத் தோற்றம் அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

2013ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணிக்கான மொத்த பெறுமதி ரூபா 304.78 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில் அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- வாட்டர்ஸ் எட்ஜ் பகுதியில் நீர் தேக்கி வைத்தல் ஏரி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை அபிவிருத்தி செய்தல் (கட்டம் - II)
- தியவன்னா ஏரியினையும் அதன் சுற்றுப் புறத்தினையும் அபிவிருத்தி செய்தல்
- கால்வாய் ஒதுக்கு மேம்படுத்தலும் கோட்டை கால்வாய் மற்றும் அதன் சுற்றுப் புறத்தினை நிலத்தோற்றம் செய்தல்
- வோட்டர்ஸ் எட்ஜ் பிரதேசத்தில் முன்மொழியப்பட்ட வாகன தரிப்பிடமும் வடிகால் முறைமையும்
- கிம்புலாவல பிரதேசத்தில் முன்மொழியப்பட்ட வாகன தரிப்பிடமும் வடிகால் முறைமையும்

வாட்டர்ஸ் எட்ஜ் பகுதியில் நீர் தேக்கி வைத்தல் ஏரி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை அபிவிருத்தி செய்தல். (கட்டம் - II)






வோட்டர்ஸ் எட்ஜ் பிரதேசத்தில் முன்மொழியப்பட்ட வாகன தரிப்பிடமும் வடிகால் முறைமையும்.






கிம்புலாவல பிரதேசத்தில் முன்மொழியப்பட்ட வாகன தரிப்பிடமும் வடிகால் முறைமையும்






## 2 மாதிவெல வீதிக்கு அருகாமையிலிருந்து பாராளுமன்ற முடிவு மற்றும் அதன் சுற்றுப்புறம் வரை கால்வாய் பகுதி அபிவிருத்தி செய்தலும் நிலத் தோற்றம் அமைத்தலும்.

இலங்கைக்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் வருகை தருகின்ற பல பிரமுகர்களுக்கு அனுராபுரம், சிகிரியா அல்லது வேறு இடங்களைக் கண்டுகழிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. தலைநகருக்கு அருகாமையில் அமைந்துள்ள சில முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அவர்கள் வருகைதருகின்றனர். மாதிவெல வீதி, பாராளுமன்றத்திற்கு அருகாமையிலுள்ள பிரதேசம் மற்றும் சுற்றுப்புற பிரதேச நிலத்தோற்றம் அமைத்தல் மற்றும் தோண்டுதல் பணி வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பலரின் ஆர்வத்தினை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். ‘மஹிந்த சிந்தனை’ எண்ணக்கருவின் கீழ் ‘வப் மகுலே’ சம்பிரதாயத்தை பேணுவதற்காக இடம் ஒன்றினை உருவாக்குவதனூடாக இப்பிரதேசம் சுற்றுலா பயணிகளுக்கான மாற்று வழி ஒன்றாக அமையக் கூடியதாக இருப்பதுடன் எமது இளந் தலைமுறையினர் இலங்கையில் பின்பற்றப்பட்ட புராதன பயிர்ச்செய்கை முறை பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 50 மில். ஆகும். மற்றும் 2013இல் ஆற்றப்பட்ட பணிக்கான மொத்த பெறுமதி ரூபா 229.02 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில் அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- ஏரிகளை உருவாக்குதலும் வயற் காணியினைச் சுற்றி வாய்க்கல்களும்
- கிம்புலாவெலயில் புதிய வீதி மருங்கிலும் காணி பரப்பினை மேம்படுத்தல்.
- கிம்புலாவெல வாய்க்கால்களுக்கான நீர் வழிந்தோடும் வழிகள்
- அணைக்கட்டு, குறுக்குப்பாதை, வான்கதவு, சுருசு வாயில்கள், வடிகால் ஓர நடைபாதை மற்றும் கல்வெட்டுக்கள்
- கிம்புலாவெலயிலுள்ள புதிய வீதி மருங்கிலும் காணிப் பரப்பினை மேம்படுத்தல் - II








3



### 3. கீழ்நிலை வடிகால் மேம்படுத்தல் உள்ளடங்கலாக ஹீன் எல சதுப்புநில அபிவிருத்தி

வெள்ள நீர் தேக்கி வைத்தல் நோக்கங்களுக்காக ஹீன் எல சதுப்பு நிலம் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை ஊடாக சுற்றயல் கால்வாய்ஒன்றினை உருவாக்குதல் மற்றும் கால்வாய மருங்கிலும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு வீதியொனறினை தோற்றுவித்தல் என்பனவற்றினூடாக அதிகாரமளிக்கப்படாத அபிவிருத்தியிலிருந்து இப்பிரதேசம் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், கால்வாய் கரையோரத்தினூடான வீதிக் கட்டமைப்பினை தொடர்படுத்தலின் மூலம் கிரிமண்டல மாவத்தை ஊடான போக்குவரத்து நெரிசல்கள் பாரியளவு குறைக்கப்படலாம்.

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 200 மில். 2013 ஆம் ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 210.13 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில் அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- நாவல பிரதேசத்தின் ஹீன் எல அபிவிருத்தி நகர ஈரநில பூங்காவினை நுகேகொடைபிரதேசத்தில் உருவாக்குதல்
- பாகொட கால்வாயோடு இணைந்துள்ள நகர ஈரநில பூங்காவின் கால்வாய் மண்மேடுகளை அபிவிருத்தி செய்தல்
- பாகொட கால்வாய் மண்மேடுகளுக்கான பிடிமான கட்டமைப்பு நிர்மாணம்.
- ஹீன் எல சதுப்பு நில பிரதேசம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களை அபிவிருத்தி செய்தல்
- ஹீன் எல கீழ்நிலை வடிகால் மேம்படுத்தல்
- ஜிசிஎப்சி மற்றும் ஈஐபி கருத்திட்டத்தின் பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லைகளினுள் அதிகாரமளிக்கப் படாத காணிகளை எல்லை வகுத்தல்









**4 பாராளுமன்ற மேல் நிலை சதுப்பு பிரதேச அபிவிருத்தியும் பத்தரமுல்ல, டென்சில் கொபேகடுவ மாவத்தை ஊடான நிலத்தோற்றம் அமைத்தலும்**

பல அரசாங்க நிறுவனங்கள் பத்தரமுல்ல, டென்சில் கொபேகடுவ மாவத்தைக்கு இடமாற்றப்பட்டுள்ளன. எனவே பாதை மருங்கில் நிலத்தோற்றம் அமைக்கப்படுமாயின் கண்களுக்கு ரம்மியமான காட்சியாக அமையும். இக்காணி பாராளுமன்றத்தின் பகுதியொன்றாக காணப்படுவதனால் உயர் நீர் தேக்கி வைத்தல் பகுதி, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டு பாராளுமன்ற பிரதேசத்தில் வெள்ள கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு அதன் வடிகால் மேம்படுத்தப்படவுள்ளது.

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 275.0 மில். 2013அம் ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 212.93 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில் அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- தலவத்துகொட ஏரியினை தோண்டுதல் (ஏரியின் இறுதி) கட்டம் - II
- பறவைகள் பூங்கா – மாதிவெல வடிகால் மேம்படுத்தல் கருத்திட்டம்
- கிம்புலாவெல முன்மொழியப்பட்ட ஏரி தோண்டுதல் மற்றும் நிலத்தோற்ற அபிவிருத்தி
- பாராளுமன்ற மேல்நிலைப் பிரதேச ஏரி மற்றும் அதன் சுற்றுப்புற அபிவிருத்தி
- பாராளுமன்ற மேல்நிலை சதுப்பு நில மற்றும் அதன் சுற்றுப்புற அபிவிருத்தி
- பாராளுமன்ற மேல்நிலை அபிவிருத்தி மற்றும் நிலத்தோற்ற பணி மேம்படுத்தல்
- பாராளுமன்ற மேல்நிலை மட்டப்படுத்தல் அபிவிருத்தியும் நிலத்தோற்றம் அமைத்தலும்
- தலவத்துகொட ஏரி மற்றும் அதன் சுற்றுப்புற அபிவிருத்தி
- ரம்பலவத்த ஏரி மற்றும் அதன் சுற்றுப்புற அபிவிருத்தி
- தியவன்ன ஏரியும் நாகஹமுல்ல மேல்நிலை ஏரி மணல் அகற்றுதலும் நிலத்தோற்றம் அமைத்தல் பணியும்
- தலவத்துகொட முன்மொழியப்பட்ட அபிவிருத்தி பிரதேசம் ஊடான கால்வாயினை தோண்டுதல்
- கிரிஎல வாய்க்காலினை தோண்டுதல்
- முன்மொழியப்பட்ட வெளிவிவகார அமைச்சுக்கான கட்டடத்தொகுதியின் வடிகால் மேம்படுத்தல்

**<u>கிம்புலாவெல முன்மொழியப்பட்ட ஏரி தோண்டுதல் மற்றும் நிலத்தோற்ற அபிவிருத்தி</u>**






## 5 முதுன் எல, களனி மற்றும் பேலியகொட பிரதேசத்தில் மண் அகற்றுதல் உள்ளடங்கலாக வடிகால் மேம்படுத்தலும் கால்வாய் பராமரிப்பு பணியும்

முதுன் எல, களனி மற்றும் பேலியகொட பிரதேசம் பாரிய மழைவீழ்ச்சியின்போது பல வருடங்களாக மழை நீர் வெள்ளப்பெருக்கிற்கு உள்ளாகின்றது. இது கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நிகழும் துரித அபிவிருத்தியுடன் பல வருடங்களாக இடம்பெற்றுவரும் முறையற்ற அபிவிருத்தியின் காரணமாக பிரதானமாக இடம்பெறுகின்றது. கொழும்பிற்கு அருகாமையிலும் அதே போன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள இப்பிரதேசம் உயர் வர்த்தக பெறுமதியினைக் கொண்டதாகும். எனவே இப்பிரதேசத்திற்கு வடிகால் மேம்படுத்தல்களை அமுலாக்குவதனூடாக அநேகமான காணிகள் அபிவிருத்தி செய்யப்படலாம்.

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 50 மில். 2013ஆம் ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 120.63 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில்

அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- ஹேனமுல்ல வீடமைப்பு திட்டத்திற்கு பின்னாலுள்ள வாய்க்காலின் மண் அகற்றுதல்
- மானெல்வத்த, பியகம, களனி, பொல்லாகல விகாரைக்கு அருகாமையில் தற்போது காணப்படும் ஏரியின் மேம்படுத்தல் பணி மட்டக்குளிய கிம்புலாஎல இல் மண் அகற்றுதல்
- பேலியகொட கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் இருமருங்கிலும் ஏரி அபிவிருத்தி
- முதுன் எல, களனி மற்றும் பேலியகொட பிரதேசத்தில் நிலத்தோற்ற மேம்பாடும் கால்வாய்வலைப்பின்னல் அபிவிருத்தியும்.
- ஹெய்யாந்துடுவை தெ
- ன் ஏரியில் மணல் அகற்றுதல்

<u>மட்டக்குளி கிம்புலஎல இல் மணல் அகற்றுதல்</u>






<u>களனி வெதமுல்ல ஏரி மணல் அகற்றுதல்</u>





<u>ஹெய்யாந்துடுவை தென் ஏரியில் மணல் அகற்றுதல்</u>





**6 கொத்தலாவெல பாதுகாப்புக் கல்லூரி வளாகத்திலுள்ள கந்தவெல பிரதேச ஏரியில் நீர் தேக்கி வைக்கும் கொள்ளளவை அதிகரிப்பதற்கு மணல் அகற்றுதலும் சுத்தப்படுத்தலும்.**

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் நீர் தேக்கி வைக்கும் கொள்ளளவினை அதிகரிப்பதும் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்குவதை குறைப்பதும் அத்துடன் சூழல் நட்புமிக்க சுற்றுப்புறத்தினை உருவாக்குவதுமாகும்.

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 20.0 மில். 2013ஆம் ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 53.44 மில். ஆகும்.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கருத்திட்ட விடய குறிக்கோள்களில் அடையாளப்படுத்திய உப பணிகள் பின்வருமாறு.

- கொத்தலாவெல பாதுகாப்புக் கல்லூரி வளாகத்திலுள்ள கந்தவெல பிரதேச ஏரியில் நீர் தேக்கி வைக்கும் கொள்ளளவை அதிகரிப்பதற்கு மணல் அகற்றுதலும் சுத்தப்படுத்தலும்.
- கந்தவெல பிரதேசத்தில் நிலத்தோற்ற பணி மேம்படுத்தலும் கால்வாய்வலையமைப்பு அபிவிருத்தியும்





**7 முன்மொழியப்பட்ட அகுரேகொட பாதுகாப்பு தலைமை அலுவலகத்திற்கான செல்லும் வழி!டே நீர் தேக்கி வைத்தல் அளவினை வசதிப்படுத்தவதற்கு பாராளுமன்ற மேல் நிலை நீரேந்து பகுதி வடிகால் மேம்படுத்தல்**

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் நீர் தேக்கி வைக்கும் அளவு குறைப்பினை ஈடு செய்வதற்காக மணல் அகற்றுவதன் மூலம் 3 ஏரிகளை உருவாக்குவதும் இதனூடாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்ற வீதியிலிருந்து ஆரம்பித்து அகுரேகொடைக்கு சதுப்பு நில பிரதேசத்தினூடாக உருவாகும் வழியின் மூலம் காரணமாகின்ற வெள்ளப்பெருக்கிலிருந்து பிரதேசத்தினை பாதுகாத்தல்

மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 105.0 மில். 2013ஆம் ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 34.95 மில். ஆகும்.

## திறைசேரி அளிப்பு கருத்திட்டங்கள்

## கால்வாய் பராமரித்தல்

1. **கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பிரதான கால்வாய்களையும் மற்றும் சிறிய கால்வாய்களையும் பராமரித்தல்**
2. **முத்துராஜவெல ஹமில்டன் கால்வாய் பராமரித்தல்**
3. **தேக்கப் பிரதேசங்களை பராமரித்தலும் சட்டபூர்வமற்ற கட்டடங்களை அகற்றுதலும்.**

கொழும்பு நகரில் பிரதான கால்வாய் முறைமை 45 கி.மீ. நீளம் கொண்டதுடன் இது நீர்ப்பாசன திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு 1979 இல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டது. அத்துடன் பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம் கட்டம் I இன் கீழ் புனரமைக்கப்பட்டது. தியவன்ன ஓயா 1980 இல் ஏரியொன்றாக மாற்றப்பட்டதுடன் பராமரித்தலினை ஒழுங்குபடுத்துவதற்கான பொறுப்பு கூட்டுத்தாபனத்தினுடையதாகும்.

இதற்கு மேலதிகமாக 2001ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 20 கி.மீ. நீளம் கொண்ட கொழும்பு நகர பிரதேசத்தினுள் சில சிறிய கால்வாய்களையும் பராமரிப்பதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

ஹமில்டன் கால்வாய் பராமரிப்பு பணி (14.55 கி.மீ. நீளத்திற்கான) களனி கங்கையிலிருந்து நீர் கொழும்பு கடனீரேரிவரை மேற்கொள்ளப்படுகின்றது. கால்வாய்களை பராமரித்தலானது மேற்பரப்பு சுத்தப்படுத்தல, கால்வாய் மணல் மகற்றுதல், கபியோன் பெட்டிகளைப் பயன்படுத்தி கால்வாய் கரைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றுடன் தொடர்புபடுகின்றது.

2013ஆம் ஆண்டிற்காக மேற்குறித்த பணிக்காக திறைசேரி ரூபா 200 மில். தொகையினை ஒதுக்கீடு செய்துள்ளது. ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 208.74 மில். ஆகும்.

### 1. கொழும்பிழும் கொழும்புச் சுற்றுப்பறங்களிலுமுள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் சிறிய கால்வாய்களை பராமரித்தல்

### i. கொழும்பு வடக்கிலுள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் சிறிய கால்வாய்களை பராமரித்தல்

மஹவத்த கால்வாய்



செபஸ்ரியன் தெற்கு கால்வாய்



செபஸ்ரியன் தெற்கு கால்வாய்



தெமட்டகொட கால்வாய்



உத்தரானந்த மாவத்தை கால்வாய்



பிரதான வடிகால்



ii கொழும்பு தெற்கிலுள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் சிறிய கால்வாய்களை பராமரித்தல

தெஹிவளை கால்வாய்



தெகிவளை வடிச்சல்



வெள்ளவத்தை கால்வாய்



வெள்ளவத்தை வடிச்சல்



பொல்கொட கால்வாய்



கிருலபன கால்வாய்



**லுனாவ ஏரிமற்றும் கால்வாய் பராமரித்தல**

லுனாவ ஏரி மற்றும் கால்வாய் பராமரித்தலுக்கான 2013ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 12.6 மில். ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 5.04 மில். ஆகும்.






அதிட்டிய பிரதேசத்திலும் அதனைச் சூலவுள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்களில் மணல் அகற்றல்





கொழும்பு கிழக்கிலுள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் சிறிய கால்வாய்களை பராமரித்தல்

கொலன்னாவ கால்வாய்



ஹீன் எல கால்வாய்



கிருலப்பன கால்வாய்



டொரிங்டன் கால்வாய்

கோட்டை கால்வாய்









## 2. முத்துராஜவெல ஹமில்டன் கால்வாய் பராமரித்தல்

முத்துராஜவெல ஹமில்டன் கால்வாய் பராமரித்தலுக்கான 2013ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 60.08 மில். ஆற்றப்பட்ட பணியின் மொத்த பெறுமதி ரூபா 25.55 மில். ஆகும்





## 3. அதிகாரமளிக்கப்படாத கட்டடங்கள் மற்றும் நிரப்புதல்களை அகற்றுதல்

கொழும்பு நகரிலுள்ள அநேகமான கால்வாய் ஒதுக்கு பிரதேசங்களும் நீர் தேங்கும் பகுதிகளும் மக்களின் அத்துமீறல்களுக்குள்ளாகியுள்ளது. இதனால் இது முறையான வடிகால் முறைமையினை நேரடியாக பாதிக்கும். எனவே அத்தகைய சட்டத்திற்கு புறம்பான கட்டடங்கள் மற்றும் நிரப்புதல்களை அகற்றுவதற்கு கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

மேற்குறித்த கருத்திட்டத்தின் மிதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 50 மில். ஆகும். ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 53.8 மில். ஆகும்.











**<u>2013ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரின் பங்களிப்பு</u>**

கடந்த வருடங்களின்போது எமது கூட்டுத்தாபனம், கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நிகழ்ந்த மோசமான வெள்ளப்பெருக்கின்போது வெள்ளப் பெருக்கினை தடுக்கும் பணிக்காக இலங்கை கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் போன்ற ஆயுதப் படையினருடன் இணைந்து பணியாற்றுகின்றது.

அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய எமது கருத்திட்டமத்தில் ஆயுதப்படையினர் காலத்திற்கு காலம் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் விசேட சூழ்நிலைகளின் கீழ் பின்வரும் கடமைகளில் அவர்கள் பங்கேற்றனர்.

இலங்கை கடற்படை அதன் உயிர்காப்பு பதவியினருடன் கொழும்பு கால்வாயில் போக்குவரத்து வசதி வழங்களில் ஈடுபட்டது.

- அமைச்சின் கீழ் விசேட நிகழ்வுகள், எமது கருத்திட்டங்களின் கீழ் இவ் அபிவிருத்தி செய்யப்பட்ட நகர் பிரதேசங்களின் பணியினை நிறைவு செய்வதற்கும் முறையாக பராமரிப்பதற்குமான எமது இலக்குகளை நிறைவு செய்வதில் இலங்கை கடமற்படையினர் ஈடுபட்டனர்.
  கொடுப்பனவு அடிப்படையின் கீழ் 2011ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு வடக்கு கால்வாய் பராமரித்தலுக்காக சிவில் பாதுகாப்பு திணைக்களம் தமது படையினருடன் பராமரிப்பு பணியில் ஈடுபட்டதுடன் அவர்களால் ஆற்றப்பட்ட பணியின் உண்மையான பணியினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கான கொடுப்பனவுகளை நாம் வழங்கியுள்ளோம்.

## ஆராய்ச்சி மற்றும் வடிவமைத்தல் பிரிவு

### ஆலோசனை சேவைகள்

கூட்டுத்தாபனம், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்காக மழைநீர் வடிகால் அமைப்பு வடிவமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பு முதன்மைத் திட்டங்கள், கட்டடங்கள் மற்றும் பாலங்களுக்கான கட்டமைப்பு வடிவமைப்புக்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள்/ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கைகள் பேகான்றவற்றின் மீது ஆலோசனைப் பணிகளை பொறுப்பேற்கின்றது.

**பொறியியல் பொருட்கள் பரிசோதனை ஆய்வு கூடம்**

கூட்டுத்தாபனத்தின் பொறியியல் பொருட்கள் பரிசோதனை ஆய்வுகூடம், அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனம் ஆகிய இரண்டிற்கும் புவி-தொழினுட்ப ஆய்வுகள் நீரின் தரம், மண் பரிசோதனை, கொங்கிரீற்று சதுரங்கள் மற்றும் கற்களை உற்பத்தி செய்தல் மற்றும் நிர்மாணப்பிரதேசங்களில் நிர் அகற்றுதல் போன்ற பணிகளை பொறுப்பேற்கின்து. 2013ஆடி ஆண்டின்போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா 16 மில். ஆகும்.

**கட்டமைப்பு வடிவங்களும் நிர்மாண மேற்பார்வையும்.**

கட்டடங்கள், வீடமைப்புத் திட்டங்கள், பாலங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றுக்கான கட்டமைப்பு வடிவங்களை கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பதுடன் அவற்றுக்கான நிர்மாண மேற்பார்வையையும் பொறுப்பேற்கின்றது

**குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான வீடமைப்பு கருத்திட்டம், சலாமுல்ல - நகர அபிவிருத்தி அதிகார சபை**




சேரிகளை இல்லாதொழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை கருத்திற் கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை, மேற்குறித்த கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது குறைந்த வருமானமுள்ளவர்களை குடியமர்த்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்களுடன் கூடிய தொடர்மாடிகளை நிர்மாணிப்பதற்கான வழங்கியவுடன் பயன்படுத்தக்கூடிய கருத்திட்டம் ஒன்றாகும். இது 12 மாடிகளுடனான கட்டடத்தை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல், ஒவ்வொரு மாடியிலும் 33 தொடர்மாடி வீடுகளுடனான 18 தொடர் மாடி வீடுகளுடன் 01 கட்டடமும் (கட்டடம் ஏ) 02 கட்டடங்கள் (கட்டடம் பி மற்றும் சி) என்பவற்றினை உள்ளடக்குகின்றது. தொடர்மாடி மனைகளின் மொத்த எண்ணிக்கை 1008 ஆகும்.

கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புக்கள் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

**தலைமை அலுவலக கட்டடத்துக்கான புதிய பகுதி நிர்மாணித்தல்.**

கூட்டுத்தாபனம் அதன் தலைமை அலுவலகத்திற்கு புதிய கட்டட பிரிவொன்றினை சேர்க்க வேண்டியுள்ளது. கட்டடக்கலை, கட்டமைப்பு தயாரித்தல் மற்றும் சேவை வரைதல் அத்துடன் நிர்மாண மேற்பார்வை என்பன ஆராய்ச்சி மற்றும் வடிவமைத்தல் பிரிவிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆலோசனைச் சேவைக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 50.30 மில். ஆகும். இக்கருத்திட்டம் 2014 மார்ச் மாதமளவில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



**நிரந்தர பரிசோதனை தேசிய நிலையம் - அணுசக்தி அதிகார சபை**




இவ் ஒப்படைத்தவுடன் பயன்படுத்தக்கூடிய கருத்திட்டம் 4 மாடிக்கட்டடம் ஒன்று (கட்டடம் ஏ), தனி மாடி கொண்ட பரிசோதனை ஆய்வுகூடம் (கட்டடம் பி), 3 மாடிகளுடைய கட்டடம் (கட்டடம் சி) என்பவற்றை உள்ளடக்குகின்றது. கட்டடம் ஏ இற்கான கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்பு அத்துடன் நிர்மாண மேற்பார்வைக்கான எமது ஆலோசனைக்க கட்டணம் ரூபா 12 மில். கட்டடம் ஏ இன் சுப்பர் கட்டமைப்பு வடிவமைப்பு ஆனேகமாக பூர்த்தியடைந்துள்ளது. கட்டடம் பி இன் வடிவமைப்பு சேவைநாடியின் வேண்டுதலின் பேரில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**தொலைத்தொடர்பு ஒழுங்கபடுத்தல் ஆணைக்குழுவிற்கான கட்டடம், அம்பாந்தோட்டை**







இக்கட்டடத்திற்கான ஆலோசகராக கூட்டுத்தாபனம் நியமிக்கப்பட்டுள்ளது. இது 07 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றாவதுடன் மொத்த கருத்திட்ட செலவு ரூபா 2,379 மில். ஆகும். கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2013ஆம் ஆண்டிற்கான ஆலோசனைக் கட்டணம் ரூபா 30 மில். ஆகும்.

- **பொது வசதிகள் கட்டடம், பெலியத்த**



இக்கருத்திட்டம் கூட்டு விதம் ஒன்றின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இது 04 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றாகும். சேவை நாடி பெலியத்த பிரதேச சபையாகும். எனினும் கருத்திட்டத்திற்கு உள்ளூராட்சி அமைச்சினால் நிதியளிக்கப்படும். கருத்திட்ட செலவு ரூபா 570 மில். ஆகும். அத்துடன் 2013ஆம் ஆண்டிற்கான எமது ஆலோசனை கட்டணம் ரூபா 8 மில். கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புக்கள் அநேகமாக பூர்த்தியடைந்துள்ளன.

## வடிகால் வடிவமைப்புக்கள்

### கிண்ணியா நகரசபை எல்லைகளுக்கான மழைநீர் வடிகால் வடிவமைப்பு – கிண்ணியா நகர சபை

ரூபா 2.36 மில். ஆலோசனை கட்டணம் ஒன்றிற்காக மேற்குறித்த கருத்திட்டம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. வடிவமைத்தல் அநேகமாக நிறைவுபெற்றுள்ளது.

### இமதுவ நகர அபிவிருத்திக்கான வடிகால் வடிவமைப்பு - நகர அபிவிருத்தி அதிகார சபை

ரூபா 0.483 மில். ஆலோசனை கட்டணம் ஒன்றிற்காக மேற்குறித்த கருத்திட்டம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. வடிவமைத்தல் அநேகமாக நிறைவுபெற்றுள்ளது.

### கண்டி வில்லியம் கொபல்லாவ மாவத்த மேம்படுத்தல் - வீதி அபிவிருத்தி அதிகார சபை

ஆலோசனை கட்டணம் ரூபா 0.65 மில்.வடிவமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### தெற்கு அதிவேகப்பாதை ஹோமாகம, மாகும்புரள ன்ற இடத்தில் காணி அபிவிருத்தி பணி – ஓசீஎச் - வீதி அபிவிருத்தி அதிகார சபை

மேற்குறித்த கருத்திட்டத்தில் நீரியல் மற்றும் நீரியலின் போதியதன்மை பற்றி பரிசோதிப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்காக வழங்கப்பட்டது. எமது ஆலோசனை கட்டணம் ரூபா 0.71 மில். ஆகும். அத்துடன் வடிவமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கான காணி அபிவிருத்தி - பத்தரமுல்ல

மேற்குறித்த கருத்திட்டத்திற்கான எமது ஆலோசனை கட்டணம் ரூபா 05 மில். வடிவமைப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## திறைசேரி அளிப்பு கருத்திட்டங்கள்

### ஈரநிலங்கள் பிரகடணம்

மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் ஈரநிலங்கள் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வடமத்தி, ஊவா, சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலுள்ள ஈரநிலங்கள் அடையாளங் காணப்பட்டு வர்த்தமானியில் அறிவிப்பதற்காக தயார்படுத்தப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஈரநிலங்களும் இனங்காணப்பட்டு வருகின்றன. 2013ஆம் ஆண்டிற்கான திறைசேரி ஒதுக்கீடு ரூபா 0.5 மில். ஆகும்.

### களு ஓயா நதிப் படுக்கை நீர்மட்ட மற்றும் நீர்வெளியேற்றல் அளவீடுகள்

தரவுத்தளம் ஒன்றினை தயாரிப்பதற்காக நீர்மட்டங்களும் நீர்வெளியேற்றல் அளவீடுகளும் எடுக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் வடிகால் ஆய்வுகளை முன்வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அமுல்படுத்தப்படவுள்ள மழைநீர் வடிகால் மேம்படுத்தல் கருத்திட்ட நிகழ்விலும் பயன்படுத்தக்கூடியது.

### வேரஸ் கங்கை நதிப் படுக்கை நீர்மட்ட மற்றும் நீர்வெளியேற்றல் அளவீடுகள்

வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட மாதிரியினை சரிபார்ப்பதற்காக தரவுத்தளம் ஒன்று தயாரிப்பதற்காக நீர்மட்டங்களும் நீர்வெளியேற்றல் அளவீடுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**நானாவித வடிகால் வடிவமைப்புக்கள்**

வடிகாலமைப்பு மற்றும் மீட்டல் பிரிவினால் கையாளப்பட்ட வாட்டர்ஸ் எட்ஜ் மற்றும் கிம்புலாவெல பிரதேசங்களில் திறைசேரியினால் நிதியளிக்கப்பட்ட அனைத்து பணிகளுக்குமான வடிகாலமைப்பு வடிவமைத்தல்கள் ஆராய்ச்சி மற்றும் வடிவமைத்தல் பிரிவினால் தயாரிக்கப்பட்டன.

**விசேட கருத்திட்டங்கள் பிரிவு**

2013ஆம் ஆண்டிற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட இலக்குகளை அடைவதற்கு விசேட கருத்திட்டங்கள் பிரிவு கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவில் பங்களிப்புச் செய்துள்ளது. நானாவித கருத்திட்டங்களைத் தவிர விசேட கருத்திட்டங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் பின்வருவனவாகும்.

- வெள்ளத் தடுப்பு தொடர்பில் விசேட கருத்திட்டங்களை முன்னெடுத்தல்
- நீரியலினை அடிப்படையாகக் கொண்டு காணி அபிவிருத்தி முன்மொழிவுகளை வழங்குதல்
- சட்டத்திற்கு புறம்பாக காணி நிரப்புதலை கட்டுப்படுத்ததல்

மேற்குறித்த செயற்பாடுகள் உள்ளூர் சமூகத்திற்கு பல நன்மைகளை அளித்தது. எனினும் ஈரநிலங்களை பாதுகாத்தல் மற்றும் காப்பளித்தலுக்கான தேவை அண்மைக்காலம் வரை முன்னுரிமையளிக்கப்படாமல் இருந்தது. வெள்ளநீர் தேக்கிவைத்தல் தர மேம்பாடு, உயிர் பல்லினத் தன்மை போன்றவற்றினை நோக்கிய ஈரநிலங்களின் பங்களிப்பு முக்கியத்துவத்தினை கூட்டுத்தாபனம் தற்போது உணர்ந்துள்ளது. புதிய ஈரநில முகாமைத்துவ பிரிவொன்று கூட்டுத்தாபனத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

**விசேட கருத்திட்டங்கள்**

இரண்டு பிரதான வெள்ளத்தடுப்பு கருத்திட்டங்கள் 2011இல் ஆரம்பிக்கப்பட்டன, அவை வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம் மற்றும் கொழும்பு மாநகர நகர அபிவிருத்தி கருத்திட்டம் என்பனவாகும். அவை 2013ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

**வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்**

கொழும்பு மற்றும் புறநகர் பிரதேசங்களில் துரித நகரமயமாக்கம் திட்டமிடப்படாத காணி நிரப்புதலுக்கு பங்களிப்புச் செய்கின்றது. அண்மையில் மழை காலத்தின்போதான பாரிய வெள்ளப்பெருக்குடன் இப்பிரச்சினை வருடாவருடம் மிகமோசமாக அதிகரித்து வருகின்றது. கொழும்பு மாநகர பிராந்தியத்திற்காக அனைத்தையும் உள்ளடக்கிய முதன்மை திட்டமொன்றினை ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் அணியின் உதவியுடன் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தயாரித்தது. இவ் வடிவமைப்பு வடிவமைத்தல் ஆராய்ச்சியில் அதிகமான சாத்தியப்பாட்டு ஆய்வுகள், வெள்ளத்துடப்பிற்காக பொல்கொடை உபநீரேந்து பகுதியின் வேரஸ் கங்கை நதிப்படுக்கைக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தின. இதற்கேற்ப மேற்குறித்த கருத்திட்டம் 2011இல் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் வெள்ளத்தடுப்பாகும். இக்கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளாவன:

- தற்போது காணப்படுகின்ற கால்வாய் வலைப்பின்னல்களை அகலமாக்குதல்
- கரையோப் பாதுகாப்பு
- வெள்ளநீர் தேக்கி வைக்கும் ஏரிகள் ஒதுக்கீடு
- தற்பொது காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் மற்றும் பாலங்களை மேம்படுத்தல்
- புதிய கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்

முழுக் கருத்திட்டமும் பல கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கட்டம் I நுகேகொடை ரத்னபிட்டி கால்வாய், பொரலஸ்கமுவ வடக்கு மற்றும் தெற்கு கால்வாய்கள், மகாஎல பொல்கொடை கால்வாய் மற்றும் வேரஸ் கங்கையின் மணல் அகற்றுதல் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இக்கருத்திட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனம் ஆகும்.

மொத்த கருத்திட்ட பெறுமதி ரூபா 14,227 ஆயிரம் மில். அத்துடன் இந்நிதியினை திறைசேரியின் அனுமதியுடன் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடன் ஒன்றாக பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும் கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டில் திறைசேரி அளிப்பு ஒன்றாக ரூபா 400 மில். வழங்கப்பட்டது. இது காணி பெற்றுக் கொள்ளல் (ரூபா1400 மில்.) இனையும் உள்ளடக்குகின்றது. பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் வழங்குவதற்காக விசேட நட்டஈட்டுப் பொதி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கருத்திட்ட அமுலாக்கல் மற்றும் நட்டஈடு அளித்தலுக்காக அமைச்சரவை அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் புவி தொழினுட்பவியல் ஆராய்ச்சி 2012இல் நிறைவுசெய்யப்பட்டது.

அனைத்து அவசியமிக்க அனுமதிகளும் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் 2013இல் கட்டம் I ஆரம்பிக்கப்பட்டது.

நிர்மாணங்களுக்காக பொருத்தமான ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கு 2013ஆம் ஆண்டில் போட்டி கேள்வி மேற்கொள்ளப்பட்டது. 3056 மீ. நீளமுள்ள நுகேகொடை ரத்னபிட்டிய கால்வாய் மேம்படுத்தல் 2013 ஆம் ஆண்டு முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டதுடன் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. 2013இன் இறுதியளவில் அந்நீளத்தின் 12% பூர்த்தி செய்யப்பட்டது. இது கால்வாய் மணல் அகற்றுதல் மற்றும் கபியோன் சுவர் நிர்மாணங்களையும் உள்ளடக்ககின்றன. 2013, டிசம்பர் இறுதியளவில் ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா 330 மில். ஆகும்.

### நுகேகொடை-ரத்னபிட்டிய கால்வாய் நெடுங்கிலும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு வீதியில் கபியோன்

### நிர்மாணித்தல் நுகேகொடை-ரத்னபிட்டிய கால்வாய்





வெள்ளத்தடுப்பினைத் தவிர பொழுதுபோக்கு செயற்பாடுகள் அத்திட்டிய பறவை சரணாலயத்தை மீளமைத்தல், நீரின் மூலம் பரவும் நோய்களைத் தடுத்தல் போன்ற ஏனைய நேரடியற்ற நலன்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. சாத்தியப்பாட்டு ஆய்வு முழுக் கருத்திட்டத்தினையும் முடிவுறுத்தும்போது சூழவுள்ள காணிகளின் பெறுமதி அதிகரிக்கும் என்பதனை காட்டுகின்றது.





**பொரலஸ்கமுவ சதுப்பு நிலத்தில் ஏரி மணல் அகற்றுதல்**

கட்டத்தினை 3 ½ வருடத்தினுள் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் மாதிவெல தெற்கு திசை மாற்றுதல், ரத்மலான, மொரட்டுவை மேம்படுத்தல்கள் போன்ற ஏனைய மேம்பாடுகள் பின்னர் மேற்கொள்ளப்படும்.

## ஏனைய நானாவிதக் கருத்திட்டங்கள்

**கொலன்னாவ மழைநீர் வடிகால் கருத்திட்டத்தினை அமல்படுத்தல்**

கொலன்னாவை, களனி ஆற்றிலிருந்து வடிந்தோடும் நீரிலிருந்து பாதுகாக்கப்படாத பிரதேசமாக காணப்படுகின்றது. ஆனால் தற்போதைய நிலையின்படி சட்டத்திற்க புறம்பான காணி நிரப்புதல் மற்றும் அத்துமீறல்கள் காரணமாக தற்கோது காணப்படுகின்ற கால்வாய் வலைப்பின்னலில் பல ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன. வடிகால் முறைமை குறைபாடுகள் காரணமாக சிறிய மழைவீழ்ச்சியின்போது களனி கங்கையின் குறைந்த நீர்மட்டத்திலும் சில பிரதேசங்கள் நீரில் மூழ்குகின்றன. அனைத்தையும் உள்ளடக்கிய வடிகால் பற்றிய ஆய்வுகள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு இந்நிலைமையினை சீர் செய்வதற்கான பரிகார நடவடிக்கைகள் முன்மொழியப்படும்.




**திட்டமிடப்படாத நகர அபிவிருத்தி**




**சட்டத்திற்கு புறம்பாக காணி நிரப்புதல்**




களனி கங்கையின் குறைந்த நீர்மட்டத்தினை கருத்திற்கொண்டு மழைவீழ்ச்சி நிகழ்வுகளின் 10 வருட காலத்திற்காக முறையான வடிகாலமைப்பு முறைமையொன்று வடிவமைக்கப்படும். கால்வாய் கொள்ளளவுகளை அதிகரித்தல், கல்வெட்டுக்கள் மற்றும் பாலங்களை மேம்படுத்தல், கால்வாய் எல்லைகளை தாபித்தல் மற்றும் நீர்தேக்கி வைக்கும் பிரதேசங்களை பிரகடனப்படுத்தல் எனபன மூலம் வடிகால் மேம்படுத்தல் மேற்கொள்ளப்படும். அத்துடன் களனி ஆற்றின் உயர் வெள்ள மட்டங்களில் நீர் இறைப்பு நிலையங்களை தாபிப்பது பற்றிய சாத்தியப்பாட்டினையும் அடையாளப்படுத்தும்

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள நீரேந்து பகுதி 1412 ஹெக்ரயர் ஆகும். இது கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவினை உள்ளடக்குகின்றது. இனங்காணப்பட்ட கால்வாய் முறைமை, 12 கி.மீ நீளமான பிரதான கால்வாய்கள் மற்றும் 14 கி.மீ. நீளமான இரண்டாம் நிலைக் கால்வாய்களை உள்ளடக்குகின்றது.

பூர்வாங்கப்பணி 2012 செப்டம்பர் தெடக்கம் 2012 டிசம்பர் வரையான காலப்பகுதியின்போது நிறைவு செய்யப்பட்டதுடன் கால்வாய் முறைமையின் அளவீட்டுப் பணி 2012 ஆகஸ்ட் மாதத்தில் கிட்டத்தட்ட

நிறைவுபெற்றது. வடிகால் வடிவமைப்பு பணி 2013 ஜ<sup></sup>லை மாத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் 2014இன் ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்திசெய்யப்படும் . இவ் வடிவமைத்தல் பணி, எம்ஜகேஈ 11 இனைப் பயன்படுத்தி வெள்ள மாதிரி தயாரித்தல் மற்றும் கால்வாய் வலைப்பின்னல் வடிவமைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. வடிவமைப்பு பணி நிறைவு செய்யப்பட்ட பின்னர் 2016 ஆம் ஆண்டு கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



மட்டக் குறியீட்டுப் பரிசோதனை



வேலைப்பிதேச மட்ட அளவீட்டு

அளவீட்டுப்பணி மற்றும் மண் ஆய்வு உள்ளடங்கலாக விரிவான வடிவமைப்பின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 112 மில். ஆகும். சிவில் பணிக்கான கருத்திட்ட செலவு காணி பெற்றுக் கொள்ளல் செலவு நீங்கலாக ரூபா 4500 மில். ஆக இருக்கும். காணி பெற்றுக் கொள்ளலுக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 1000 மில். இப்பிரதேசத்தில் நிலவுகின்ற வெள்ள நிலைமையின் காரணமாக மேற்பரப்பு சுத்தப்படுத்தல் மற்றும் தற்போதுள்ள கால்வாய் முறைமையில் மணல் அகற்றுதல் போன்ற அவசியமான பராமரிப்பு வேலைகள் இவ்வாண்டிலும் அடுத்த ஆண்டிலும் மேற்கொள்ளப்படும். பராமரித்தலுக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 200 மில். ஆகவிருக்கும். அடுத்த 4 வருடங்களுக்காக கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 5612 மில். ஆகும்.

2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மட்ட அளவீட்டுப் பணியின் பெறுமதி ரூபா 1.973 மில். பிரதேசத்தின் மீது மட்ட அளவீடு அடையாளப்படுத்தல் ரூபா 0.043 மில். ஆகவிருந்தது, மாதிரி வடிவமைப்பு பணி ரூபா 1.456 மில். ஆகவும் அளவீட்டு பரிசோதனை மற்றும் பிரதேசத்திற்கு விஜயம் செய்தல் ரூபா 0.638 மில். ஆகவும் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின்பொது ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய தொகை ரூபா 4,110 மில். ஆகவிருந்தது

## நீரியல் பொறியியலினை அடிப்படையாகக் கொண்டு காணி அபிவிருத்தி முன்மொழிவுகளை வழங்குதல்

அரைவாசிக்கு மேற்பட்ட மனித குலத்தினர் தற்போது நகர் பிரதேசங்களில் வாழ்வதுடன் இது முறையான வடிகால் முறைமையினை வழங்காது அனுமதியற்ற அபிவிருத்திகளை தோற்றுவிக்கின்றது. இது விசேடமாக தாழ்ந்த பிரதேசங்களில் அடிக்கடி வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்துகின்றது. எனவே நீரியல் பொறியியலுக்கமைய முறையான வடிகால் முறைமையினை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும்.

திட்டமிடல் குழுவினால் அனுமதிக்கப்பட்ட வடிகால் நிபந்தனைகளை அமுலாக்குவதற்குட்பட்டு தாழ்நில அபிவிருத்திக்காக வடிகால் முன்மொழிவுகள் அனுமதிகளை வழங்குவதனூடாக விசேட கருத்திட்ட பிரிவு இப்பண்யினை மேற்கொண்டு வருகின்றது. இப்பிரிவு 2013 ஆம் ஆண்டின்போது காணி சுத்தப்படுத்தலுக்காக ரூபா 5.3 மில். தொகையினைப் பெற்றுக் கொண்டது.

காணி அபிவிருத்திக்கான கூட்டுத்தாபனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் நெல் வயல்களை அபிவிருத்தி செய்தல் இணங்கி கோவையொன்றினைத் திறப்பதற்கும் முன்னெடுத்தச் செல்வதற்கும் கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தொகை மதிப்புக்களைக் கொண்டு வழங்கிய வேண்டுதல் கடிதத்திற்கமைய கருத்திற் கொள்ளப்படக் கூடியதாகும். நெல் வயல்கள் அல்லாத காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக கோவைகள் விண்ணப்பதாரிகளினால் திறக்கப்படலாம் (தனியார் ஆதனம்) என்பதுடன் திட்டமிடல் குழுவின் தீர்மானம் குறித்த விண்ணப்பதாரிக்கு அனுப்பப்படும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் சம்மதமும் அவசியமான அனுமதிகளை வழங்குவதற்காக திட்டமிடல் குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

## கொழும்பு மற்றும் ஏனைய உப நகர பிரதேசங்களின் ஈரநில முகாமைத்துவம்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் பன்முக ஒழுங்கு ஒன்றனை வழங்குவதனூடாக மானிட வாழ்க்கை மற்றும் ஜீவனோபாயத்தை நிலைப்படுத்துவதற்கு உதவியளிக்கின்ற மிகவும் முக்கிய இயற்கை சூழலியல் முறைமைகளில் ஒன்று ஈரநிலங்கள் ஆகும். கொழும்பு மற்றும் அதன் புறநகர் பிரதேச நகரங்களின் துரிதமான நகரமயமாக்கல் நகரங்களுக்குள்ளும் அதனைச் சூழவுமுள்ள ஈரநில பிரதேசங்கள் கனிசமானளவு அபிவிருத்தி செய்யப்படுவதற்கு வழிவகுத்துள்ளது. இவ்வாறு தேசிய அபிவிருத்தியுடனான பாதகமான பின்னோக்கிய நகர்வு மிக முக்கியமானதாகும். ஈரநிலங்கள் மூலம் உருவாக்கப்படும் பொருளாதார நலன்கள் கருத்திட்ட மற்றும் கொள்கை மரபு ரீதியான செலவு நலன் பகுப்பாய்வுகளில் கருத்திற் கொள்ளப்படாததுடன் மதிப்பளிக்கப்படாமலும் காணப்படுகின்றது.



**தலவதுகொட சதுப்புநிலம்**

பாரிய கொழும்பு நீரேந்து பிரதேசத்தினுள் உள்ள ஈரநிலங்களுக்கான ஈரநில முகாமைத்துவ திட்டம் ஒன்று முதலாவதாக உருவாக்கப்பட் வேண்டியுள்ளது.

நிலைத்திருக்கத்தக்க தெரிவொன்றினை இனங்காணும் பொருட்டு உயிர் பல்லின மற்றும் உள்ளூர் சமூகங்களின் சமூக பொருளாதார அந்தஸ்து என்ற தலைப்பின் கீழ் கொழும்பு ஈரநிலங்கள் பற்றிய ஆய்வொன்று செய்யப்பட வேண்டியுள்ளது.

ஆரம்பத்தில் பாரிய கொழும்பு பிரதேசம் 380 ஹெக்ரயர் பரப்பினை கொண்டிருந்தது. ஆனால் தற்போது அது 287 ஹெக்ரயர் ஆக குறைவடைந்துள்ளது.

கொலன்னாவ சதுப்பு நிலம், கோட்டை சதுப்பு நிலம் மற்றும் ஹீன் எல சதுப்பு நிலம் என்பன கொழும்பு பெருநகர நகர ஈரநிலங்காளக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இச்சதுப்பு நிலங்களுக்கான ( மதினாகொடை மற்றும் யக்கபெத்த சதுப்பு நிலங்கள் உள்ளடங்கலாக) ஈரநில முகாமைத்துவ திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னர் சூழலியல் முறைமை மற்றும் உயிர் பல்லினத் தன்மை பற்றிய விடயங்களில் ஆய்வொன்று மேற்கொள்ளப்படும். ஈரநில முகாமைத்துவம் பற்றி அனைத்து தரப்பினருக்கும் பல்வெறு விழிப்பணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தலவத்துகொட பிரதேசத்தில் உயிர் பல்லினத் தன்மை பூங்காவொன்றினைத் தோற்றுவித்தல், முன்னோடி ஈரநில முகாமைத்துவ கருத்திட்டம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இது உயிர் பல்லினத் தன்மை, பறவைகளை கண்டுகளித்தல் கோபுரம், நீர் தர பரிசோதனை அமைவிடங்கள் (பிரதேசத்திற்குரிய தாவரங்கள் மற்றும் நீரியல் உயிரினங்கள் உள்ளடங்கலாக தேக்க ஏரிகள்) படகு தளம் மற்றும் பாலங்கள் போன்றவற்றுக்கான ஆய்வு நிலையம் ஒன்றினையும் கொண்டிருக்கும்.






உயிர் பல்லின தன்மை பூங்காவினைச் சுற்றி பறவைகள் திரளுதல்






நீர் தர பரிசோதனைக்காக நிலையான கிணறு

நானல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்



**மீள ஆரம்பித்தல் நிகழ்ச்சித்திட்ட வரையறை**

கடந்த பல வருடங்காளாக பெற்றுக் கொள்ளப்பட்ட நீர் தேங்கு பிரதேசங்கள் அனைத்து வகையான மக்களாலும் அத்துமீறலுக்குள்ளாகியிருந்தது. இதனால் எல்லைகளை மீள ஆரம்பித்தலுக்கான அளவீட்டுப் பணி 2013இல் ஆரம்பித்தது.

## கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்தி கருத்திட்டம்

கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் இலக்கு கொழும்பு பெரநகர் பிராந்தியத்தில் வெள்ளத்தின் பௌதீக, சமூக, பொருளாதார தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் முன்னுரிமை உள்ளூர் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்தல் ஊடாக இலங்கை அரசாங்கத்தின் முன்னெடுக்கப்படும் நகர மீள் கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்வதாகும். கருத்திட்ட விடயம், 4 நகர உள்ளூர் அதிகார சபைகளை உள்ளடக்கும். அவை கொழும்பு மாநகர சபை, தெகிவளை கல்கிசை மாநகர சபை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை மற்றும் கொலன்னாவை மாநகர சபை என்பனவாகும். கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் மொத்தச் செலவு அ.டொ. 223 மில். ஆகும். இது உலக வங்கியின் மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி அத்துடன் இலங்கை அரசாங்கம் என்பவற்றினால் இணைந்து நிதியளிக்கப்படும். கருத்திட்டம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் முகாமை செய்யப்படவுள்ளதுடன் கருத்திட்ட அமுலாக்கல் பொறுப்பு

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியவற்றிடம் காணப்படுகின்றது. கருத்திட்டம் 2012 ஏப்ரல் மாதம் ஆரம்பித்து 2017 ஜுன் மாதம் அளவில் பூர்த்தியடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்தி கருத்திட்டம், 3 முக்கிய கூறுகளை உள்ளடக்குகின்றது. முதலாவது கூறு, வெள்ள மற்றும் வடிவமைப்பு முகாமைத்துவம் அத்துடன் உயர் சமூக பொருளாதார செலவுகளுடன் கொழும்பு பெருநகர் பிராந்தியத்தின் பொருளாதாரத்தினை கிரமமாக முடமாக்குகின்ற நகர வெள்ளப்பெருக்குடன் தொடர்புடைய அவசரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் என்பவற்றின் மீது கவனம் செலுத்தும். இரண்டாவது கூறு கருத்திட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான நகர அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு புனரமைத்தல் மீது கவனம் செலுத்தும். மூன்றாவது கூறு கருத்திட்ட அமுலாக்கல் முகவர் நிலையங்களுக்கான அமுலாக்கல் உதவியளித்தலினை உள்ளடக்ககின்றது.

**கூறு 1: வெள்ள மற்றும் வடிகால் முகாமைத்துவம்**

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைமையிலான முகவர் நிலையங்களுக்கிடையிலான வெள்ளத்தடுப்பு கடமை அணியின் முன்னுரிமையளிக்கப்பட்டு இனங்காணப்பட்ட வெள்ள மற்றும் வடிகால் முகாமைத்துவ உட்கட்டமைப்பின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கு முன்னுரிமை உதவியினை இக்கூறு வழங்குகின்றது. இக்கூறின் கீழான முதலீட்டுப் பொதி கொழும்பு நீர் நதிப்படுக்கைகளின் நீரேந்து பகுதிகளில் எதிர்கால வெள்ளப்பெருக்கின் தாக்கத்தினைக் குறைப்பதற்கு அவசியமானதும் முக்கியமானதுமாகும். கட்டமைப்பு முதலீடுகளில் அநேகமானவை முதனிலை மற்றும் இரண்டாம் நிலை கால்வாய் முறைமையினை மேம்படுத்தல், நீர் தேங்கு பிரதேசங்கள் கொழும்பு நீர் நதிப்படுக்கையின் வடிவமைப்பு மேம்படுத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொள்ளும். ஒருங்கிணைக்கப்பட்ட வெள்ள முகாமைத்துவ முறைமை ஒன்றினை உருவாக்குதலும் நீர் நிலைகளின் பொருளாதார பெறுமதி மற்றும் அழகுபடுத்தலினை அதிகரிப்பதற்குமான தலையீடுகளிலும் உதவியளிக்கப்படும்.

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கால்வாய்கள் மற்றும் ஏரிகளை மேம்படுத்தலும் அத்துடன் வெள்ள மற்றும் வடிகால் முகாமைத்துவ உபகூறுகளுக்கான கொள்ளளவு அதிகரித்தலும் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். இவ்விரு உபகூறுகளுக்குமான மொத்த செலவு ஒதுக்கீடு அ.டொ. 107.9 மில். ஆகும்.

கொழும்பு பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு, பலத்த மழை, கெள்ளளவு குறைந்த பேரின வடிகால் முறைமை மற்றும் நீர் எடுத்துச் செல்வதற்கு குறைவான கொள்ளளவு, வடிச்சல் கொள்ளளவு போன்றவற்றினால் தோற்றுவிக்கப்படுகின்றது. கடந்த தசாப்தத்தில் நதிப்படுக்கை கொள்ளளவு, கட்டுப்படுத்தப்படாத காணி நிரப்புதல், சட்டத்திற்கு புறம்பான குடியிருப்பாளர்களினால் சமவெளியில் அத்துமீறல்கள் போன்ற காரணத்தினால் சுமார் 30 % இனால் குறைந்துள்ளது. நீர் கொண்டு செல்லல் கொள்ளளவும் திடக்கழிவுகள், மிதக்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் கால்வாய்களில் காணப்படும் ஒடுக்கமடான பகுதி போன்றவற்றினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. களனி ஆற்றின் வடிச்சல், பலத்த மழை மற்றும் களனி கங்கையின் உயர்மட்டம் அதிகரிப்பு ஒரே நேரத்தில் நிகழ்வதினால் மேலும் மட்டுப்படுத்தப்படுகின்றது. அனைத்து தாக்கங்களும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தின் காரணமாக மேலும் மோசமடையும். அதாவது மழைவீழ்ச்சிப் போக்கு முறைமையில் பாரியளவிலான பழுவினைக் காண்பிப்பதுடன் கடல்மட்டம் உயருதல் வடிகாலமைப்பு முறைமையினை தடைப்படுத்துகின்றது.

| இல | பொதியின் தலைப்பு | பொதி இல | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | தெகிவளை கால்வாய் புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/01 | கருத்திட்டம் அமுலாக்கல் மட்டத்திலுள்ளது |
| 2 | பிரதான வடிகால், அளுத் மாவத்தை கல்வெட்டு, மோதரை சதுர வடிகால், சுரங்க உள் மற்றும் வெளி வாயில்கள் புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/02 | கருத்திட்டம் அமுலாக்கல் மட்டத்திலுள்ளது |
| 3 | வெள்ளவத்தை கால்வாய் புனரமைத்தல் மற்றும் காலி வீதி பாலத்தில் வெள்ளவத்தை கால்வாய்க்கான நீர் வழி மேம்படுத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*07/ஏ* | வடிவமைப்பு – அனேகமாக பூர்த்தியடைந்துள்ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை பணிப் பொதியொன்றாக கேள்வி கோருவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. |
| 4 | புனித செபஸ்ரியன் தெற்கு கால்வாயை புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*03/ஏ* | வடிவமைப்பு - 100% பூர்த்தியடைந்துள்ளது<br>பெறுகை ஆவணங்கள் - 100% பூர்த்தியடைந்துள்ளது<br>மீள்குடியேற்றல் பூர்த்தியடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 5 | புதிய மோதரை சுரங்கவழி வடிவமைப்பும் நிர்மாணிப்பும் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*14* | அலங்கரித்தல் ஆய்வுகள் - 100% பூர்த்தியடைந்துள்ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை<br>வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஒப்பந்ததாரர்களுக்கான முன்தகைமை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன |
| 6 | டொறிங்கடன் சுரங்கவழி வடிவமைப்பும் நிர்மாணிப்பும் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*17* | அலங்கரித்தல் ஆய்வுகள் அனேகமாக பூர்த்தியடைந்துள்ளது.<br>வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஒப்பந்ததாரர்களுக்கான முன்தகைமை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன |
| 7 | மாதிவெல கிழக்கு திசைமாற்றுத் திட்டத்திற்கான மேம்படுத்தல்கள்: கட்டம் I | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*05* | வடிவமைப்பு - 50% பூர்த்தியடைந்துள்ளது |
| 8 | புனித செபஸ்ரியன் தெற்கு புதிய திசைமாற்றத்தினை நிர்மாணித்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*13* | வடிவமைப்பு - 25% பூர்த்தியடைந்துள்ளது<br>திசைமாற்று வழி நிறைவுசெய்யப்பட வேண்டியுள்ளது |
| 9 | புனித செபஸ்ரியன் வடக்கு கால்வாய் நிர்மாணித்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*09* | வடிவமைப்பு - 95% பூர்த்தியடைந்துள்ளது<br>பெறுகை ஆவணங்கள் - 60% பூர்த்தியடைந்துள்ளது<br>காணி பெற்றுக் கொள்ளல் முன்னெடுக்கப்படுகின்றது.<br>மீள்குடியேற்றல் 2013 டிசம்பர் மாதம் இடம்பெற எதிர்பார்க்கப்படுகின்றது |
| 10 | 6ஆம் இலக்க மற்றும் 7ஆம் இலக்க ஏரிகளை உருவாக்கல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*06* | வடிவமைப்பு - 70% பூர்த்தியடைந்துள்ளது<br>சுற்றாடல் தாக்க மதிப்பீடு அல்லது ஐஈஈ செய்யப்படவேண்டியுள்ளது |
| 11 | மாதிவெல கிழக்கு திசைமாற்றுத் திட்டத்திற்கான வடிவமைப்பும் மேம்படுத்தலும்: கட்டம் II | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*11* | பூர்வாங்க வடிவமைப்பு ஆலோசனைக்கான ஆர்எப்பி மதிப்பீடு முன்னெடுக்கப்படுகின்றது |
| 12 | புனித செபஸ்ரியன் வடக்கு பூட்டு வாயில் மற்றும் இறைப்பு நிலையம் வடிவமைப்பும் நிர்மாணிப்பும் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/*12* | பூர்வாங்க வடிவமைப்பு ஆலோசனைக்கான ஆர்எப்பி மதிப்பீடு முன்னெடுக்கப்படுகின்றது |

| | | | |
|---|---|---|---|
| 13 | தெமட்டகொட கால்வாய் புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/03/பி | வடிவமைப்பு - 40% பூர்த்தியடைந்துள்ளது காணி பெற்றுக் கொள்ளல் முன்னெடுக்கப்படுகின்றது. மீள்குடியேற்றல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது |
| 14 | கொலன்னாவ கால்வாய் திசைமாற்று மற்றும் கொதட்டுவ இறைப்பு நிலையம் வடிவமைப்பும் நிர்மாணிப்பும் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/16 | மாதிரி வடிவமைப்பு. வடிவமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது |
| 15 | சரண மாவத்தை கால்வாய் மற்றும் செத்சிரிபாய கால்வாய் ஆகியவற்றை புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/04 | வடிவமைப்பு அனேகமாக பூர்த்தியடைந்துள்ளது நிதி கிடைக்கப்பெறும் தன்மையுடன் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 16 | பூர்வராம கால்வாய் மற்றும் ஸ்ரீ விக்கிரம கால்வாய் புனரமைத்தல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/07/பி | வடிவமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது நிதி கிடைக்கப்பெறும் தன்மையுடன் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 17 | வடிகாலமைப்பு முறைமை முகாமைத்துவ மேம்படுத்தல்கள், கட்டுப்பாட்டு நிலையங்கள் நடைபாதைப் பாலங்கள் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/08 | பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளது |
| 18 | Formation of Lake No.08 08ஆம் இலக்க ஏரியினை உருவாக்குதல் | எஸ்எல்எல்ஆர்டி சி/டப்/10 | பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளது |

**வெள்ள மற்றும் வடிகால் முகாமைத்துவத்திற்கான கொள்ளளவு அதிகரித்தல்**

இக்கூறானது கருத்திட்ட முதலீடுகளின் நிலைபெறு தன்மையை உறுதிப்படுத்தவதற்காக பாரிய கொழும்பு நதிப்படுக்கைக்கான ஒட்டுமொத்த வடிகால் முறைமை முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதை இலக்காகக் கொள்கின்றது.
இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

i. பொதுப் போக்குவரத்துக்காக பிரதான கால்வாய்களை பயன்படுத்துவதன் ஊக்கமளிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டுவதற்காக நீர் அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து முறைமையொன்றினை வடிகால் ஊடாக தெரிவு செய்யப்பட்ட நிலத்தோற்றத்திற்காகவும் ஆதரவளிப்பு முன்னோடிக் கருத்திட்டத்திற்காகவும் முதலிடுதல்

ii. வடிகால் பராமரித்தல் இவிவசாய பொருளியல் அலகுத்திரங்களை கொள்வனவு செய்தல்

iii. கொழும்பு நதிப்படுக்கை பிரதேசத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வெள்ள முகாமைத்துவ முறைமை ஒன்றினை உருவாக்குதல்.

ஒருங்கிணைக்கப்பட்ட வெள்ள முகாமைத்துவ முறைமை ஈரநிலங்கள், கால்வாய்கள், வடிவமைப்பு முறைமைகள் என்பவற்றிற்கான கண்காணித்தல், நீர்தேக்க/ ஈரநில முகாமைத்துவம் பராமரித்தல் முறைமைகள் மற்றும் வெள்ளம் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைத்தல் பட்டயங்கள் மற்றும் நுட்பங்களுடன் இணைந்து செயற்படும் வகையில் நதிப்படுக்கை கொள்ளளவினைப் பாதுகாப்பதற்காக நிலப் பயன்பாட்டு திட்டமிடலினை கண்காணித்தல் மற்றும் அமுல்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## 2013 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு முன்னேற்றம்

### 1. தெகிவளை கால்வாய் புனரமைத்தல் - பணிப்பொதி எஸ்எல்எல்ஆர்டிசி/டப்/01

2013.05.20 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட கருத்திட்ட செலவு ரூபா 193.85 மில். கருத்திட்ட காலம் 12 மாதங்கள். திரட்டிய பௌதீக முன்னேற்றம் 42%. அதே போன்று நிதியியல் முன்னேற்றம் ரூபா 57.31 மில்.

புதிய கபியோன் சுவர்களை நிர்மாணித்தல் பணி முன்னெடுக்கப்படுகின்றது. வடிவமைக்கப்பட்ட அளவு 4,275.00 கன மீ. அத்துடன் 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறு பூர்த்தியடைந்த அளவு 2,226 கன மீ.




### 2. அளுத்மாவத்தை கல்வெட்டு, மோதரை சதுர வடிகால், மோதரை சுரங்க ஆள்துளைகள், மோதரை கடல் வடிச்சலில் கரையோர மேம்படுத்தல் மற்றும் பிரதான வடிகால் கால்வாய் கரையோர பாதுகாப்பு பணிகள் நிர்மாணித்தல் - பணிப்பொதி எஸ்எல்எல்ஆர்டிசி/டப்/02

2012.11.27 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட கருத்திட்ட செலவு ரூபா 409.97 மில். கருத்திட்ட காலம் 18 மாதங்கள். திரட்டிய பௌதீக முன்னேற்றம் 67%. அதே போன்று நிதியியல் முன்னேற்றம் ரூபா 21.50 மில்.

பிரதான வடிகால் நிர்மாணம், அளுத் மாவத்தை கல்வெட்டு, மோதரை சதுர வடிகால், சுரங்க உள்வாயில் மற்றும் வெளிவாயில் பணி முன்னெடுக்கப்படுகின்றது.


அளுத் மாவத்தை கல்வெட்டு நிர்மாணம்



மோதரை கடல் வடிச்சல் மேம்படுத்தல்

கொங்கிரீற்று ஓடை நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டு வடிகால் மேம்படுத்தல் நிர்மாணம் முன்னெடுக்கப்படுகின்றது.




நிர்மாணிப்பதற்கு முன்னிருந்த நிலை






நிர்மாணிப்பதற்கு பின்னர்

### 3. கால்வாய் கரையோர பாதுகாப்பு பணி

புதிய கபியோன் சுவர்கள் நிர்மாணம் - வடிவமைக்கப்பட்ட அளவு 8, 694.0 கன மீ. 2013.12.31ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட அளவு 5870.0 கன மீ.

தற்போது காணப்படுகின்ற கபியோன் சுவர்களை புனரமைத்தல் வடிவமைக்கப்பட்ட அளவு 1052.0 கன மீ. 2013.12.31ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட அளவு 668.0 கன மீ.






கொழும்பு பெருநகர் பிராந்தியத்திற்கான நீரியல் மாதிரி மைக் II என்டர்பிரைசஸ் இடமிருந்து வன்பொருள் உருவாக்கப்பட்டு அளவிடப்பட்டு செல்லுபடியாக்கப்பட்டுள்ளது. 50 வருடகால காலமொன்றினை இலக்கு வைத்து வெள்ளப்பெருக்கிலிருந்து கொழும்பு பிரதேசத்தை பாதுகாப்பதற்காக 16 தலையீடுகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஒவ்வொரு மேம்படுத்தல் அத்துடன் வேறுபட்ட இணைப்புக்களில் செயற்றிறன் மாதிரி மூலம் பரிசோதிக்கப்பட்டள்ளது.
2013.12.31 அன்று உள்ளவாறு முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பொதி இல. | கருத்திட்டம் | கருத்திட்டக் கட்டத்தில் எய்தப்பட்ட முன்னேற்ற % | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | வடிவமைப்பு | கொள்வனவு | |
| SLLRDC/W/07/A | வெள்ளவத்த கால்வாய் புனரமைத்தல் | 90% | 10% | பணிப்பொதி மற்றும் கொள்வனவு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதனால் கேள்வி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| SLLRDC/W/03/A | புனித செபஸ்தியன் தெற்கு கால்வாய் புனரமைத்தல் | 100% | 50% | கொள்வனவு ஆவணம் கேள்வி வழங்குவதற்கு தயாராக உள்ளது.<br>இம்மேம்படுத்தல் மூலம் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் 2014 ஜனவரி 16 மற்றும் 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.<br>நிரந்தர குடியமர்த்தல் 2014 ஒக்டோபர் மாதம் அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| SLLRDC/W/14 | புதிய மோதரை சுரங்கம் வடிவமைத்தலும் நிர்மாணித்தலும் | 90% | 10% | ஆவண ஆய்வுகள் - 100% பூர்த்தியடைந்துள்ளது.<br>மத்திய சுற்றாடல் அதிகார சபை இசைவு – 75% பூர்த்தியடைந்துள்ளது<br>முன்தகைமை ஆவணம், வடிவமைத்தல் ம்றறும் நிர்மாண ஒப்பந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது<br><br>வடிவமைத்தல் மற்றும் கட்டுமாணத்திற்கான பட வரைதல் தயாரிக்கப்பட்டு வருவதுடன் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து துளை இடுவதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| SLLRDC/W/17 | டொரின்டன் சுரங்க பாதை வடிவமைத்தலும் நிர்மாணித்தலும் | 65% | | பிரதான சுரங்கப் பாதை வடிவமைத்தல் முடிவடைந்துள்ளது. துளை கருவி துளையிடுதல் நுட்பம் ஊடாக பிரதான சுரங்கப் பாதைக்கான பக்கவாட்டான இணைப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.<br>முன்தகைமை ஆவணம், வடிவமைத்தல் ம்றறும் நிர்மாண ஒப்பந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வடிவமைத்தல் மற்றும் கட்டுமாணத்திற்கான பட வரைதல் தயாரிக்கப்பட்டு வருவதுடன் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து துளை இடுவதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| SLLRDC/W/05 | மாதிவல கிழக்கு திசை மாற்றுத் திட்ட மேன்படுத்தல் : கட்டம் 1 | 70% | | தலங்கம குளத்திற்கான இறுதி முன்மொழிவு தொடர்பில் அவர்களது சம்மதத்தினை பெற்றுக் கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.<br>கரை பாதுகாப்பிற்கான புவித் தொழிநுட்ப மற்றும் கட்டமைப்பு வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| SLLRDC/W/13 | புனித செபஸ்தியன் தெற்கு புதிய திசை மாற்றுதல் நிர்மாணித்தல் | 30% | | பல தெரிவுகளை கருத்திற் கொள்வதன் மூலம் முன்மொழியப்பட்ட திசை மாற்று வழி இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br>பயன்பாடுகள் இணைப்புகளை மாற்றுதல் தொடர்பில் வழியமைக்கப்படவுள்ளது.<br>கட்டமைப்பு மற்றும் புவித் தொழிநுட்ப வடிவமைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது. |
| **பொதி இல.** | **கருத்திட்டம்** | **கருத்திட்டக் கட்டத்தில் எய்தப்பட்ட முன்னேற்ற %** | | **குறிப்பு** |
| | | **வடிவமைப்பு** | **கொள்வனவு** | |
| SLLRDC/W/09 | புனித செபஸ்தியன் வடக்கு கால்வாய் புனரமைத்தல் | 95% | 40% | மீள் குடியமர்த்தல் செயல்திட்டத்துடன் இறுதிப்படுத்தப்பட்டு கேள்வி வழங்கப்படவுள்ளது.<br>2015 ஏப்ரல் மாதம் அளவில் மீள் குடியமர்த்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| SLLRDC/W/06 | 06 ஆம் இலக்க ஏரி மற்றும் 07 ஆம் இலக்க ஏரிகளை உருவாக்குதல் | 70% | | எண்ணக்கரு ரீதியான வரைபடங்கள் ஈர நில முகாமைத்துவ நிபுணரான கலாநிதி மெத்யுவுஸ் என்பவருக்கு அவருடைய கருத்துக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>விரிவான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சம்மதத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| SLLRDC/W/11 | மாதிவல கிழக்கு திசை மாற்று திட்ட மேம்படுத்தல் வடிவமைப்பும் நிர்மாணித்தலும் | 25% | | புதிதாக நியமிக்கப்பட்ட ஆலோசகருடன் பூர்வாங்க வடிவதைத்தல்கள் மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட ஆலோசகருக்கு அழைப்புக் கடிதம் 2013.12.19 அன்று வழங்கப்பட்டது. |
| SLLRDC/W/12 | புனித செபஸ்தியன் வடக்கு வாயில் கதவு மற்றும் இறைப்பு நிலைய வடிவமைப்பும் நிர்மாணமும் | 40% | | புதிதாக நியமிக்கப்பட்ட ஆலோசகருடன் பூர்வாங்க வடிவதைத்தல்கள் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட ஆலோசகருக்கு அழைப்புக் கடிதம் 2013.12.19 அன்று வழங்கப்பட்டது. |
| SLLRDC/W/03/B | தெமடகொட கால்வாய் நிர்மாணம் | 40% | | காணி பெற்றுக் கொள்ளளும் மீள் குடியமர்த்தலும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| SLLRDC/W/16 | கொதடுவ இறைப்பு நிலைய வடிவமைப்பும் நிர்மாணமும் | 25% | | பிரதான வடிவத்துடன் இணைந்து மாதிரி வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பாதுகாக்கப்படாத வலயத்தினுள் வடிகால் முறைமையுடன் ஒருங்கிணைக்கும் தனியான மாதிரியொன்று உருவாக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட திசை மாற்றலுக்கான நீதியியல் சக்தி வடிவமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது. |
| SLLRDC/W/04 | சரண மாவத்த கால்வாய் மற்றும் செத்சிறிபாய கால்வாய் புனரமைத்தல் | 90% | | சரண மாவத்தையின் மூலப் பிரதேசத்தின் ஒரு பகுதி மாத்திரம் அமுல்படுத்தலுக்காக கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| SLLRDC/W/07/B | பூர்வராம கால்வாய் மற்றும் ஸ்ரீ விக்ரம கால்வாய் புனரமைத்தல் | 5% | | வடிவமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் நிதி கிடைக்கப் பெறும் தன்மை கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| SLLRDC/W/08 | வடிகாலமைப்பு முறைமை முகாமைத்துவ மேம்படுத்தல், அணைப்பு நிலையங்கள், மற்றும் நடைபாதை பாலங்கள் போன்றன | - | | பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளது |
| SLLRDC/W/10 | 08 ஆம் இலக்க ஏரி உருவாக்குதல் | - | | பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளது |

4. **பராமரித்தலுக்கான நிர்மாண இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கணனி வன்பொருள், மென்பொருள் கொள்வனவு**

- பொருட்கள் பொதி - I {SLLRDC/G/01 இயந்திரமும் மணல் அகற்றல் உபகரணங்களும்} 2013 ஆகஸ்ட் 23 அன்று பொருட்கள் கையளிக்கப்பட்டன.

| இல. | இயந்திரங்களின் விபரம் | எண் ணிக் கை |
|---|---|---|
| ஏ-1 | நீரிலும் நிலத்திலும் இயங்கக்கூடிய மென் தரையமைப்பு அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.8 கன மீற்றர்) | 2 |
| ஏ-2 | நீரிலும் நிலத்திலும் இயங்கக்கூடிய மென் தரையமைப்பு அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.4 கன மீற்றர்) | 2 |
| ஏ-3 | நீரிலும் நிலத்திலும் இயங்கக்கூடிய மென் தரையமைப்பு அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.25 கன மீற்றர்) | 1 |
| ஏ-4.1 | ஊர்ந்து செல்லும் அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.9 கன மீற்றர்) | 10 |
| ஏ 4.2 | ஊர்ந்து செல்லும் அகழ்வு இயந்திரத்திற்கான நீண்ட கை உபகரணங்கள் (வாளி கொள்ளளவு 0.5 கன மீற்றர்) | 4 |
| ஏ 5 | ஊர்ந்து செல்லும் அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.4 கன மீற்றர்) | 4 |
| ஏ 6 | நீண்ட கை ஊர்ந்து செல்லும் அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.5 கன மீற்றர், 15 மீ நீளக்கூடியது) | 6 |
| ஏ-7 | டோசர் கத்தியுடனான சிறு அகழ்வு இயந்திரம் (வாளி கொள்ளளவு 0.10 கன மீற்றர்) | 2 |
| ஏ-8 | அழுத்தப் படகுகள் | 4 |
| ஏ-9 | பணியாற்றும் மேடை (1.0*0.5*0.5) மீ துண்டுகள் | 100 |





- பொருட்கள் பொதி - II {SLLRDC/G/02 – போக்குவரத்து மற்றும் பயன்பாட்டு வாகனங்கள்} கொள்வனவு கட்டளைகள் முன்வைக்கப்பட்டுள்ளன

| இல. | இயந்திரங்களின் விபரம் | எண் ணிக் கை |
|---|---|---|
| பி-1 | டிபர் லொறி – 15 தொன் 10 சக்கரம் | 14 |
| பி-2 | டிபர் லொறி – 10 தொன் 6 சக்கரம் | 6 |
| பி-3 | நீர் பவுசர் - 7000 லீற்றர் | 2 |
| பி-4 | உளவு இயந்திரம் பெட்டியுடன் - 2.5 தொன் | 10 |
| பி-5 | பயன்பாட்டு வாகனம் - 4 சக்கர செலுத்தல் | 2 |
| பி-6 | டபல் கெப் - 4 சக்கர செலுத்தல் | 10 |
| பி-7 | பஸ் (30 ஆசனங்கள்) | 1 |

- பொருட்கள் பொதி - III {SLLRDC/G/03 – ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கருவிகள் கொள்வனவு}
  ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

| இல. | உபகரணம் | எண்ணி க்கை | அலகு |
|---|---|---|---|
| டி.1 | அடைகாக்கும் பெட்டியுடனான 36 மாதிரிகளுக்கான ரெஸ்பிரோமெட்ரிக் BOD அலகுகள் | 1 | எண் |
| டி.2 | எடுத்து செல்லக்கூடிய நீர் தர பரிசோதனைக் கருவி | 1 | எண் |
| டி.3 | கரைந்த ஒட்சிசன் மீற்றர் | 1 | எண் |
| டி.4 | pH மீற்றர் | 1 | எண் |
| டி.5 | பரிசோதனை வடிகட்டி பெட்டி | 1 | தொகுதி |
| டி.6 | கணினி மயப்படுத்தப்பட்ட மூன்று-axial பரிசோதனை இயந்திரம் | 1 | எண் |
| டி.7 | CBR துணைக் கருவிகள் | 1 | தொகுதி |
| டி.8 | கண்ணாடிப் பொருட்களும் ஏனைய துணைக் கருவிகளும் | 1 | தொகுதி |
| டி.9 | தன்னியக்க மழை அளவு கருவி | 6 | எண் |
| டி.10 | தன்னியக்க நீர் மட்ட அளவிடும் கருவி | 6 | எண் |
| டி.11 | உண்மை நேர கினமெடிக் புநிமு | 2 | எண் |

| | | | |
|---|---|---|---|
| டி.12 | மொத்த நிலையம் (ரோபோ) | 2 | எண் |
| டி.13 | அணு உறிஞ்சல் ஸ்பெக்டோமீற்றர் | 1 | எண் |
| டி.14 | டிஜிடல் ஆய்வுகூட டர்பி குறுக்களவு மானி | 1 | எண் |
| டி.15 | கொங்கிறீட் பரிசோதனை சுத்தியல் தொகுதி | 1 | எண் |
| டி.16 | தராசு | 1 | தொகுதி |
| டி.17 | உலர்த்திகள் | 1 | எண் |
| டி.18 | அலுமினியம் கலப்பு ஈரப்பதன் உள்ளடக்க கொள்கலன்கள் | 1 | தொகுதி |
| டி.19 | மாதிரித் தட்டுகள் | 1 | தொகுதி |
| டி.20 | கலப்பு பெட்டி ( மாதிரி எடுத்தல் பிள்ப்பிகள்) | 1 | தொகுதி |
| டி.21 | துருப்பிடிக்காத இரும்பு கரண்டிகள் கைகளுடன் | 1 | தொகுதி |
| டி.22 | அதிக அழுத்த கொங்கிறீட் வாள் | 1 | எண் |
| டி.23 | டபள் டியுப் டயமன்ட் இம்பிரிக்னேடட் கோர் பிட்ஸ் 65 சதம் (Double tube diamond impregnated core bits 65 cts) | 50 | எண் |
| டி.24 | என்டப்ளியு டயமன்ட் கேசிங் சூ (NW diamond casing shoe) | 30 | எண் |
| டி.25 | என்டப்ளியு டிசி கேசிங் சூ (NW TC casing shoe ) | 30 | எண் |
| டி.26 | ரீமர் செல் பொ டபள் டியுப் கோ பெரல் என்எக்ஸ் (Reamer shall for double tube core barrel NX) | 30 | எண் |
| டி.27 | என்டப்ளியு டயமன்ட் இம்பிரிக்னேடட் கேசிங் பிட் (NW diamond impregnated casing bit) | 30 | எண் |
| டி.28 | எச்டப்ளியு டயமன்ட் இம்பிரிக்னேடட் கேசிங் பிட் (HW diamond impregnated casing bit) | 20 | எண் |
| டி.29 | எச்டப்ளியு டயமன்ட் கேசிங் சூ (HW diamond casing shoe ) | 20 | எண் |
| | | | |
| **இல.** | **உபகரணம்** | **எண்ணிக்கை** | **அலகு** |
| டி.30 | என்எம்எல்சி கோ பெரல் 1.5 (NMLC Core barrel 1.5 ) | 5 | எண் |
| டி.31 | ஏடப்ளியு வோடர் சுவிவெல் (AW water swivel) | 10 | எண் |
| டி.32 | டபள் டியுப் கோ பெரல் என்எக்ஸ் 1.5 மீ ஏடப்ளியு ரொட் கெனெக்ஷன் (Double tube core barrel NX 1.5 m AW rod connection) | 10 | எண் |
| டி.33 | என்டப்ளியு குரொஸ் சிபிங் பிட் வித் ஏடப்ளியு ரொட் பொக்ஸ் (NW cross shopping bit with AW rod box) | 15 | எண் |
| டி.34 | என்எம்எல்சி ரீமர் செல் (NMLC reamer shell ) | 12 | எண் |
| டி.35 | என்எம்எல்சி கோ பிட் இம்பிரிக்னேடட் 65 சதம் (NMLC core bit impregnated 65 cts) | 20 | எண் |
| டி.36 | 3.5' வின்ங் டிரேங் பிட் வித் கடிங் எட்ஜ் ஹார்ட் பேஸ்ட் வித் டிசி பார்ட்டிகல்ஸ் எக்ஸ்ஏடப்ளியு ரொட் கெனெக்ஷன் (3.5' wing drag bit with cutting edges hard faced with TC particles xAW rod connection ) | 20 | எண் |
| டி.37 | என்எக்ஸ் கோ லிப்டேர்ஸ் (NX core lifters ) | 20 | எண் |
| டி.38 | 0.5 மீ ஏடப்ளியு டிரிள் ரொட்ஸ் (0.5 m AW Drill rods ) | 5 | எண் |
| டி.39 | 0.3 மீ என்டப்ளியு கேசிங் (0.3 m NW casing ) | 5 | எண் |

- பொருட்கள் பொதி – IV{SLLRDC/G/04- நிர்மாண உபகரணங்களின் கொள்வனவு } கொள்வனவு சார்ந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

| இல. | உபகரணம் | எண்ணிக்கை |
|---|---|---|
| டி -1 | பிரன்ட் என்ட் வீல் லோடர் (பகட் கெபசிடி 2.0 கன மீற்றர்)<br>Front End Wheel Loader (Bucket capacity 2.0 m3) | 1 |
| டி -2 | பெக்ஹோ லோடர் (Backhoe Loader) | 5 |
| டி -3 | வீல் எக்ஸ்கவேடர் (பகட் 0.4 கன மீற்றர் மற்றும் ரீச் 7 மீற்றர்)<br>Wheel Excavator (Bucket 0.4 Cu.m. & Reach 7m) | 4 |
| டி -4 | ரப் டெரென் கிரேன் 45 தொன் (Rough Terrain Crane 45 Ton) | 1 |
| டி -5 | ஸ்கிட் ஸ்டியர் லோடர் (Skid Steer Loader ) | 3 |
| டி -6 | ஸக்சன் என்ட் ஜெடிங் வெஹிகில் (ஸிலஜ் டேன்க் 5 கனமீற்றர், கிலீன் வோடர் டேன்க் 3 கன மீற்றர்)<br>Suction & Jetting Vehicle<br>(Sludge tank 5m3, Clean water tank 3m3) | 1 |
| டி -7 | பூம் டிரக் (கிரேன் 2 தொன், பேலோட் கெபேசிடி 17 தொன்)<br>Boom Truck (Crane 2 Ton, Payload capacity 17 Ton ) | 2 |
| டி -8 | பிரைம் மூவர் வித் லோ பெட் டிரைலர் (40 தொன்)<br>Prime Mover with Low Bed Trailer (40 Ton) | 1 |
| டி -9 | கிரவ்லர் டிரெக்டர் (டோசர்) 85 எச்பீ<br>(Crawler Tractor (Dozer) 85 HP ) | 1 |
| டி -10 | புளோடிங் டோசர் (15 தொன்) (Floating Dozer (15 Ton) ) | 1 |
| டி -11 | மோடர் கிரேடர் (12 அடி பிளேட்) (Motor Grader (12ft blade) ) | 1 |
| | ரூட் போலிங் மெசின் (Root bowling machine ) | |
| | கலி ஸகர் (Gulley suckers ) | |
| | குரூ கெப் (Crew cabs ) | |

- பொருட்கள் பொதி V- { நிர்மாண உபகரணங்களின் கொள்வனவு}

| இல. | உபகரணம் | எண்ணிக்கை |
|---|---|---|
| ஈ-1 | ஸிலஜ் பம்ப்ஸ் 6ஜி+ டயா (Sludge Pumps 6g+ Dia.) | 2 |
| ஈ-2 | ஸிலஜ் பம்ப்ஸ் 4ஜி+ டயா (Sludge Pumps 4g+ Dia.) | 4 |
| ஈ-3 | ஸவுன்ட் புரூப் ஜெனரேட்டர் 250 கிலோ வெட்<br>(Sound proof )Generator 250 KVA | 1 |
| ஈ-4 | ஸவுன்ட் புரூப் ஜெனரேட்டர் 27 கிலோ வெட்<br>(Sound proof Generator 27 KVA) | 2 |
| ஈ-5 | எயார் கொம்ப்ரஸர் வித் பிரேகர்ஸ்<br>(Air Compressor with Breakers ) | 2 |
| ஈ-6 | பைபர் கிளாஸ் போட் வித் 40 எச்பி ஒவ்ட்போட் இன்ஜின் சோட் டெய்ல்<br>(Fibre Glass Boat with 40HP Outboard Engine Short Tail ) | 4 |
| ஈ-7 | வைப்ரேடிங் ரோலர் 5 தொன் (Vibrating Rollers 5 Ton.) | 1 |
| ஈ-8 | வைப்ரேடிங் ரோலர் 2 தொன் (Vibrating Rollers 2 Ton.) | 2 |
| ஈ-9 | சைலன்ட் பைலர் 5 தொன் (Silent Piler 5 Ton.) | 1 |

- கணனி மென்பாகங்கள்

  நீரியல் மாதிரிக்கான MIKE 11 தயார் நிலையிலுள்ளது. ARC GIS ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு அதனைக் கொண்டு இயங்கி வருகின்றது.

**5. "வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாக்கப்பட்ட நகரச் சூழல் ஒன்றினை நோக்கி கொழும்பு பெரு நகர் கருத்திட்டம் ஆரம்பித்தல். 2013 ஒக்டோபர் 28 திகதிய யப்பான் கொள்கை மனித வளங்கள் அபிவிருத்தி தொழிநுட்ப உதவியின் கீழான கருத்திட்டம்**

கொழும்பு பெரு நகர் பிராந்தியத்தினுள் விரிவான வெள்ள இடர் மதிப்பீடு மற்றும் வெள்ள இடர் தடுப்பு தயார் படுத்தல் செயற்திட்டம் தயாரித்தல் மற்றும் நீர் ஈர நிலங்கள் மற்றும் நீர்த் தர மதிப்பீட்டுக்கான முதன்மை திட்டம் தயாரித்தல் வெளிவாரி ஆலோசகர்கள் ஊடாக இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.






# நிர்மாணப் பிரிவு

<u>சேவை நாடி கருத்திட்டங்கள்</u>

**1. மயுர பிளேஸ் வீடமைப்பு அப்விருத்திக் கருத்திட்ட அமுலாக்கம் (கட்டம் I மற்றும் II)** ***நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கானது.***



இக்கருத்திட்டம், கொழும்பு நகர் - நகர சீரமைத்தல் கருத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுலாக்க்படுகின்றது. நிர்மாணப் பணியினை கூட்டுத்தாபனம் பொறுப்போற்றுள்ளது.

இக்கருத்திட்டம் ரூபா. 434.29 மில்லியன் மொத்த செலவினைக் கொண்டு 120 வீடுகளை உள்ளடக்குகின்றன. 12 மாடி கட்டிட நிர்மாணமாகும். ஒவ்வொரு வீடும் இரண்டு படுக்கை அறைகள், சமயல் அறை, ஓய்வு அறை, குளியல் அறை மற்றும் முன் மண்டபம் ஆகியவற்றை கொண்டமைந்தது.



கட்டமைப்பு பணி (கட்டம் I) ரூபா. 217.7 மில்லியன் செலவில் ஏற்கனவே பூர்தி செய்யப்பட்டுள்ளதுடன் பூரணப்படுத்தும் வேலை (கட்டம் II) ரூபா. 217.29 மில்லியன் செலவுடன் முன்னெடுக்கப்படுகின்றது. கருத்திட்டதின் முழுப் பணியும் 2014 பெப்ரவரி மாதம் அளவில் நிறைவு செய்யப்படும்.

2013ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூ. 90.59 மில்லியன். அத்துடன் செய்யப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூ. 248.63 மில்லியன் ஆகும்.



## 2. சலமுல்ல 1008 வீடுகளை நிர்மாணித்தல் - (தொகுதி ஏ, பி மற்றும் சி)

*கொழும்பு நகரம் - நகர் சீரமைத்தல் கருத்திட்டத்திற்கானது.*

இக்கருத்திட்டம், கொழும்பு நகரம் - நகர் சீரமைத்தல் கருத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுலாக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் வடிவமைத்தல் மற்றும் கட்டுமாண அத்துடன் கட்டுமாண ஒப்பந்ததாரரும் ஆலோசகருமாகும். இது தொகுதி ஏ, பி மற்றும் சி என்ற பெயர்களிலான மூன்று கட்டிடங்களை நிர்மாணிப்பதனை கொண்டது. அனைத்து மூன்று தொகுதிகளும் 12 மாடிகள் கொண்டவை. தொகுதி ஏ, 18 மாடி மனைகளை கொண்டுள்ளதுடன் தொகுதி பி மற்றும் சி ஒவ்வொரு மாடியிலும் 33 மாடி மனைகளைக் கொண்டவை.

கருத்திட்டதின் மதிப்பிடப்பட்ட செலவு 1008 வீடுகளை நிர்மாணிப்பதற்கான குத்துக் குழி பணி உள்ளடங்கலாக ரூபா. 2726.56 மில்லியன் ஆகும். ஒவ்வொரு வீடும் இரண்டு படுக்கை அறைகள், வசிப்பறை, சமயல் அறை, சமையல் அறை அலுமாரி, மலசலகூடம் மற்றும் முன் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டவை.

இக்கருத்திட்டம் 2011 ஏப்ரல் மாதம் ஆரம்பித்ததுடன் 2015 இல் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தொகுதி ஏ, கட்டிடப் பணியும் தொகுதி பி மற்றும் சி உப கட்டமைப்பும் முன்னெடுக்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 178.36 மில்லியன். அத்துடன் தொகுதி ஏ, கட்டிட வேலைக்காக ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா. 319.10. அத்துடன் தொகுதி பி மற்றும் சி குத்து குழி பணியின் பெறுமதி ரூபா. 222.07 மில்லியன் ஆகும்.





முன்னெடுக்கப்படும் கட்டுமாணப் பணி – வீட்டுத் தொகுதி ஏ



முன்னெடுக்கப்படும் உப கட்டமைப்பு பணி – வீட்டுத் தொகுதி பி மற்றும் சி

**முன்மொழியப்பட்ட ஆபத்தற்ற அணுப் பரிசோதனை தேசிய நிலைய நிர்மாணம்**
***அணு சக்தி அதிகாரசபை- வெதமுல்லை, களனி. (தொகுதி – ஏ)***



அணு சக்தி அதிகார சபைக்கான ஆபத்து விளைவிக்காத தேசிய பரிசோதனை நிலையத்திற்கான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றின் வடிவமைப்பு நிர்மாணத்தினை கருத்திட்டம் உள்ளடக்குகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 309 மில்லியன். கருத்திட்டம் 2013 ஜூன் மாதம் ஆரம்பித்து 2014 ஜூன் மாதம் நிறைவு செய்தவற்கு

2013ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 110.29 மில்லியன். அத்துடன் செய்யப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா. 163.83 மில்லியன் ஆகும்.

**4. ஹம்பந்தோட்ட சூரியவெவ முன்மொழியப்பட்ட மீள் குடியமர்த்தல் கருத்திட்டத்தின் கீழ் இரண்டு மாடி வீடுகள்** *ஹம்பாந்தோட்ட அபிவிருத்தி நிதியத்தினால் நிதியளிக்கப்பட்டது.*

இக்கருத்திட்டம் 15 வீடுகளை நிர்மாணிப்பதனை உள்ளடக்குகிறது. ஒவ்வொரு வீடும் ஒரு வசிப்பறை, குடும்ப அறை, படுக்கை அறைகள் (03), வாகன தரிப்பிடம், கூரை தளம், சமயலறை மற்றும் குளியல் அறைகள் (02) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 117.69 மில்லியன். கருத்திட்டம் 2012 ஏப்ரல் மாதம் ஆரம்பித்து 2014 ஜனவரி மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2013 இன் போது, ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 61.10 மில்லியன். ஆற்றப்பட்ட மொத்தப் பணியின் திரட்டிய பெறுமதி ரூபா. 73.80 மில்லியன்.





**முன்னெடுக்கப்படும் பணி**

## 5. விமானத் துறை அமைச்சின் அலுவலகங்களுக்கான உள் வேலைப்பாடுகள் - பத்தரமுல்ல

இக்கருத்திட்டம் அலுமினியம் மற்றும் மர என்பவை மூலம் பிரித்தல் உள்ளடங்கிய அலுவலக இடம் நிர்மாணித்தல், கார்பட் இடுதல், வைனல் தரை அமைத்தல், சமையலறை அலுமாரிகள், அலுமியம் மற்றும் மரக் கதவுகள், வரவேற்பு கரும பீடங்கள், திரைச் சீலை பொருத்துதல் (கிடையான யன்னல் திரை), புதிய மலசலகூடம் நிர்மாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 33.65 மில்லியன். கருத்திட்டம் 2013 மார்ச் மாதம் ஆரம்பித்து 2013 ஒக்டோபர் மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 24.30 மில்லியன் ஆகும்.






## 6. சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்கான அலுவலக உற்புற வேலை - பத்தரமுல்ல

இப்பணி அலுமினிய பிரித்தல் பணி, தரைக்கு கார்பட் இடுதல், கதவுகள் வழங்கி பொருத்துதல், வரவேற்பு மேசை வடிவமைத்து பொருத்துதல் ஆகிய உற்புற வேலைகளை உள்ளடக்குகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 14.56 மில்லியன். கருத்திட்டம் 2013 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து 2013 டிசம்பர் மாதம் பூர்த்தியடைந்தது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 10.58 மில்லியன் ஆகும்.




7. பாதுக்க பொல காணியில் முன்மொழியப்பட்ட கால்வாய் முறைமையினை நிர்மாணித்தல்

*(i) பாதுக்க பொல காணியில் முன்மொழியப்பட்ட கால்வாய் மற்றும் நடைபாதை பாலம் என்பன நிர்மாணித்தல்*

இக்கருத்திட்டம் பாதுக்க பொல காணியில் 72 மீ நீளமான கால்வாய் மற்றும் நடைபாதை பாலம் (அகலம் 1 மீ) நிர்மாணிப்பதனை உள்ளடக்குகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 5.13 மில்லியன். கருத்திட்டம் 2013 ஜூன் மாதம் ஆரம்பித்து 2013 ஒக்டோபர் மாதம் பூர்த்தியடைந்தது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 4.82 மில்லியன் ஆகும்.




*(ii) பாதுக்க பொல காணியில் தற்போது காணப்படுகின்ற கால்வாய் முறைமையினை மீள் விருத்தி செய்தல் (கட்டம் I)*

இக்கருத்திட்டம், பாதுக்க காணியில் கெபியொன் சுவர்களை (155 மீ நீளம்) நிர்மாணிப்பதனை கொண்டது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 13.53 மில்லியன். கருத்திட்டம் 2013 செப்டெம்பர் மாதம் ஆரம்பித்து 2014 ஜனவரியில் மாதம் பூர்த்தியடைந்தது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 12.07 மில்லியன் ஆகும்.





**முன்னெடுக்கப்படும் கால்வாய் பணி**

### *(iii) பாதுக்க பொல காணியில் தற்போது காணப்படுகின்ற கால்வாய் முறைமையினை மீள் விருத்தி செய்தல் (கட்டம் II)*

இக்கருத்திட்டம், பாதுக்க காணியில் கெபியொன் சுவர்களை (66 மீ நீளம்) நிர்மாணிப்பதனை கொண்டது.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 10.18 மில்லியன். கருத்திட்டம் 2013 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து 2014 ஜனவரியில் மாதம் பூர்த்தியடைந்தது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 5.37 மில்லியன் ஆகும்.



<u>சுயநிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்</u>

**இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கான புதிய கட்டிடம் நிர்மாணித்தல்**

இக்கட்டிடம் கீழ்தளம், நான்கு, கூரைத்தளம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. வாகனத் தரிப்பிடம், 2 அலுவலக மாடிகள். சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் கேட்போர் கூடம் என்பவற்றை இக்கட்டிடம் வழங்குகின்றது. இக்கட்டிடத்தின் மொத்தப் பரப்பு 20710 சதுர அடியாகும். அத்துடன் மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதி 110 மில்லியன் ஆகும். கட்டமைப்பு மற்றும் சேவை வரைபடங்களை தயாரிப்பு பொறுப்பு ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் நிர்மாணப் பணி நிர்மாணப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட பணியின் பெறுமதி ரூபா. 46.83 மில்லியன். ஆற்றப்பட்ட பணியின் திரட்டிய பெறுமதி ரூபா. 95.5 மில்லியன்.

இக்கருத்திட்டம் 2014 ஜனவரி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



## பொறித் தொகுதி மற்றும் உபகரணப் பிரிவு

கூட்டுத்தாபனத்தின் பொறித் தொகுதி மற்றும் உபகரணப் பிரிவின், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திரங்களை உரிமையாக்கி தொழிற்படுத்தி பராமரிப்பதற்கு பொறுப்புடையதாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் ஏனைய விடயங்கள் பிரதான பொருத்தல் வேலைகள், சேவை நாடிகளுக்கான மணல் அகற்றுதல் கருத்திட்டங்களை பொறுப்பேற்றல், இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.

2012 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் பொறித் தொகுதி மற்றும் உபகரணப் பிரிவு பல மணல் அகற்றுதல், பாரிய பொருத்துதல் வேலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

1. மத்தள விமான நிலைய அழகுபடுத்தல் ஏரி
2. வோர்டர்ஸ் எஜ் நடைபாதை பாலங்கள்
3. வேரஸ்கஹ மற்றும் கிபுலாவல ஏரிகள்
4. அதிவேகப் பாதையின் இரு மருங்கிலும் முத்துராஜவல கால்வாய்கள்

2013 ஆகஸ்ட் மாதத்தில் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய இயந்திரங்கள் தொகுதியும் மணல் அகற்றுதல் உபகரணங்களும் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றது.

கிடைக்கப்பெற்ற இயந்திரங்களின் பெறுமதி சுமார் 454 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனம் இவ்இயந்திரங்களைப் பயன்படுத்தி வெளி வழங்குநர்களிடமிருந்து இயந்திரங்களை வாடகைக்கு பெறுவதனை பூரணமாக நிறுத்தியது.



கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மணல் அகற்றும் உபகரணங்கள்



காலி முகத்திடலில் இயந்திரங்களை கையளிக்கும் வைபவம்

புதிய இயந்திரங்களை பராமரிப்பதற்காக பொறித் தொகுதி மற்றும் உபகரணப் பிரிவினால் புதிய வேலைப் பற்றரை கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.



மாதிவல ஏரியில் மணல் அகற்றுதல் கூட்டுத்தாபனத்தினால் நிறைவு செய்யப்பட்ட பாரிய கருத்திட்டம் ஒன்றாகும். மணல் அகற்றுவதற்காக வெட்டி உறிஞ்சும் மணல் அகற்றல் இயந்திரமும் நீரிலும் நிலத்திலும் இயங்கும் மணல் அகற்றும் இயந்திரமும் பயன்படுத்தப்பட்டது. இவ் அகற்றப்பட்ட பொருட்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு அருகாமையில் காணி ஒன்றினை நிரப்புவதற்கும் பஸ் தரிப்பிடம் ஒன்றினை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டன.



வெட்டி உறிஞ்சும் மணல் அகற்றும் இயந்திரம் - கிபுலாவல ஏரி

பெல்லன்வில சதுப்பு நில ஏரி மணல் அகற்றுதல், வேரஸ்கஹ மழை நீர் வடிகால் மற்றும் சூழல் மேம்படுத்தல் கருத்திட்ட கட்டம் I இன் கீழ் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. மணல் அகற்றுதல் பணி முன்னெடுக்கப்படுகின்றது.



கூட்டுத்தாபன இயந்திரங்கள் - வேரஸ்கஹ கருத்திட்டம்



வேரஸ்கஹ கருத்திட்ட மணல் அகற்றும் பணியில் நீரிலும் நிலத்திலும் செல்லும் அகழ்வு இயந்திரமும் நீண்ட அடைவுடைய அகழ்வு இயந்திரமும் பயன்படுத்தப்பட்டது.



பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2013 கண்காட்சிக்கான மைதானத் தயார்படுத்தலில் குறுகிய கையுடைய அகழ்வு இயந்திரம் - பத்தரமுல்ல



புதிய சிறு நீரிலும் நிலத்திலும் செல்லும் அகழ்வு இயந்திரம் வயற் காணி எல்லை கரை தயார்படுத்தல் - கிபுலாவல



பாரிய இரும்பு இணைப்பு மற்றும் இயந்திர வேலைகளை செய்வதற்கு இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன பொறித் தொகுதி மற்றும் உபகரணப் பிரிவு வேலைப் பற்றரை

வசதிகளைக் கொண்டுள்ளது. எமது இது வேலைப் பட்டறை மூலம் இணைக்கப்பட்ட மிதக்கும் நடைபாதைப் பாலம் - தியத உயன



மணல் அகற்றப்பட்ட சிறு குளம் - மத்தள சர்வதேச விமான நிலையம், ஹம்பாந்தோட்டை

# காணிகள் சந்தைப்படுத்தல் பிரிவு

கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு அற்ற மிகவும் கவர்ச்சிமிகு சுற்றாடலினை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு அதிக பொறுப்புக்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த நோக்கத்தினை எய்தும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் முக்கிய தொழிற்பாட்டு பிரிவுகளில் ஒன்றான காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு, எமது சொந்த கருத்திட்டங்களுக்காகவும் திறைசேரி அல்லது கொடை முகவரகங்கள், நாட்டில் உள்ள ஈர நிலங்களை பிரகடனப்படுத்தல் மற்றும் விற்பனைகள் அத்துடன் வாடகைகள் ஊடாக ஈட்டப்படும் நிதியங்கள் மூலம் நிதியளிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களுக்காகவும் தேவைப்பட்ட காணிகளை பெற்றுக் கொள்வதன் வாயிலாக இப்பணிகளுக்கு உதவியளிக்கின்றது.

**எமது சொந்தக் கருத்திட்டங்களுக்கும் வேரஸ்கங்க கருத்திட்டத்திற்கும் காணி பெற்றுக் கொள்ளல் :**

முதுன்எல, களனி மற்றும் ராகம பிரதேசங்களில் சொந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு காணி பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு பாராளுமன்ற மேல் நீர்த்தேக்க பிரதேசம், மாதிவெல தெற்கு சுவீகரிப்பு மற்றும் வேரஸ்கங்க மழை நீர் வடிகாலமைப்பு அத்துடன் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம் ஆகியவற்றில் காணி பெற்றுக் கொள்ளல் உள்ளடங்கலாக பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி பெற்றுக் கொள்ளல் பணிகளிலும் ஈடுபட்டது. இவ் புதிதாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டம், 05 பிரதேச செயலாளர் பிரிவுகள் அதாவது ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, கெஸ்பாவை, ரத்மலான, மஹரகம மற்றும் தெஹிவல-கல்கிஸ்ஸ பிரிவுகளை உள்ளடக்குவதற்கு எதிர்ப்பார்க்.கப்படுகிறது. இக்கருத்திட்டத்தின் கீழ் சுமார் 372 ஹெக்டயர் காணி

பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. காணி பெற்றுக் கொள்ளலின் கீழ் பிரிவு 38(அ) தற்போது அனேகமான காணிகளுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

**ஈர நிலங்களை பிரகடனப்படுத்தல் :**

திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 2(ஆ) (1) மற்றும் 4அ(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரகடனங்களுக்கு அமைய காணிகள் மற்றும் சந்தைப் படுத்தல் பிரிவு நாட்டில் உள்ள ஈர நிலங்கள் மற்றும் கால்வாய் ஒதுக்குகளை பிரகடப்படுத்தலில் ஈடுபடுகின்றது. பின்வருவது மத்திய மாகாணத்திற்காக வெளியிடப்பட்ட பிரகடன அறிவித்தல் ஒன்றாகும்.

மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் ஈர நிலங்களைப் பிரகடனப்படுத்தல் நிறைவு பெற்றுள்ளது. சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாண ஈரநிலங்கள் பிரகடனப்படுத்தல் தற்போது முன்னெடுக்கப்படுகிறது. கூட்டுத்தாபனம், தொடர்புடைய மாவட்டங்களின் உள்ளூர் அதிகார சபைகள், பிரதேச செயலாளர்களிடமிருந்து சம்மத்தினை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அவர்களது சம்மத்தினை பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதம், ஈர நிலங்களை வர்த்தமானியில் அறிவிப்பதில் தாமத்தை ஏற்படுத்தும். இப்பிரகடனங்கள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அத்தகைய அபிவிருத்திகள் மற்றும் சுற்றாடலினை பாதுகாத்தல் என்பவற்றினை குறைப்பதற்கு இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அனைத்து உள்ளூர், மாகாண அதிகாரசபைகளிடம் இருந்தும் உதவியின்றி தானாக இயங்க முடியாது உள்ளது.





SRI LANKA LAND RECLAMATION AND DEVELOPMENT CORPORATION ACT, No. 15 OF 1968
AS AMENDED BY SRI LANKA LAND RECLAMATION AND DEVELOPMENT CORPORATION (AMENDED) ACT, No. 35 OF 2006 ACT, No. 52 OF 1982 AND ACT, No. 27 OF 1976

Order under Section 2(b) I

Minister of Defence and Urban Development

Ministry of Defence and Urban Development,
No. 15/5,
Baladaksha Mawatha,
Colombo 03,
24th April, 2013.

Kandy District

| Code Number | Description |
| --- | --- |
| KA3 | This has not been declared as relevant lands are not available in the area for declaration |
| KA9 | do. |
| [illegible] | do. |
| KA11 | do. |
| KA12 | do. |

Terms and Conditions

மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் ஈர நிலங்களைப் பிரகடனப்படுத்தல் நிறைவு பெற்றுள்ளது. சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாண ஈரநிலங்கள் பிரகடனப்படுத்தல் தற்போது முன்னெடுக்கப்படுகிறது. கூட்டுத்தாபனம், தொடர்புடைய மாவட்டங்களின் உள்ளூர் அதிகார சபைகள், பிரதேச செயலாளர்களிடமிருந்து சம்மத்தினை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அவர்களது சம்மத்தினை பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதம், ஈர நிலங்களை வர்த்தமானியில் அறிவிப்பதில் தாமத்தை ஏற்படுத்தும். இப்பிரகடனங்கள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அத்தகைய அபிவிருத்திகள் மற்றும் சுற்றாடலினை பாதுகாத்தல் என்பவற்றினை குறைப்பதற்கு இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அனைத்து உள்ளூர், மாகாண அதிகாரசபைகளிடம் இருந்தும் உதவியின்றி தானாக இயங்க முடியாது உள்ளது.

**காணி விற்பனையும் குத்தகையும்**

இப்பிரிவின் மற்றுமொரு தொழிற்பாடு காணி விற்பனைகள் மற்றும் வாடகைகள் ஊடாக வருமானம் உழைப்பதாகும். ஆக்கிரமிக்கப்படாத காணிகள் தற்போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளது. காணி அபிவிருத்தி பணிகள் பல்வேறு காரணங்களினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே விற்கக்கூடிய காணியின் அளவுகள் குறைவடைந்துள்ளன. பல மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு விற்பனைகள் மற்றும் வாடகைகள் ஊடாக சுமார் ரூ. 180 மில்லியன் தொகை நிதியினை ஈட்டக்கூடியதாக இருந்தது.

நீர் தேக்கி வைக்கும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனம் ஜிசிஎப்சி மற்றும் ஈஜ கருத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 1000 ஏக்கர் சதுப்புக் காணிகளை பராமரிக்கின்றது. சட்டம் மற்றும் பாதுகாப்பு போன்ற ஏனைய பிரிவுகளின் உதவியுடன் இக்காணிகள் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவினால் முகாமை செய்யப்படுகின்றன. குடும்பங்களை வேறிடங்களுக்கு மாற்றுவதற்கு காணி உறுதி வழங்குதல், வழக்குகளை பிரதிநிதித்துவம் செய்தல், சோதனையிடுதல் போன்றவற்றிலும் சட்டத்திற்கு புரம்பான அபிவிருத்திகளை தவிர்க்கும் பொருட்டு கிரமமான பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு வருகின்றது. பல மேலதிகப் பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வனைத்து தொழிற்பாடுகளும் மிகவும் குறைந்த பதவியினருடன் மிகக் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் காணி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு கூட்டுத்தாபனத்தின் ஒட்டு மொத்த குறிக்கோள்களை எய்துவதற்கு மேலும் அர்ப்பணித்துள்ளது.

# மனிதவள அபிவிருத்தி

2013 ஆம் ஆண்டுக்காக மனிதவள அபிவிருத்தி பிரிவினால் பின்பற்றப்பட்ட எண்ணக்கரு சார் மாதிரி சுருக்கமாக கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

### பயிற்சியும் அபிவிருத்தியும்

பயிற்சி என்பது முறைமை சார் செயன்முறை ஒன்றாவதுடன் இதனூடாக கூட்டுத்தாபனத்தின் மனித வளங்கள் அறிவுறுத்தல்கள் மற்றும் செயன்முறைச் செயற்பர்டுகள் ஊடாக அறிவினைப் பெற்ற திறன்களை விருத்தி செய்கின்றது. இது மேம்படுத்தப்பட்ட நிறுவன செயலாற்றுகையில் பெறுபேற்றினை தோற்றுவிக்கின்றது.

- பயிற்சி, தமது துறை தொடர்பில் ஊழியர்களுக்கு குறித்த விடயங்களில் மனோபாவம் மாற்றம், திறன்கள் மற்றும் அறிவினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு குறுகிய கால கடமை நோக்காகக் கொண்ட இலக்கு வைக்கப்பட்ட ஒன்றாகும். கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஊழியர்கள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி மற்றும் கற்கைகளுக்காக தெரிவு செய்யப்படுகின்றனர். இது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆயுட்கால மற்றும் நீண்ட கால முதலீடு ஒன்றாகும்.

**பயிற்சி மற்றும் அபிவிருத்தி சாரம்சம்**




தமது தற்கால சேவைச் சூழலில் ஊழியர்களுக்கு வேண்டப்பட்ட அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும் தமது ஆற்றல் மற்றும் நிறுவன சார் செயலாற்றுகையினை அதிகரிப்பதற்கும் பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் என 2013 ஆம் ஆண்டுக்காக ஆக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:-




பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் இலக்கு ஊழியர்களின் தரம் மற்றும் ஊக்குவித்தலை அதிகரித்தலாகும். இதன் ஊடாக உற்பத்தித் திறனை மேம்படுத்தி கூட்டுத்தாபனத்தின் எதிர்கால தேவைகளை நிறைவு செய்வதாகும்.

## வெளிநாட்டு பயிற்சி

2013 இல் வெளிநாட்டு பயிற்சிக்கு மேல் செலவிடப்பட்ட உண்மைச் செலவினம் பின்வருமாறு:-

| தொடர் இல. | நிகழ்ச்சித் திட்டம் | நாடு | காலம் 2013 | பங்குபற்றுநர் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை அ.டொ. |
|---|---|---|---|---|---|
| 01. | கழிவு நீர் முகாமைத்துவ பயிற்சி | பிலிபைன்ஸ் | ஜன 28 - பெப் 01 | 01 | 150 |
| 02. | சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ பயிற்சி | தோஹா கட்டார் | மார்ச் 26 – மார்ச் 30 | 01 | 2227 |
| 03. | நகர அபிவிருத்தி முகாமைத்துவம் பற்றிய அறிவினை பகிர்ந்து கொள்ளல் சுற்றுலா | தென் கொரியா | ஏப் 28 - மே 05 | 05 | 5320 |
| 04. | நீர் முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் உபாயங்கள் | சிங்கப்பூர் | மே 27 – மே 31 | 01 | 1087 |
| 05. | வெள்ள இடர் முகாமைத்துவம் | தென் கொரியா | மே 27 – மே 30 | 01 | 9000 |
| 06. | இயந்திரங்களுடன் தொடர்புடைய பயிற்சி | தென் கொரியா | செப் 08 – செப் 14 | 09 | 9552 |
| 07. | யுனஸ்கோ, போலந்து இணை அனுசரணை புலமைப் பரிசில் | போலந்து | 2013 ஒக் 01 – 2014 மார்ச் | 01 | 900 |
| 08. | போலந்து விசா பெறுவதற்கு இந்திய விஜயம் | இந்தியா | செப் 13 – செப் 16 | 01 | ரூ. 80,000/- அ.டொ. 616 |
| 09. | வெள்ள அனர்த்த தடுப்பு | யப்பான் | 2013 ஒக் 01 – 2014 செப் 01 | 01 | 900 |
| 10. | இயந்திரங்களுடன் தொடர்புடைய பயிற்சி | மலேசியா | நவ 19 – நவ 23 | 08 | 4000 |
| மொத்தம் | | | | | 33,752 |

***இயந்திரங்களுடன் தொடர்புடைய பயிற்சி புகைப்படங்கள் - தென் கொரியாவில் நடைபெற்றது***










2012/ 2013 *யப்பானில் நடைபெற்ற வெள்ள அனர்த்த தடுப்பு (ஒரு வருட நிகழ்ச்சித்திட்ட) புகைப்படங்கள்*







## ஆட்சேர்ப்பும் தெரிவு செய்தலும்

ஆட்சேர்ப்பு திட்டத்திற்கான அனுமதி 2013 நவம்பர் 08 அன்று தொடக்கம் செயற்படத்தக்கவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் சேவைத் தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு பல பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் முன்னைய அனுமதிகளுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட பதவியணியில் செய்யப்பட்டது.

அதற்கமைய பின்வரும் பதவிகளுக்கு 2013 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.




## ஒழுக்காற்று முகாமைத்துவம்

கூட்டுத்தாபனத்தின் ஒழுக்காற்று முகாமைத்துவத்தினை கிரமமாக பேணுவதற்காக பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்ட "ஒழுக்காற்று கோவைஇ+ 2013 ஜுன் 21 தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் ஒழுக்காற்று முகாமைத்துவம் சொல்லப்பட்ட கோவையின் ஏற்பாடுகளின் கீழ் காணப்படுகின்றது.
அதற்கிணங்க, ஒழுக்க மீறல் பற்றி அறிக்கையிடப்பட்டதன் பின்னர் நடைபெற்ற பூர்வாங்க விசாரணைகளைத் தொடர்ந்து இரகசியங்களை வெளியிட்டது தொடர்பில் 16 ஊழியர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் 04 ஊழியர்கள் பதவி விலக்கப்பட்டதுடன் கடுமையான தண்டனையுடன் 04 ஊழியர்களை மீள் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## செயலாற்றுகை முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவம் தொடர்பில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய கூட்டுத்தாபனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்ற **"நிருவாக நடைமுறைஇ+** இற்கான பணிப்பாளர்கள் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

## ஊழியர்படை

2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வேலைப்படை 1213 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 102 ஒப்பந்த அடிப்படை ஊழியர்கள் உள்ளடங்கலாக 1315 ஊழியர்களைக் கொண்டிருந்தது.

# வழங்கல் பிரிவு

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவு 2013 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடையப் பெறுவதற்கு பாரிய அளவில் பங்களித்துள்ளது. உச்ச விலையில் உரிய காலத்தில் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளுதல் அனேகமான கருத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்வதற்கு பங்களிப்பு செய்துள்ளது. பெறுகை செயன்முறைகளுக்கு பின்வரும் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பெறுகை தரவுத் தளத்தினை நிறுவுதல், அத்தகைய செயற்பாடுகளில் ஒன்று. அத்துடன் சகல பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு கொள்வனவு கோரிக்கை பற்றிய விரிவான தகவல்களை இது உள்ளடக்குகின்றது. தரவுத் தளம் காலதாமத்தினை குறைப்பதற்கும், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் பங்களித்தது.
- ஏனைய பிரிவிகளுக்கு மத்தியில் முறையான தொடர்பாடல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டதுடன் பிரதானமாக மத்திய களஞ்சியசாலை, வேலைப் பட்டறை, எரிபொருள் களஞ்சியம், போக்குவரத்து பிரிவு, மற்றும் வழங்கல் பிரிவுகள் என்பவற்றின் செயன்முறைகளை சீரமைப்பதற்கு சமகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிரிவு முன்னேற்றக் கூட்டங்கள் செயன்முறையினை ஒருங்கமைப்பதற்கும் நிலவுகின்ற முட்டுக்கட்டைகளைக் குறைப்பதற்கும் பயனுள்ளதாகவிருந்தன.
- இனங் காணப்பட்ட கருத்திட்டங்களில் பெறுகைச் செயன்முறையினை ஒருங்கிணைப்பதற்கென வழங்கல் பிரிவிலிருந்து பிரதிநிதி ஒருவர் குறித்தொதுக்கப்பட்டார்.
- தேவையற்ற கால தாமதம் மற்றும் ஏனைய பொருட் கொள்வனவு கொண்டு செல்லுதல் செலவுகளை தவிர்ப்பதற்காக விரைவாக நகரும் நுகர்வோர் பொருட்கள் போன்ற அடிக்கடி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக “விலை அனுமதிகள்ү+ அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதான கடமைப் பொறுப்பிற்கு மேலதிகமாக பிரிவு கூட்டுத்தாபனத்திற்கு பல பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் செயற்பாடுகளையும் கூட்டிணைத்து அறிமுகப்படுத்தியது.

- தேசிய பெறுகை முகவர் நிலையத்தினால் வகுக்கப்பட்ட வழிகாட்டல்களை கடைப்பிடித்து பெறுகை செயன்முறையினை தாபிப்பதற்காக இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனிகளுடன் வழங்கல் பிரிவில் உள்ள நிபுணத்துவ அறிவு பகிர்ந்து கொள்ளப்பட்டது.
- இக்காலத்தின் போது இலங்கையில் நடைபெற்ற மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் 13’ - இலங்கையின் பிரதிபலிப்பு கண்காட்சியில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இப்பிரிவின் 03 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன வியாபார அபிவிருத்தி அணியில் இப்பிரிவின் அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதுடன் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் கிடையான ஒருங்கிணைப்பு செயன்முறைகளுக்கான தீர்வொன்றாக ''கிரிமண்டல மாவத்தையில் எரிபொருள் நிலையத்தினை நிறுவுதல்ழ+ கருத்திட்டத்தில் அவர்கள் செயற்பாட்டுடன் ஈடுபட்டனர்.

# சட்ட பிரிவு

சட்ட பிரிவு, 1968 இன் 15 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து திருத்தங்களினால் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தொழிற்படுகின்றது.

சட்ட விடயங்கள்:

1. காணி பெற்றுக் கொள்ளல், அபிவிருத்தி, குடியேற்றம் மற்றும் கட்டாய மீள்குடியேற்றம்.
2. பொதுப் பயன்பாடுகள் (விசேடமாக நீர் வழங்கல், சுகாதாரம், மற்றும் நகர உட்கட்டமைப்புகள்)
3. காணி அபிவிருத்தி, மீள்குடியேற்றம் தொடர்பில் சட்ட ஆவணங்களை வரைதல், சமூக ஆலோசனை மற்றும் குறைந்த வருமான குடியிருப்பு பகுதிகளில் வாழும் மக்களுக்கு சட்ட உதவியினை வழங்குதல்
4. கூட்டுத்தாபனம் மற்றம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்காடல்களுக்கு எதிராக கூட்டுத்தாபனத்தினை பாதுகாத்தல்
5. கூட்டுத்தாபனத்தின் நாளாந்த சட்ட விடயங்களுடன் தொடர்புடைய அனைத்து கருமங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்
6. சட்டத்திற்கு புறம்பாக காணி நிரப்புதல், வடிகாலமைப்பு வடிவங்களில் வழங்கப்பட்ட நிபந்தனைகளை மீறுதல், இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 2006 இன் 35 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களினுள் கால்வாய் ஒதுக்குகளில் சட்டத்திற்கு புறம்பாக குடியேறுதல் மற்றும் கால்வாய்களை மாசுபடுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
7. அனைத்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள், விற்பனை உடன்படிக்கைகள், ஒப்பந்த / ஆலோசனை உடன்படிக்கைகள், நீண்டகால குத்தகை, வருடாந்த குத்தகை, குறுகிய கால குத்தகை, காணி உறுதி அறுதி, தொடர்புடைய சட்ட ஆவணங்கள் மற்றும் வெளிநாட்டு தொழில் முறிகள் (கொடுப்பனவு அற்ற / கொடுப்பனவுடன்) வாகன கடன் ஒப்பந்தம், அட்டோணி தத்துவம் மற்றும் காணி இசைவுச் சான்றிதழுக்கான காணி உறுதி ஒப்பந்தம் போன்றவற்றை தயாரித்தலும் உறுதிப்படுத்தலும்
8. திருத்தத்துடனான சட்டம் போதாமையாக இருந்தது உணரப்பட்டது. எனவே சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் தற்போதைய சட்டத்தினை திருத்துவது முக்கியமானதாக தோற்றம் பெற்றுள்ளது. புதிய சட்டத்தின் வரைவு அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகளையும் தமது அறிக்கையினையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

**பிரதான செயற்பாடுகள்**

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் தொழிற்பாட்டு மீளாய்வு (பக்கம் 9 தொடக்கம் 70) மற்றும் அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று (பக்கம் 73) ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ளன.

**ஆண்டின் தொழிற்பாட்டு மீளாய்வு**

தொழிற்பாட்டு மீளாய்வு ஆண்டின் போதான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய விரிவான மீளாய்வொன்றினை வழங்குகின்றது.

**புரள்வு**

ஆண்டின் போதான புரள்வு ரூபா. 1,478 மில்லியன் ஆக இருந்தது. 2012 இல் இது ரூபா. 2,174 ஆகும். இதற்கு பிரதான காரணம் கடல் மணல் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் நிர்மாணக் கருத்திட்டங்களிலிருந்தான வருமானக் குறையும் ஆகும். அதேவேளை எமது பதவியினர் சக்தி மற்றும் அனைத்து வளங்களும் திறைசேரியினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டன.

**இலாபம்**

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின் போது கூட்டுத்தாபனம் 2012 இல் காணப்பட்ட ரூபா. 32 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னர் ரூபா. 118 மில்லியன் தொகையினை ஈட்டியது. 2013 ஆம் ஆண்டிற்கான வரிக்கு பிந்திய இலாபம் 104 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டில் வரி மற்றும் அறவீடுகளுக்கு பின்னர் இது 68 மில்லியன் நட்டம் ஒன்றாக இருந்தது.

**விவகாரங்கள் பற்றிய கூற்று**

கூட்டுத்தாபனத்தின் விவகாரங்கள் பற்றிய கூற்று நிதியியல் நிலை கூற்றில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றம் உபகரணம்**

இவ்வாண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண அசைவு, கணக்குகளுக்கான குறிப்பு 9 இல் காட்டப்பட்டுள்ளது.

**வரி விதிப்பு**

***வருமான வரி***

வருமான வரிக்கான ஏற்பாடு 2006 இல் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க வரி விதிப்பு நோக்கங்களுக்காக சரிப்படுத்தல் செய்யப்பட்டவாறு ஆண்டிற்கான இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.

***பிற்போடப்பட்ட வரி***

பிற்போடப்பட்ட வரி பொறுப்பு முறை மீது ஏற்பாடு செய்யப்பட்டுளளதுடன் பிற்போடப்பட்ட வரி விதிப்பு கணக்கின் மீதி பின்வருவனவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்றது;

i) பெறுமானத் தேய்வு கொடுப்பனவு கோரப்பட்ட சொத்துக்கள் மீது வரி நோக்கத்திற்காக எழுதப்பட்ட பெறுமதி மற்றும் அத்தகைய சொத்துக்களின் தேறிய பதிவேட்டு பெறுமதிக்கு இடையிலான வேறுபாட்டிற்கு ஏற்புடைய வருமான வரி.

ii) ஓய்வு நலனுக்கான ஏற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற கால வேறுபாட்டிற்கு ஏற்புடைய வருமான வரி.

# பணிப்பாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

*பிற்போடப்பட்ட வரி*

பிற்போடப்பட்ட வரி பொறுப்பு முறை மீது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பிற்போடப்பட்ட வரி விதிப்பு கணக்கின் மீதி பின்வருவனவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்றது;

i) பெறுமானத் தேய்வு கொடுப்பனவு கோரப்பட்ட சொத்துக்கள் மீது வரி நோக்கத்திற்காக எழுதப்பட்ட பெறுமதி மற்றும் அத்தகைய சொத்துக்களின் தேறிய பதிவேட்டு பெறுமதிக்கு இடையிலான வேறுபாட்டிற்கு ஏற்புடைய வருமான வரி.

ii) ஓய்வு நலனுக்கான ஏற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற கால வேறுபாட்டிற்கு ஏற்புடைய வருமான வரி.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள்**

பணிப்பாளர்கள், நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 19 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர கூட்டுத்தாபனத்துக்கான ஒப்பந்தங்கள் அல்லது முன்மொழியப்பட்ட ஒபப்நதங்களில் நேரடியான அல்லது நேரடியற்ற நலன்களை கொண்டிருக்கவில்லை.

**தொடர்ந்து செயலாற்றல்**

தொடர்ந்து செயலாற்றுவதற்கு கூட்டுத்தாபனம் இயலுமையைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர்.

**நிதியிச் சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் நியதிச் சட்ட கொடுப்பனவுகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் திருப்தியடைகின்றனர்.

**ஊழியர்கள்**

2013 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனம் 1315 பேருக்கு தொழில் வழங்கியிருந்தது.

**ஐந்தொகைக்கு பிந்திய நிலுவைகள்**

நிதியியல் நிலை கூற்றுக்கு பின்னர் நிகழ்கின்ற அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு அவசியமான சரிப்படுத்தல்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அதிவிசேட விடயங்கள்**

வேறான வெளிப்படுத்தலை வேண்டுகின்ற விதிவிலக்கான / அதிவிசேட தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்கள்**

2013 ஆம் ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகளை கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் கணக்காய்வு செய்யும்.

சபையின் கட்டளைப் படி
இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்காக

செயலாளர்

26/02/2014

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } டிஈ-2/ஈ/எஸ்எல்எல்ஆர்டிசீ/1/13/24    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2015 பெப்ரவரி 16

தலைவர்

இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

**இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திச் கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1968 இன் 16 ஆம் இலக்க இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உரிய துணைக்கம்பனிகளினது உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனங்களினால் கணக்காய்வு நடாத்தப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

# நிதியியல் நிலைக்கூற்று
டிசம்பர் 31 அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு

| | குறிப்பு | 2013 ரூபா.000 | 2012 ரூபா.000 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் | 9 | **704,214** | 398,956 |
| முதலீட்டு ஆதனங்கள் | 10 | **501,354** | 501,354 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 11 | **2,000** | 2,000 |
| ஏனைய முதலீடுகள் | 12 | **-** | 793,045 |
| | | **1,207,568** | 1,695,355 |
| **நடைமுறை சொத்துகள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 13 | **3,630,170** | 3,007,366 |
| வர்த்தகமும் ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவையும் | 14 | **616,265** | 509,039 |
| வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும் | | **10,484** | 8,197 |
| தொடர்புடைய திறத்தவர் கிடைக்கப் பெறத் தக்கவை | | **41,381** | 45,537 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 15 | **863,613** | 396,999 |
| **மொத்த நடைமுறை சொத்துகள்** | | **5,161,913** | 3,967,138 |
| **மொத்த சொத்துகள்** | | **6,369,481** | 5,662,493 |
| **ஒப்புரவும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | | **1,000** | 1,000 |
| மூலதன ஒதுக்கு | | **13,461** | 13,461 |
| வருமான ஒதுக்கு | | **2,091,860** | 1,987,961 |
| **மொத்த மூலதனமும் ஒதுக்குகளும்** | | **2,106,321** | 2,002,422 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| காணிகள் மீதான நட்டஈடு | | **328,351** | 580,305 |
| ஏனைய நடைமுறையற்ற பொறுப்புகள் | 16 | **772,764** | 470,817 |
| பணிக் கொடை ஏற்பாடுகள் | | **209,469** | 273,605 |
| பிற்போடப்பட்ட வரி விதிப்பு | | **(60,393)** | (56,341) |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புகள்** | | **1,250,191** | 1,268,386 |

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

(i) பல செலவின விடயங்கள் வருமானம் மற்றும் உரிய செலவினங்களுடன் நேரடியாக தெடர்புபட்டிருக்காத ஏனைய வளங்கள் என்பவற்றிற்கு எதிராக சரிசெய்யப்பட்டு பொருத்தமற்ற முறையில் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. இந்த வழியில், ரூபா 1,232,948 தொகையான மோட்டார் வாகனங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவினம் மற்றும் ரூபா 25,239,000 தொகையான விற்பனைச் செலவினம் முறையே பெறப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் முழுக் கடனிற்குமான நட்ட மற்றும் ஐயக் கடனிற்கான ஏற்பாடு என்பன எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ii) ரூபா 85,872,486 பெறுமதியான கூட்டுத்தாபனத்தின் நிலையான வைப்புக்கள் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களிற்கு (எல்சீஎஸ்) எதிராக ஈடுவைக்கப்பட்டிருந்ததுடன் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எல்கேஏஎஸ் 02 –பொருளிருப்பு பதிவுகள்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கடல் விற்பனைகள் நிர்மாண வேலைத்தளங்களில் நிலவிய குறைந்த கேள்வி காரணமாக கடந்த சில ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக நிராகரித்திருந்தது. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 1,975,225,000 தொகையான 2,431,922 கனமீற்றர் கடல் மண் இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி காட்டப்பட்டது. எவ்வாறாயினும், இந்த இருப்பின் உள்ளபடியான தேறக்கூடிய பெறுமதியை நிர்ணயிப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இதன்படி கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) எல்கேஏஎஸ் 08 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்

கூட்டுத்தாபனமானது வாடிக்கையாளர் ஒப்பந்தங்களை மாத்திரம் கொண்டிருக்காத ஆனால் அரசாங்கம் நிதியளித்த ஒப்பந்தங்களும் மேந்தலை செலவினங்களை சாட்டுதல் செய்வதற்கு மேந்தலை செலவினம் தொடர்பான

அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றியிருந்தது. அவற்றின் மீது மீளாய்வாண்டின் போது ரூபா 200,396,000 தொகையான வருமானம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நிதிசார் விளைவுகளிற்கான அவற்றின் அளவு போதியளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எல்கேஏஎஸ்- 16 –ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

(i) மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்த முடியாதிருந்த ரூபா 55,569,805, ரூபா 492,344,796 மற்றும் ரூபா 79,802,986 இல் கொள்வனவு செய்யப்பட்ட முறையே கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் உள்ளபடியான பொருளாதார ஆயுள் காலத்தை மீள்பெறுமதியிடப்பட்டு நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் அவற்றின் பெறுமானத்தேய்வு என்பன குறிப்பிடத்தக்களவு தொகை குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ii) "வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள்" ஆக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 815,419,000 மீதி கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மற்றும் அத்தகைய மீதிகளின் தன்மையை பகுப்பாய்வு செய்யப்படாமல் நடைமுறைச் சொத்துக்களில் காட்டப்பட்டது. ஆகவே, அத்தகைய மீதிகளை பிரதிநிதித்துப்படுத்தியிருந்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் அவற்றின் பெறுமானத்தேய்வு குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

**(உ) எல்கேஏஎஸ்- 18 –வருமானம்**

அடுத்த 28 ஆண்டுகளிற்காக சுதுநெலும்புர வீடமைப்பு திட்டத்தின் போக்கிலிருந்து ரூபா 47,836,982 தொகையான வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட வீடமைப்பு திட்டம் தொடர்பில் 30 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த 17,508,851 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்டுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) எல்கேஏஎஸ்- 21 –வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் தாக்கம்**

கடல் மண் அகழ்தல் செயற்திட்டத்தை ஒப்படைத்திருந்த ஒப்பந்தகாரருக்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 84,768,000 இற்கு சமமான யூரோ 575,000 தொகை 2013 திசெம்பர் 31 இல் செய்யப்பட்ட தவறான நாணய பரிவர்த்தனைகள் காரணமாக ரூபா 18,992,015 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 287,353,000 கிரயத்தில் சுவீகரிக்கப்பட்ட காணி அதன் மூலதனத் தன்மையை கருத்திற்கொள்ளாமல் பொருளிருப்பு பதிவேட்டு விடயமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் புறம்பாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) வழமைபோல், கூட்டுத்தாபனமானது கணிப்பீட்டுச் சபை ஊடாக ஆண்டின் இறுதியில் கையிலிருந்த பொருட்களின் பெறுமதியை கருத்திற்கொள்ளமல் ஆண்டிற்கான வருமானத்திற்கு எதிராக ஆண்டின் போது ரூபா 8,133,000 தொகையான பொருளிருப்புக்கள் மற்றும் வேறு நுகர்வுப்பொருள் விடயங்களின் மொத்தக் கிரயத்தை பதிவழித்திருந்தது. ரூபா 1,170,572 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வருமானத்திற்கு எதிராக பொருளிருப்புக்கள் மற்றும் வேறு நுகர்வுப்பொருள் விடயங்கள் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தில் அத்தகைய விடயங்கள் இருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலப்பகுப்பாய்வின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 431,950,843 கூட்டுமொத்தத் தொகையான மொத்த கடன்ப்ட்டோர் மீதிகளுக்குள் 2 – 5 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக நிலுவையாகவிருந்த ரூபா 29,815,591 ஆன கடன்பட்டோர் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 15,208,384 கூட்டுமொத்தத் தொகையான மொத்த கடன்ப்ட்டோர் மீதிகள் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) காணி விற்பனைகள் தொடர்பில் வெளி நபர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 517,471,282 கூட்டுமொத்தத் தொகையான மொத்த விற்பனை முற்பணங்களில், ரூபா 489,683,191 ஆன முற்பணங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது. மேலும், ரூபா 1,035,242 கூட்டுமொத்தத் தொகையான செலுத்தப்பட்ட வேறு முற்பணங்கள் 1--5 ஆண்டுகள் வரையான

வீச்செல்லைகொண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்தது. தொடர்புபட்ட தரப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,000,000 தொகையும் 2012 இலிருந்து தீர்க்கப்படாமல் இருந்தது.

(இ) காணி விற்பனைகளில் பெறப்பட்டவைகளில் செலுத்த வேண்டிய இறைகளிற்கான ஏற்பாட்டு தொகையான ரூபா 44,538,761 பொதுத் திறைசேரிக்கு அனுப்பட்டிருக்காமல் 1999 இலிருந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தனியார் கம்பனியொன்றிடமிருந்து நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 50,000,000 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

(உ) 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்த ரூபா 1,912,544 தொகையான கடன்பட்டோர் மீதிகள் நிர்மாண ஒப்பந்தங்களில்கடன்கொடுத்தோர் மீதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 3,259,714 தொகையான வெளிநாட்டுப் பயிற்சியளித்தலிற்காக எடுக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக பாஸ்போட் (சம்பந்தப்பட்ட பக்கங்களின் சான்றுபடுத்திய பிரதிகள்), பட்டியல்கள் மற்றும் ஏனைய விபரங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 இன் 35 ஆம் இலக்க நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 2(அ)(4) ஆம் பிரிவு | அத்துமீறிய நில ஆக்கிரமிப்புக்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத பல சந்தர்ப்பங்கள் உள்ளன. |

(ஆ) 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டம்

| | |
|---|---|
| (i) அதிகாரம் 203 இன் பிரிவு 2(i) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யாமல் தியத உயனவில் பயணிகள் போக்குவரத்திற்காக மூன்று மின்சார கார்கள் பயன்படுத்தப்பட்டன. |
| (ii) பிரிவு 99 | மூன்றாம் தரப்பினருக்கான காப்புறுதி மேவுகை உரிய மின்சார கார்களிற்காக பெறப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) பந்தி இல. 9.14 | ஒவ்வொரு கூட்டுத்தாபனமும் மனித வள முகாமைத்துவம் தொடர்புபட்ட சரிசெய்தல் விடயங்களில் வழிகாட்டல் வழங்கும் நோக்கில் மனித வள முகாமைத்துவ அத்தியாயத்தில் உள்ளடக்குகின்ற நடைமுறைக் கைநூல் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளை பின்பற்ற முடியாது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பந்தி 8.3.9 | கூட்டுத்தாபனம் வெளி நிறுவனங்களிற்கு 05 ஊழியர்களை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கைக்கு முரணாக சம்பளங்கள் மற்றும் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,521,873 தொகை செலவழிக்கப் பட்டிருந்தது. மேலும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனமொன்று வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா அவற்றின் மீது ரூபா 495,435 தொகையான ஓடுகின்ற கிரயம் ஏற்பட்டிருந்தது. உரிய |

நிறுவனங்களிடமிருந்து கூட்டுத்தாபனத்தால் ஏற்பட்ட கிரயங்களை மீளெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007 திசெம்பர் 05 ஆந் திகதிய இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கை

(i) பந்தி 2.7 — பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவில் முற்பணங்கள் கோருகின்ற நேரத்தில் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் அவ்வாறான மதிப்பீடுகள் இல்லாமல் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) பந்தி 3.1 — முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்ப்பதில் தாமதப்படுமாயின் முற்பணத் தொகைகளில் 25 சதவீத தண்டப்பணங்கள் விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ரூபா 1,045,625 தொகையான தண்டப்பணங்கள் விதிக்கப் பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான தொகுதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 15,933,000 மற்றும் ரூபா 42,527,000 ஆன நேரொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 140,945,000 மற்றும் ரூபா 118,295,000 ஆன வரிக்கு முந்திய இலாபத்தில் விளைவித்திருந்தமையால் தொகுதி மற்றும் கூட்டுத்தானத்தின் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 156,878,000 மற்றும் ரூபா 160,822,000 ஆன முன்னேற்றத்தை காட்டுகின்றது. கடல் மண் விற்பனைகள் மீதான விலைத் தளம்பல்களிற்கான கோரிக்கையாக வெளித்தரப்பினரிடமிருந்து ரூபா 78,600,000 ஆன பெறுவனவுகள், திறைசேரி நிதியிடப்பட்ட செயற்திட்டங்களிற்கு மேந்தலை செலவினங்களிற்கு சாட்டுதல் செய்தமை காரணமாக ரூபா 200,396,000 ஆல் வருமானம் மற்றும் தியத உயன நடவடிக்கைகளிடமிருந்து ரூபா 27,678,000 ஆன

இலாபத்தை உழைத்தல் என்பன மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான பங்களிப்பு செய்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் விளைவுகள்

### 3.2.1 வர்த்தக நடவடிக்கைகளின் இலாபத்தன்மை

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ஈடுபடுத்தப்பட்ட பல வர்த்தக நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| நடவடிக்கை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| | ரூபா 000 | ரூபா 000 |
| காணி விற்பனைகள் | 50,457 | 89,270 |
| கடல் மண் விற்பனைகள் | (8,865) | 134,316 |
| நிர்மாண ஒப்பந்தங்கள் | 23,757 | 58,395 |
| ஆலோசனை சேவைகள் | 5,532 | 14,776 |
| நில நிரப்பல் வேலைகள் | 15,505 | 9,043 |
| ஆறு, கடலிருந்து மணல் வாரும் நடவடிக்கைகள் | 13,475 | 53,649 |
| நானாவித செயற்திட்டங்கள் | (11,370) | 55,771 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நில மீட்டல் நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளைத் தவிர சகல நடவடிக்கைகளிலிருந்தான கூட்டுத்தாபனத்தின் இலாபம் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2.2 கூட்டுத்தாபத்தின் ஸ்திரத்தன்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால ஸ்திரத்தன்மையினை விபரிக்கின்றது.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 64,818,000 மற்றும் ரூபா 163,288,000 ஆன தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டமை.

(ஆ) கடந்தாண்டின் இறுதியில் உள்ள ரூபா 1,190,044,000 ஆன நிலையான மற்றும் அழைப்பு வைப்புக்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 564,861,139 தொகையான நிலையான வைப்புக்களின் மீளெடுப்பு. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிலையான மற்றும் அழைப்பு வைப்புக்களின் பெறுமதி ரூபா 626,604,000 இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) 2013 திசெம்பரில் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் செலுத்தவேண்டிய ரூபா 535,231,216 ரூபா பொறுப்புக்கள் இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 793,045,000 கூட்டுமொத்தத் தொகையான பணிக்கொடை ஏற்பாடுகளிற்கு எதிராக இழப்பீடுகள் செய்வதற்கு ஏனைய முதலீடுகளின் மீளெடுப்பு.

### 3.3 சட்ட வழக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலுவையாகவிருக்கின்ற பெறுபேறுகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளித்தரப்பினரால் 37 சட்ட வழக்குகள் தொடரப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. மேலும், 38 சட்ட வழக்குகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்காத வெளித்தரப்பினருக்கு எதிராக கூட்டுத்தாபனத்தால் தொடரப்பட்டது.

(ஆ) பல சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளின் அத்துமீறி குடியிருப்போருக்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுதாபனமானது நாட்டின் அத்துமீறிய நில மீட்டல்களின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு 2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தானத்தின் (திருத்திய) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை அதிகாரச்சட்டத்தின் 2(அ)(1) ஆம் பிரிவின் கீழ் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன்படி, இலங்கையில் சகல மாகாணங்களிலும் உள்ள குறைவாக பயன்படுத்துகின்ற சதுப்பு, தரிசு நிலம் அல்லது சேற்றுநிலம் என்பன கூட்டுத்தாபனத்தால் விசேடமாக இனங்காணப்பட்டு வர்த்தமாணி அறிவித்தல்களில் வெளியிடப்படவேண்டும். எவ்வாறாயினும், மேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள அத்தகைய காணிகள் மாத்திரம் இனங்காணப்பட்டதுடன் நாட்டின் வேறு மாகாணங்களில் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், 10 செயற்திட்டங்கள் ரூபா 833,600,000ஆன மதிப்பிடப்பட்ட கிரயம் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹம்பாந்தோட்டை பகுதிகளில் பாதுகாப்புகூடாரங்கள் நிர்மாணிக்கின்ற மற்றும் மடிவெலவில் வடிகால் முறைமையை முன்னேற்றுகின்ற இரண்டு செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் மீது முறையே ரூபா 11,700,000 மற்றும் ரூபா 2,840,000 தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்செயற்திட்டங்கள் முறையான காரணங்கள் இல்லாமல் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இந்த அறிக்கையின் 2.3.1(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, முன்னைய ஆண்டின் போது கடல் மண்ணின் தேவை திடீரென நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, முன்னைய ஆண்டின் போது கடல் மண்ணின் விற்பனைகள் ஊடாக உருவாக்கப்பட்ட ரூபா 782,550,000 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 77,674,000 வரை வீழ்த்தப்பட்டது. எவ்வாறாயினும், நிர்மாண நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தக்கூடிய கடல் மண்கள் தொடர்பிலும்

நிர்மாண நோக்கங்களிற்காக கடல் மண் பாவனைகளை பொது மக்களிற்கு இடையில் மேலோங்கச் செய்வதற்கு நிபுணர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களை பெறுவதற்கு கூட்டுத்தாபனத்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதிக்கட்டுப்பாடுகள்

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட விசேட முற்பணங்கள் மீதான நிதிக் கட்டுப்பாடு கூட்டுத்தாபனத்தால் திருப்திகரமாக அமுலக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) கூட்டுத்தாபனம் 512 சந்தர்ப்பங்களில் ரூபா 11,468,867 கூட்டுமொத்தத் தொகையான விசேட முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் முழு முற்பணங்களும் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் 03 சந்தர்ப்பங்களில் மீளளிக்கப்பட்டிருந்தது. மேலும் 14 சந்தர்ப்பங்களில் ரூபா 10,000 அல்லது மேலானது மீளளிக்கப்பட்டிருந்தது. முற்பணங்களை வழங்குகின்ற ஆரம்ப கட்டத்தின் முறையான மதிப்பீடுகள செய்யப்பட்டிருக்காததுடன் பொது மக்கள் நிதிகளை தவறாக பயன்படுத்தவதற்கும் வழிகளை அனுமதித்திருந்தது.

(ii) மேற்குறிப்பிட்டவற்றிக்கு மேலதிகமாக, பெறப்பட்ட முற்பணங்கள் போதாமை காரணமாக அவர்களுடைய தனிப்பட்ட நிதிகளில் 19 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யும் உத்தியோகத்தர்களால் ரூபா 20,000 முதல் ரூபா 80,000 வரையான செலவினம் கூட்டுத்தாபனத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 206,880,216 தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீது புறம்பான முதலீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

## அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 |
| **4 நிர்வாகச் செலவுகள்** | | |
| பணிப்பாளர்கள் கட்டணம் | **891** | 810 |
| சம்பளங்களும் கூலிகளும் | **356,612** | 322,740 |
| பதவியிநர் நலனோம்புகை | **12,903** | 12,999 |
| அச்சிடுதலும் காகிதாதிகளும் | **8,133** | 7,838 |
| தொலைபேசியும் தபாற் செலவும் | **4,265** | 3,924 |
| பருவகால சஞ்சிகைகளும் வெளியீடுகளும் | **905** | 332 |
| பிரயாணமும் படிகளும் | **306** | 370 |
| மோட்டார் வாகன தொழிற்பாட்டு மற்றும் பராமரித்தல் செலவு | **51,289** | 39,344 |
| அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் பராமரிப்பு | **2,628** | 2,798 |
| பொதுச் செலவுகள் | **4,498** | 2,218 |
| தொழில்சார் செலவுகள் | **2,656** | 2,495 |
| மருத்துவ செலவுகள் | **15,778** | 15,393 |
| பயிற்சி, ஆராய்ச்சி ஆய்வு மற்றும் அபிவிருத்தி | **4,873** | 1,980 |
| கணக்காய்வு கட்டணங்கள் | **150** | 450 |
| மிகை ஊதியம் | **16,500** | 13,143 |
| பணக்கொடையும் ஊழியர்களுக்கான நட்டஈடும் | **(57,629)** | 17,550 |
| அத்திட்டியவில் விற்கப்பட்ட காணிக்கான நட்டஈடு | **1,614** | 41 |
| மெதுவாக நகரும் பொருட்களுக்கான ஏற்பாடு | **3,686** | 996 |
| | **430,058** | 445,421 |

## 5 ஏனைய தொழிற்படுத்தல் செலவுகள்

### 5.1 தாபனச் செலவுகள்

| | 2013 | 2012 |
|---|---|---|
| வாடகையும் குத்தகை வரியும் | **636** | 1,693 |
| கட்டிடப் பராமரிப்பு | **5,236** | 9,820 |
| மின்சாரமும் நீர் வழங்கலும் | **9,794** | 8,610 |
| காப்புறுதி | **5,108** | 4,214 |
| | **20,774** | 24,337 |

உள்ளபடியான தேவைகளை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பதற்கான சான்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் குறைவான முன்னேற்றம் காரணமாக கூட்டுதாபனத்தால் இம் முறைமை நிராகரிக்கப்பட்டிருந்தது. வழங்குநரால் 2014 யூலை 17 இல் ரூபா 7,944,375 மாத்திரம் மீளளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், கூட்டுத்தாபனம் கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் 2013 திசெம்பர் 31 இல் இன்னொரு தரப்பினருக்கு ரூபா 17,478,400 கிரயத்தில் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது.

(ஈ) தியட்ட உயனவில் நீர் ஊற்றின் கட்டுக்கான ஒப்பந்தம் வேறு தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளைக் கருத்திற்கொள்ளாமல் ரூபா 16,950,000 கிரயத்தில் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை இராணுவம் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பைக் பெற்றுக்கொள்ளாமல் தனியார் தரப்பினருக்கு வேலைகளை ஒப்படைத்திருந்தது. மேலும், வடிவமைப்பு வேலைகளை அங்கீகரிக்காமல் வேலைகள் தொடங்கப்பட்டிருந்ததுடன் உரிய வடிவமைப்பு முதலாவது இடைக்கால கொடுப்பனவு செய்யும் நேரத்தில் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 4.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 15,349,908 தொகையான வரிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தது என்று அவதானிக்கப்பட்டது.

## 4.5 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனமானது கொள்வனவு நடைமுறையைக் கருத்திற்கொள்ளாமல் வாகன இறக்குமதியாளராக பதிவுசெய்யப்பட்டிருக்காத தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 11,245,000 கிரயத்தில் மூன்று மின்சாரக் கார்கள் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சீஐஎவ் பெறுமதி மற்றும் உள்ளூர் வரிகள் உள்ளடங்கலான மொத்தக் கிரயம் ரூபா 4,765,096 ஆக இருந்தது. ஆகவே, வழங்குநரின் இலாப எல்லை ரூபா 6,479,905 ஆக இருந்தது. மேலும், கார்களின் செசி இலக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உரிய இலக்கங்களுடன் உடன்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது.

(ஆ) கொழும்பு பெரும்பாக வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டம், ராகம மற்றும் மையுராபுரவில் கழுஓயா செயற்திட்டம் மற்றும் ஹம்பாத்தோட்டையில் செயற்திட்டமொன்று என்பவற்றின் அமுலாக்கலிற்காக பெறப்பட்ட ரூபா 722,769,000 கூட்டு மொத்தத் தொகையான பயன்படுத்தப்படாத திறைசேரி மானியங்கள் பொதுத் திறைசேரிக்கு உரிய மீதிகளை மீளளிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் பல ஆண்டுகளாக கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் இருந்தது.

(இ) கூட்டுத்தாபனமானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்து தேவையான பங்களிப்புகளை கணிப்பிடுகையில் உரிய அதிகாரச் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் ஒத்திருக்கவில்லை என்று பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. அதாவது மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் அவற்றின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை செய்வதற்கான சாத்தியத்தன்மை கணக்காயில் நம்பிக்கை கொள்ளமுடியாதிருந்தது.

(ஈ) 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நோக்கங்களிற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீது ரூபா 287,214,101 தொகையான இழப்பீடு மற்றும் வட்டி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1979 இலிருந்து நிலுவையாக இருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 இலிருந்து தண்ணீர் முன்பக்க அபிவிருத்தி கம்பனியாக அறிந்த துணைநிலைக் கம்பனியிடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 77,706 காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தற்போது அப்பெயரில் வேறு எந்தக் கம்பனியும் செயற்பாட்டில் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஊ) கூட்டுத்தாபனமானது மீளாய்வாண்டின் போது தியட்ட உயனவில் கட்டிடமொன்று வாடகைக்கு விடப்பட்டதால் ரூபா 37,815,000 ஆன வருமானம் உழைத்திருந்தது. எவ்வாறாயினும், தியட்ட உயனவில் ஆதனங்கள் கூட்டுத்தாபனத்திற்கு உரிய காணியின் சட்டரீதியான உரிமையாண்மையை உடமையாக்கப்பட்டிருக்காமை காரணமாக சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வருமானமாக கருதப்பட முடியாதிருந்தது.

**4.6 வெளிப்படையான மோசடிக் கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பார ஊர்தி வாகனச் சாரதி மீளாய்வாண்டின் போது மோசடியான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பித்ததன் மூலம் ரூபா 34,620 தொகையான நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய உபபாகங்களின் அனுமதிக்கப்படாத கைதவிர்ப்பு 05 சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனமானது ஒப்பந்தத்திற்காக ஒரு கேள்வியாளர் மாத்திரம் பதிலளித்த நிலையில் ரூபா 6,000,000 ஆன கிரயத்தில் மணலை ஏற்றியிறக்கவதற்கான ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், இக்கொடுக்கல்வாங்கல்கள் கேள்வி கோருவதற்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநரால் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பித்திருந்தமை வெளிப்படையான மேசடியான தன்மையாய்யிருந்தன.

**4.7 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப்பயன்படுத்திய சொத்துக்கள்**

ரூபா 89,114,981 பெறுமதியான பல்வேறு வகைகளிலுள்ள இருப்பு விடயங்கள் மெதுவாக நகருவதாக இருந்தமை வெளிப்பட்டதுடன் அதில், ரூபா 33,681,466 பெறுமதியான சில இருப்பு விடயங்கள் 05 ஆண்டுகளிற்கு மேலாக களஞ்சியங்களில் இருந்தது.

**4.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலத்தின் 14 சதவீதத்தை பிரதிபலிக்கும் இணைந்த கம்பனியின் பங்கு மூலதனத்தில் செய்யப்பட்ட ரூபா 2,000,000 முதலீடு உரிய கம்பனி நிதிக்கூற்றுக்களில் இந்த முதலீட்டை பதிவழிப்பதற்கான ஏற்பாட்டை செய்யப் பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது எந்தவித நிதி பெறுகைகளையும் பெற்றிருக்கவில்லை.

**4.9 மனிதவள முகாமைத்துவம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட பதவியணி 1,525 உத்தியோகத்தர்களை கொண்டிருந்த போதிலும், உள்ளபடியான பதவியணி 1,317 ஆக மாத்திரம் இருந்தது. ஆதலால், கூட்டுத்தாபனம் 2013 திசெம்பர் 31 அளவில் நிலவிய 208 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியமான படிமுறைகளை எடுத்திருக்கவில்லை.

மேலும், சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள 45 பதவிகள் அத்திகதியில் வெற்றிடமாக இருந்தது. இருந்த போதிலும், துணைக்கம்பனியின் ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது தற்காலிக அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களிற்கு நேரடியாக ரூபா 793,689 தொகையான ஊக்குவிப்புகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனமானது நாடு பூராவும் சதுப்பு, தரிசு நிலம் அல்லது சேற்றுநிலம் என்பன இனங்காண்பதற்கு ஒப்படைக்கட்பட்டதுடன் அனுமதிக்கப்படாத நில மீட்டல்களின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பிற்கு இயலக்கூடிய வர்த்தமான அறிவித்தல்களை வெளியிட்டது. எவ்வாறாயினும், உரிய பணிகளின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2013 -2017 வரையான கூட்டிணைந்த திட்டத்திலோ அல்லது 2013 ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திலோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத்திட்டம்

2012 இல் தொடங்கப்பட்டிருந்த 10 செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக 78 செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆதலால், வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் செயல்நடவடிக்கை திட்டங்கள் ஊடாக பயனுள்ளதாக பதிவுசெய்திருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஏனைய வளங்களின் ஆக்கபூர்வமான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பிற்கு இயலக்கூடியவாறு 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கட்டுப்பாடு

திருத்த வேண்டியிருந்த பகுதிகளில் முகாமைத்துவத்தால் தேவைப்பட்ட வழிகாட்டல்களை நிரூபிப்பதற்காக முக்கியமான கருவியாக உள்ளக கணக்காய்வு பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், அர்த்தமுள்ள விளைவுகளை அடைவதற்கு கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை விரிவாக்குவதுடன் உள்ளக கணக்காய்வு

உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு பெரிய மட்ட நிர்மாண ஒப்பந்தகாரராக கூட்டுத்தாபனத்தால் முறைப்படி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மண் வாரல் மீதான வருமானம், கடல் மண் விற்பனை, ஆலோசனை சேவைகள் மற்றும் தண்டப்பணங்கள் மற்றும் மண் வாரல் மற்றும் நானாவித செலவினங்கள் என்பன தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கு இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டது, ஆதலால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்பீடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 5.6 முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

மீளாய்வாண்டு இறுதி வரையும் முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் எழுந்த பின்வரும் விடயங்கள் தீர்க்கப்படாமல் இருந்தது.

(அ) கூட்டுத்தாபனம் உரிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களிற்கான தொழில்சார் படிக் கொடுப்பனவை தொடர்ந்திருந்தது.

(ஆ) வாகனக் கடன்கள் மீதான வட்டி தொடர்ச்சியாக உரிய உத்தியோகத்தர்களிற்கு மீளளிக்கப்பட்டது.

(இ) அப்பகுதியின் பிரதேச செயலளரின் உதவியுடன் ரூபா 30.2 மில்லியன் கிரயத்தில் கூட்தாபனத்தால் விருத்தி செய்யப்பட்டிருந்த 3.5 ஏக்கர் பரப்பளவுள்ள காணியில் கோவில் கட்டியவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2012 நவம்பர் 31 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் நெறிப்படுத்தலொன்றை பொது முயற்சிகள் குழு செய்திருந்தது. எவ்வாறாயினும், நெறிமுறைப்படுத்தலை அமுல்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் எவ்வித நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லை.

## 5.7 சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்

நாடுபூராகாவும் நிலவுகின்ற அனுமதிக்கப்படாத நில மீட்டல்கள் பல சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சனைகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் அவை எதிர்கால சந்ததியினருக்கு தள்ளப்பட வேண்டியிருக்கும் எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் அத்தகைய

அனுமதிக்கப்படாத நில மீட்டல்களை பொதுமக்கள்களிற்கு புகட்டுவதற்கும் தவிர்ப்பதற்கும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தியிருக்கவில்லை.

## 3.6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு.
(ஆ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்
(இ) கணக்கீடு
(ஈ) முற்பணத் தீர்ப்பனவு

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

## அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று

**அறிக்கையிடும் காலம் 2013.01.01 – 2013.12.31**

| | குறிப்பு | | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| | | | ரூபா 000 | ரூபா 000 |
| வருமானம் | 1 | | **1,478,028** | 2,173,919 |
| விற்பனைச் செலவுகள் | 2 | | **1,166,777** | 1,681,228 |
| **மொத்த இலாபம்** | | | **311,251** | 492,691 |
| கிடைக்கபெற்ற மொத்த திறைசேரி அளிப்பு | | **1,024,999** | | 926,390 |
| உறப்பட்ட மொத்தச் செலவு | | **(1,024,999)** | - | (1,069,284) |
| | | | | (142,894) |
| தொழிற்பாட்டுத் வருமானம் பார்க்க | 3 | | **54,162** | 60,533 |
| நிருவாகச் செலவுகள் | 4 | **(430,058)** | | (445,421) |
| தொழிற்பாட்டு செவவுகள் -பார்க்க | 5 | **(200,569)** | | (128,197) |
| | | **(630,627)** | | (573,618) |
| திறைசேர் அளிப்புக் கருத்திட்டங்களுக்க அறவிடப்பட்ட மேலதிகச் செலவுகள் | | **200,396** | | - |
| | | | **(430,231)** | (573,618) |
| **தொழிற்பாடுகளில் இருந்து இலாபம் / ( நட்டம்)** | | | **(64,818)** | (163,288) |
| நிதிச் செலவு | 6 | | **(13,754)** | (21,032) |
| தொழிற்படா வருமானம் | 7 | | **196,867** | 216,791 |
| **வரி விதிப்பு அறவீடுகளுக்கு முன்னர் இலாபம் / (நட்டம்)** | | | **118,295** | 32,471 |
| திரட்டு நிதியத்திற்கு செலுத்தப்பட்ட நிதி | | | - | (75,000) |
| **வரி விதிப்புக்கு முன்னர் இலாபம் / ( நட்டம்)** | | | **118,295** | (42,529) |
| வரி விதிப்பு ஏற்பாடுகள் | 8 | | **(14,396)** | (25,646) |
| **ஆண்டுக்கான வரி விதிப்பிற்கு பிந்திய இலாபம் / (நட்டம்)** | | | **103,899** | (68,175) |

அடைப்புக்குறிக்குள் உள்ளவை கழித்தலை காட்டுகின்றன.

75 தொடக்கம் 91 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்கான முக்கிய பாகம் ஒன்றை தோற்றுவிக்கின்றன.

## ஒப்புரவு மாற்றக் கூற்று

**அறிக்கையிடும் காலம் 2013.01.01 – 2013.12.31**

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா.000 | மூலதன ஒதுக்கு ரூபா.000 | வருமான ஒதுக்கு ரூபா.000 | மொத்தம் ரூபா.000 |
|---|---|---|---|---|
| 2012.01.01 இல் மீதி | 1,000 | 13,461 | 2,056,136 | 2,070,597 |
| ஆண்டுக்கான இலாபம் / ( நட்டம்) | - | - | (68,175) | (68,175) |
| 2012.12.31 இல் மீதி | 1,000 | 13,461 | 1,987,961 | 2,002,422 |
| 2013.01.01 இல் மீதி | 1,000 | 13,461 | 1,987,961 | 2,002,422 |
| ஆண்டுக்கான இலாபம் / ( நட்டம்) | - | - | 103,899 | 103,899 |
| 2013.12.31 இல் மீதி | 1,000 | 13,461 | 2,091,860 | 2,106,321 |

75 தொடக்கம் 91 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்கான முக்கிய பாகம் ஒன்றை தோற்றுவிக்கின்றன.

# நிதியியல் நிலைக்கூற்று

டிசம்பர் 31 அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு

| | குறிப்பு | 2013<br>ரூபா.000 | 2012<br>ரூபா.000 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் | 9 | **704,214** | 398,956 |
| முதலீட்டு ஆதனங்கள் | 10 | **501,354** | 501,354 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 11 | **2,000** | 2,000 |
| ஏனைய முதலீடுகள் | 12 | **-** | 793,045 |
| | | **1,207,568** | 1,695,355 |
| **நடைமுறை சொத்துகள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 13 | **3,630,170** | 3,007,366 |
| வர்த்தகமும் ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவையும் | 14 | **616,265** | 509,039 |
| வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும் | | **10,484** | 8,197 |
| தொடர்புடைய திறத்தவர் கிடைக்கப் பெறத் தக்கவை | | **41,381** | 45,537 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 15 | **863,613** | 396,999 |
| **மொத்த நடைமுறை சொத்துகள்** | | **5,161,913** | 3,967,138 |
| **மொத்த சொத்துகள்** | | **6,369,481** | 5,662,493 |
| **ஒப்புரவும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | | **1,000** | 1,000 |
| மூலதன ஒதுக்கு | | **13,461** | 13,461 |
| வருமான ஒதுக்கு | | **2,091,860** | 1,987,961 |
| **மொத்த மூலதனமும் ஒதுக்குகளும்** | | **2,106,321** | 2,002,422 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| காணிகள் மீதான நட்டஈடு | | **328,351** | 580,305 |
| ஏனைய நடைமுறையற்ற பொறுப்புகள் | 16 | **772,764** | 470,817 |
| பணிக் கொடை ஏற்பாடுகள் | | **209,469** | 273,605 |
| பிற்போடப்பட்ட வரி விதிப்பு | | **(60,393)** | (56,341) |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புகள்** | | **1,250,191** | 1,268,386 |

# நிதியியல் நிலைக்கூற்று (தொடர்ச்சி)
**டிசம்பர் 31 அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு**

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா.000 | ரூபா.000 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| விசேட கருத்திட்டங்கள் மீதான பொறுப்புகள் | 17 | **1,146,384** | 733,960 |
| வர்த்தகமும் ஏனைய செலுத்தத்தக்கவையும் | 18 | **1,872,674** | 1,634,572 |
| தொடர்புடைய திறத்தவர்களுக்கு செலுத்தத்தக்கவை | | **26,713** | 37,931 |
| வரி விதிப்பு | | **(33,996)** | (14,778) |
| வங்கி மேலதிகப் பற்று | 15 | **1,194** | - |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **3,012,969** | 2,391,685 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புகள்** | | **6,369,481** | 5,662,493 |

பணிப்பாளர் சபைக்காவும் சார்பாகவும் அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

**தவிசாளர்** **பொது முகாமையாளர்** **பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**

26.02.2014

## காசுப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| | 2013<br>ரூபா.000 | 2012<br>ரூபா.000 |
|---|---|---|
| **தொழிற்படும் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னர் தொழிற்படு இலாபம் ∴ (நட்டம்) | **118,295** | (42,530) |
| முன்னைய ஆண்டுக்கான ஏனைய சரிப்படுத்தல்கள் | - | 60,718 |
| | **118,295** | 18,188 |
| **சரிப்படுத்தல்கள்** | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | **(57,629)** | 17,550 |
| தேய்மான ஏற்பாடுகள் | **79,916** | 70,468 |
| குத்தகை காணிகளுக்கான பெறுமதி குறைப்பு ஏற்பாடுகள் | **24** | 24 |
| விற்பனை செய்யப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டு ஏற்பாடுகள் | **2,369** | 4,933 |
| மெதுவாக நகரும் பதிவேட்டு பொருட்களுக்கான ஏற்பாடுகள் | **3,686** | 996 |
| ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | **(11,775)** | (80,894) |
| பதிவழிக்கப்பட்ட வராக் கடன்கள் | - | 28,192 |
| ரீல் முதலீட்டுக்கான ஏற்பாடுகள் | - | 2,000 |
| வட்டி வருமானம் | **(94,579)** | (152,606) |
| நிலையான சொத்துகள் மற்றும் உபயோகப்படுத்தாத பொருட்கள் மீதான இலாபம் | **(2,440)** | (892) |
| வரி விதிப்புக்கான மேலதிக ஏற்பாடுகள் | - | (1,515) |
| | **37,866** | (93,556) |
| **பணியாற்றும் மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| பதிவேட்டுப் பொருட்கள் (அதிகரிப்பு) / குறைவு | **(650,812)** | (363,601) |
| முன்னெடுக்கப்படும் பணி (அதிகரிப்பு) / குறைவு – சொந்தக் கருத்திட்ட அபிவிருத்தி | **(73,141)** | 6,574 |
| முன்னெடுக்ப்படும் பணி (அதிகரிப்பு) / குறைவு – சேவை நாடி கருத்திட்ட அபிவிருத்தி | **(137,464)** | 38,213 |
| ஏனைய கருத்திட்டங்களின் முடிவுறுத்தப்பட்ட பணி (அதிகரிப்பு) / குறைவு | **8,778** | 1,519 |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைவு | **(2,287)** | 969 |
| முற்பணக் கொடுப்பனவு திரட்டலில் (அதிகரிப்பு) / குறைவு | **(25,884)** | 98,733 |
| விற்பனை மற்றும் ஏனைய கிடைக்கப் பெறத் தக்கவையில் (அதிகரிப்பு) / குறைவு | **(53,587)** | (103,656) |
| தொடர்புடைய திறத்தவர் கிடைக்கப் பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | **4,156** | 55,653 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | **643,912** | (1,905,119) |
| தொடர்புடைய திறத்தவர் செலுத்தத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | **(11,219)** | 35,077 |
| **தொழிற்பாடுகளிலிருந்து /(பயன்படுத்தப்பட்ட) ஈட்டப்பட்ட காசு** | **(259,682)** | (2,229,194) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | **(6,507)** | 10,047) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட வருமான வரி | **(37,658)** | (21,367) |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | **(303,847)** | 2,260,608) |

## காசுப் பாய்ச்சல் கூற்று (தொடர்ச்சி)

டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| | 2013<br>ரூபா.000 | 2012<br>ரூபா.000 |
|---|---|---|
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் பெற்றுக் கொள்ளல் | **(76,627)** | (164,733) |
| பிற்போடப்பட்ட பொறுப்புகளில் முதலீடுகள் | **793,045** | (15,561) |
| கிடைக்கப் பெ்றற வட்டி வருமானம் | **78,598** | 125,366 |
| நிலையான சொத்துகள் உபயோகமற்ற பொருட்கள் விற்பனை வரவு | **2,502** | 1,047 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | **797,518** | (53,881) |
| **நிதியியல் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்சச்ல்** | | |
| கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டியும் நட்டஈடும் | **(28,251)** | (10,955) |
| | | - |
| **நிதியியல் செயற்பாடுகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | **(28,251)** | (10,955) |
| ஆண்டின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | **465,420** | (2,325,444) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | **396,999** | 2,722,443 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை (குறிப்பு –ஆ) | **862,419** | 396,999 |

குறிப்பு - அ

| | | |
|---|---|---|
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | **36,975** | 46,741 |
| நிரந்தர வைப்புகள் | **826,638** | 200,000 |
| தற்காலிக மிகை பொறுப்பு நிதி | - | 150,258 |
| ரெபோ | - | - |
| | **863,613** | 396,999 |
| வங்கி மேலதிகப் பற்று | **(1,194)** | - |
| | **862,419** | 396,999 |

75 தொடக்கம் 91 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்கான முக்கிய பாகம் ஒன்றை தோற்றுவிக்கின்றன.

# முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

## 1. கணக்கீட்டு அடிப்படை

நிதியியல் கூற்றுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் இலங்கை பட்டயக் கண்க்காளர் நிறுவகத்தினால் முன்வைக்கப்பட்ட 2011 இன் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்/ இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்குகளை பாதிக்கின்ற பண வீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. பொருத்தமான வகையில் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் இதனைத் தொடர்கின்ற குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தினால் முரண்பாடற்று பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுடன் தொடர்புடையவற்றுடன் முரண்பாடற்றுக் காணப்படுகின்றது. அத்துடன் முன்னைய ஆண்டின் தரவுகள், நடைமுறை ஆண்டினை எடுத்துரைத்தலுடன் இணங்குவதற்கு அவசியமான இடங்களில் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

<u>ஒன்றுதிரட்டிய நிதியியல் கூற்றுகள் தயாரித்தல் அடிப்படை</u>

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய நிதியியல் கூற்றுகள் அதன் துணை நிறுவனமான காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி பிரைவட் லிமிடட் நிறுவனத்தை உள்ளடக்குகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தினால் முரண்பாடற்று பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுடன் தொடர்புடையவற்றுடன் முரண்பாடற்றுக் காணப்படுகின்றது. அத்துடன் முன்னைய ஆண்டின் தரவுகள், நடைமுறை ஆண்டினை எடுத்துரைத்தலுடன் இணங்குவதற்கு அவசியமான இடங்களில் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

கூட்டுத்தாபனத்தினாலும் அதன் குழுமத்தினாலும் பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் முரண்பாடற்று காணப்படுகின்றது.

திரட்டிய நிதியியல் கூற்றுகள் அதே சூழ்நிலைகளில் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளுக்காக ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவசியமான இடங்களில் நிதியியல் கூற்றுகளில் சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் காணப்படும் உருக்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

கூட்டுத்தாபனமும் அதன் துணை நிறுவனங்களும் டிசம்பர் 31 இல் முடிவடைகின்ற பொதுவான நிதியாண்டு ஒன்றினை கொண்டுள்ளன.

## 2. சொத்துகளும் அவற்றின் பெறுமதி மதிப்பீட்டுக்கான அடிப்படைகளும்

### 2.1 ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம்

ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் என்பன கொள்வனவு அல்லது நிர்மாண கிரயத்தில் ஒன்று சேர்ந்த தேய்மானத்தை கழித்து குறிப்பிடப்பட்டுள்ளன. கொள்வனவு அல்லது நிர்மாண செலவு, சொத்துக்களை அதன் உத்தேசித்த பயன்பாட்டு பணியாற்றும் நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் சாட்டத்தக்க செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

பாரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்பாடு கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற கட்டிடங்கள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள் ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ் தனியாகக் காட்டப்பட்டுள்ளது.

லுனாவ சுற்றாடல் மேம்படுத்தல், சமூக அபிவிருத்திக் கருத்திட்டம் அதேபோன்று கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற சொத்துகள் ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் கீழ் வேறாக கணக்கிடப்பட்டுள்ளன.

அமைச்சுக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற (இலவசம்) வாகனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வேறாக கணக்கிடப்பட்டுள்ளது.

### 2.2 தேய்மானம்

தேய்மானம், சொத்துகள் அவை எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தத்தக்க ஆயுட் காலத்தின் மீது நேர் நிறை அடிப்படை ஒன்றில் அவற்றின் கிரயத்தினை பதிவழிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட வருடாந்த விகிதம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் நிரந்தரம் | 5% |
| கட்டிடங்கள் அரை நிரந்தரம் | 10% |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 12.5% |
| ஆதனம், இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | 25% |
| தொடர்பாடல் உபகரணங்கள் | 25% |
| துவிச்சக்கர வண்டிகள், சிறிய வேலை பட்டறை உபகரணங்கள் | 50% |
| நிலை மாற்றிகள் | 10% |

காணி கிரயத்தினை பதிவழிப்பதற்கு தேய்மானம் ஏற்பாடு செய்யப்படவில்லை.

இவ்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் மீதான தேய்மான அறவீடு பின்வரும் அடிப்படையில் காணப்படுகின்றது:

(1) மார்ச் 31 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் - முழுமையான வருடாந்த தேய்மானம்
(2) ஏப்ரல் 01 மற்றும் ஜூன் 30 இற்கு இடையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் - வருடாந்த தேய்மானத்தின் ¾
(3) ஜூலை 01 மற்றும் செப்டெம்பர் 30 இற்கு இடையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் - வருடாந்த தேய்மானத்தின் ½
(4) ஒக்டோபர் 01 மற்றும் டிசம்பர் 31 இற்கு இடையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் - வருடாந்த தேய்மானத்தின் ¼

அகற்றப்படும் ஆண்டில் தேய்மானம் அறவிடப்படவில்லை.

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பொது கையிருப்புகள் குறைந்த கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முதல் உள் வந்தது முதல் வெளிச் செல்லல் அடிப்படையில் நிகரத் தேறத்தக்க பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது. உபயோகத்திலிருந்து அகற்றிய மெதுவாக நகரும் பொருட்களுக்காக அவசியமான விடத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல் மண் கையிருப்பு கழிவுக்கான வீதம் ஒன்றினை உள்ளடக்கி மண் அகற்றுதல் செலவினை மாத்திரம் கணக்கிட்டு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4 முன்னெடுக்கப்படும் பணி

முன்னெடுக்கப்படும் பணி ஐந்தொகை திகதியன்று முன்னெடுக்கப்படுகின்ற நீண்ட கால கருத்திட்டங்களுடன் தொடர்புபடுவதுடன் நேரடி செலவினத்தை உள்ளடக்குகின்ற கிரயத்தில் அத்துடன் கருத்திட்டதிற்கு சாட்டத்தக்க மதிப்பிடப்பட்ட மேலதிக செலவிகளில் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது.

### 2.5 கிரயத்தில் நிறைவு செய்யப்பட்ட பணி

இவை ஐந்தொகை திகதியன்று உள்ளவாறு உண்மையாக பூர்த்தி செய்யப்பட்ட பணியின் கிரயத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. முத்துராஜவல மணல் நிரப்பும் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்ட பணியின் செலவு இக்கருத்திட்டத்தின் உயர் பெறுமதியின் காரணமாக தனியான விடயம் ஒன்றாக காட்டப்பட்டுள்ளது.

### 2.6 வரத்தகமும் ஏனைய கிடைக்கப்பெறத் தக்கவையும்

கடன் படுநர்கள், தேறத்தக்க தொகைக்கு அவர்கள் மதிப்பிடப்பட்ட தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு மேற்பட்டு காணப்படுகின்ற வரா மற்றும் ஐயக் கடன்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.7 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும், கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள், உயர் திரவத்தன்மை கொண்ட குறுகிய கால முதலீடுகள் பணத்தின் அறியப்பட்ட தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடியவை மற்றும் பெறுமதி மாற்றத்தில் முக்கியமற்ற இடர்களுக்கு உட்படாதவை என்பன வரையறை செய்யப்பட்டுள்ளன. காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும், கையிலுள்ள காசு, ரெபோ உள்ளடங்கலாக வங்கி வைப்புகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் அத்துடன் தேறிய வங்கி மேலதிகப் பற்றுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 2.8 அரசாங்க அளிப்புகள்

நீண்ட கால சொத்து வடிவில் கிடைக்கப்பெற்ற அரசாங்க அளிப்புகள், பிற்போடப்பட்ட வருமானம் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் சொத்தின் பயன்பாடுமிக்க ஆயுள் காலத்தின் மீது வருமானம் ஒன்றாக வருடாந்தம் அடையாளப்படுத்தப்படுகின்றது. தொழிற்பாட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய வளங்கள் மாற்ற வடிவில் இவ்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற அரசாங்க அளிப்புகள் ( நீண்ட கால சொத்துகள் தவிர) அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றும் முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்க அளிப்புகளுக்கு தொடர்புபடுகின்ற நிபந்தனைகளும் ஏனைய எதிர்பாரா செலவுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும்.

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

அனைத்து தகைமை பெறும் ஊழியர்களுக்குமாக 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் கீழ் செலுத்தப்படத்தக்க முடிவுறுத்தல் நலன்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நலனுக்கு கூட்டுத்தாபனத்தில் தொடர்ச்சியாக 05 வருட சேவையினை பூர்த்தி செய்கின்ற ஊழியர்கள் தகைமை பெறுவதுடன் சேவையின் முதல் வருடத்திலிருந்து உரித்துடையவர்களாவர். இப்பொறுப்பு வெளிவாரியாக நிதியளிக்கப்பட்டதல்ல. பணிக்கொடைக்கான ஏற்பாடு 2013 இல் கொடுக்கப்பட வேண்டிய தொகை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.1.1 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

**(அ) ஊழியர் சேமலாப நிதியம்**

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூட்டுத்தாபனம் 12% பங்களிப்பதுடன் ஊழியர்கள் 10% பங்களிக்கின்றனர். நடைமுறை ஆண்டிற்காக செலவொன்றாக அடையாளப்படுத்தப்பட்ட மொத்த தொகை ரூ. 84.87 மில்லியன் ஆகும்.

**(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஊழியர் சார்பாக கூட்டுத்தாபனம் 3% பங்களிப்பு செய்கின்றது. நடைமுறை ஆண்டிற்காக செலவொன்றாக அடையாளப்படுத்தப்பட்ட மொத்த தொகை ரூ. 11.57 மில்லியன் ஆகும்.

### 3.2 கணக்காய்வு கட்டணங்கள்

2013 இற்கான கணக்காய்வு கட்டணங்கள் 2012 ஐ அடிப்படையாகக் கொண்டவை.

### 3.3 (i) வருமான வரி

வருமான வரிக்கான ஏற்பாடு, 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய வரி விதிப்பு நோக்கங்களுக்காக சரி செய்யப்பட்டவாறு ஆண்டிற்கான இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.3 (ii) பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி பொறுப்பு முறை மீது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பிற்போடப்பட்ட வரி கணக்கு மீதி பின்வருவனவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது:

i) தேய்மான ஒதுக்கீடுகள் கோரப்பட்ட சொத்துகள் மற்றும் அத்தகைய சொத்துகளின் தேறிய புத்தகப் பெறுமதி என்பவற்றிற்கிடையிலான வரி விதிப்பு நோக்கத்திற்காக எழுதப்பட்ட வேறுபாட்டுக்கு ஏற்புடைய வருமான வரி.

ii) ஓய்வு நலத்திற்கான தேய்வுகளிலிருந்து தோன்றுகின்ற கால வேறுபாட்டிற்கு ஏற்புடைய வருமான வரி

### 3.4 மேலதிகச் செலவுகள்

2013 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் அனேகமாக திறைசேரியினால் அளிப்பு செய்யப்பட்ட கருத்திட்டங்களை கொண்டு நடாத்தியது. எனவே, 30% இற்கு சமமான தொகையொன்றைக் கொண்ட மேலதிகச் செலவுகள் திறைசேரி அளிப்புச் செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்காக அறவிடப்பட்டுள்ளது.

## 4. வருமானக் கூற்று

### 4.1 புரள்வு

புரள்வு ஆண்டின் போது விலைப்பட்டியல் பெறுமதி/ சான்றுபடுத்தப்பட்ட பணியினை உள்ளடக்குகின்றது. ஆனால் திறைசேரி கருத்திட்டங்கள் மீது வழங்கப்பட்ட சேவைகளை உள்ளடக்கவில்லை.

புரள்வு பின்வருவனவற்றிலிருந்து வருமானத்தினை உள்ளடக்குகின்றது:

(1) அபிவிருத்தி செய்யப்பட்ட சொந்தக் காணிகளின் விற்பனை
(2) சேவை நாடிகளுக்கான மீட்டல் பணி
(3) மணல் அகற்றுதல்
(4) நிர்மாணித்தல்
(5) காணிக் குத்தகை
(6) கடல் மணல் விற்பனை
(7) காணி சுத்தப்படுத்தல்
(8) ஆலோசனை
(9) பல்வகைக் கருத்திட்டங்கள்

வருமானம் பொதுவாக ஒன்று சேர்ந்த அடிப்படைக்காக கணக்கிடப்பட்டுள்ளது.

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

### 4.2 காணி விற்பனையில் வருமானத்தை கருத்திற் கொள்ளல்

பொது ஏல விற்பனைகள் மூலம் காணிகள் விற்பனை செய்யப்படும் போது காணி விற்பனையின் முழுப் பெறுமதியும் ஐந்தொகை திகதிக்கு பின்னர் அத்தகைய மீதிகள் கொடுப்பனவு செய்யப்படாமல் இருப்பின் கடன் படுதல் ஒன்றாக கொள்வனவாளரினால் செலுத்தப்படத்தக்க ஏதேனும் மீதியினைக் கருத்திற் கொண்டு வருமானமாக கொள்ளப்பட்டுள்ளதுடன், அதை தீர்ப்பனவு செய்வதற்கு சில ஐயப்பாடுகள் நிலைத்திருக்கும்.

கேள்வி வேறு ஏதேனும் வித்தில் காணி விற்கப்படும்போது, காணி உறுதிகள் நிறைவேற்றப்பட்ட அல்லது அனைத்து கொடுப்பனவுகளும் கிடைக்கப்பெற்ற போது அத்துடன் விற்பனை மாற்று உறுதி நிறைவேற்றுதல் நிகழாமை இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் பொதுவாக பெறுமதி வருமானமாகக் கொள்ளப்படுகின்றது.

### 4.3 நிர்மான ஒப்பந்தங்கள்

வருமான அடையாளப்படுத்தல்

ஒப்பந்தத்தின் பெறுபேறுகள் நம்பத்தகுந்தவாறு உள்ளபோது ஒப்பந்த வருமானம் ஐந்தொகை திகதியன்று ஒப்பந்த செயற்பாட்டின் முடிவுறுத்தல் கட்டத்தினை தொடர்பு படுத்தி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சான்று படுத்துதப்பட்ட அனைத்து பணிகளும் வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

செலவின அடையாளப்படுத்தல்

சான்றுபடுத்தப்பட்ட பணிக்கு சாட்டப்படக்கூடிய இவ்வாண்டின் போதான ஒவ்வொரு ஒப்பந்தம் தொடர்பிலும் ஏற்பட்ட மொத்த செலவு விற்பனை கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் பெறுபேறு நம்பத்தகுந்தவாறு அளவிடப்படக்கூடியவாறு உள்ளபோது ஒப்பந்த செலவு ஐந்தொகை திகதியன்று ஒப்பந்த செயற்பாடு நிறைவுக் கட்டத்துடன் தொடர்புபடுத்தி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 5. அதிவிசேட விடயங்கள்

அனைத்து தொடர்புடைய விடயங்களும் கணக்குகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 6. ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிகழ்ந்த அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதியியல் கூற்றுக்களுக்கு தொடர்புடைய குறிப்புக்களில் அவசியமான இடங்களில் சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | 2013 ரூபா.000 | 2012 ரூபா.000 |
|---|---|---|
| **1 வருமானம்** | | |
| காணி விற்பனைகள் | **67,139** | 110,843 |
| மீட்டல் | **51,393** | 39,505 |
| பல்வகைக் கருத்திட்டங்கள் | **46,362** | 102,736 |
| மணல் அகழ்வு | **385,656** | 106,617 |
| நிர்மாணம் | **611,375** | 939,421 |
| கடல் மணல் | **77,674** | 782,550 |
| கடல் மணல் விலை உயர்வு | **78,600** | - |
| காணிக் குத்தகைகள் | **68,297** | 64,296 |
| ஆலோசனைச் சேவைகள் | **5,532** | 14,776 |
| காணி சுத்தப்படுத்தல் | **5,251** | 8,846 |
| தியத உயன கருத்திட்டம் | **37,815** | 4,329 |
| சுதுநெலும்புர வீடமைப்பு கருத்திட்டம் | **42,934** | - |
| | **1,478,028** | 2,173,919 |

## 2 விற்பனைச் செலவுகள்

| | 2013 | 2012 |
|---|---|---|
| காணி விற்பனைகள் செலவு | **16,682** | 21,573 |
| மீட்டல் செலவு | **35,888** | 30,462 |
| பல்வகைக் கருத்திட்டங்கள் செலவு | **57,732** | 46,965 |
| மணல் அகற்றுதல் செலவு | **372,181** | 52,968 |
| நிர்மாணச் செலவு | **587,618** | 881,026 |
| கடல் மணல் செலவு | **86,539** | 648,234 |
| தியத உயன கருத்திட்டச் செலவு | **10,137** | - |
| | **1,166,777** | 1,681,228 |

## 3 ஏனைய தொழிற்படு வருமானம்

| | 2013 | 2012 |
|---|---|---|
| வழங்குநர்களைப் பதிவு செய்தல் | **784** | 1,699 |
| தண்டப் பணங்களும் மேலதிக விதிப்புகளும் | **678** | 969 |
| நானாவித வருமானம் | **50,210** | 52,128 |
| நிலையான சொத்துகள் மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்கள் மீதான விற்பனை இலாபம் | **2,440** | 893 |
| செலாவணி மாற்று பெறுகை | **50** | 4,844 |
| | **54,162** | 60,533 |

## அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 |
| **4** | **நிர்வாகச் செலவுகள்** | | |
| | பணிப்பாளர்கள் கட்டணம் | **891** | 810 |
| | சம்பளங்களும் கூலிகளும் | **356,612** | 322,740 |
| | பதவியிநர் நலனோம்புகை | **12,903** | 12,999 |
| | அச்சிடுதலும் காகிதாதிகளும் | **8,133** | 7,838 |
| | தொலைபேசியும் தபாற் செலவும் | **4,265** | 3,924 |
| | பருவகால சஞ்சிகைகளும் வெளியீடுகளும் | **905** | 332 |
| | பிரயாணமும் படிகளும் | **306** | 370 |
| | மோட்டார் வாகன தொழிற்பாட்டு மற்றும் பராமரித்தல் செலவு | **51,289** | 39,344 |
| | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் பராமரிப்பு | **2,628** | 2,798 |
| | பொதுச் செலவுகள் | **4,498** | 2,218 |
| | தொழில்சார் செலவுகள் | **2,656** | 2,495 |
| | மருத்துவ செலவுகள் | **15,778** | 15,393 |
| | பயிற்சி, ஆராய்ச்சி ஆய்வு மற்றும் அபிவிருத்தி | **4,873** | 1,980 |
| | கணக்காய்வு கட்டணங்கள் | **150** | 450 |
| | மிகை ஊதியம் | **16,500** | 13,143 |
| | பணக்கொடையும் ஊழியர்களுக்கான நட்டஈடும் | **(57,629)** | 17,550 |
| | அத்திட்டியவில் விற்கப்பட்ட காணிக்கான நட்டஈடு | **1,614** | 41 |
| | மெதுவாக நகரும் பொருட்களுக்கான ஏற்பாடு | **3,686** | 996 |
| | | **430,058** | 445,421 |

| | | | |
|---|---|---|---|
| **5** | **ஏனைய தொழிற்படுத்தல் செலவுகள்** | | |
| 5.1 | **தாபனச் செலவுகள்** | | |
| | வாடகையும் குத்தகை வரியும் | **636** | 1,693 |
| | கட்டிடப் பராமரிப்பு | **5,236** | 9,820 |
| | மின்சாரமும் நீர் வழங்கலும் | **9,794** | 8,610 |
| | காப்புறுதி | **5,108** | 4,214 |
| | | **20,774** | 24,337 |

## அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | 2013<br>ரூபா.000 | 2012<br>ரூபா.000 |
|---|---|---|---|
| **5.2** | **தேய்மானம்** | | |
| | கட்டடங்கள் | **3,515** | 2,414 |
| | மோட்டார் வாகனங்கள் | **20,281** | 17,327 |
| | மோட்டார் வாகனங்கள் - அமைச்சு | **1,000** | 500 |
| | மின்சாரக் கார் | **-** | 297 |
| | கணனியும் துணைக் கருவியும் | **4,261** | 2,728 |
| | அலுவலக உபகரணங்கள் | **1,374** | 1,091 |
| | தளபாடமும் பொருத்துகளும் | **1,241** | 900 |
| | நலனோம்புகை உபகரணம் | **220** | 145 |
| | அளவீட்டுக் கருவிகள் | **545** | 356 |
| | துவிச்சக்கர வண்டி | **11** | 18 |
| | கணனியும் துணைக் கருவியும் (வேரஸ்கங்க கருத்திட்டம்) | **57** | 484 |
| | நலனோம்புகை உபகரணம் (வேரஸ்கங்க கருத்திட்டம்) | **2** | 2 |
| | நலனோம்புகை உபகரணம் (கொபெநஅக) | **6** | - |
| | அலுவலக உபகரணங்கள் (கொபெநஅக) | **52** | 47 |
| | தளபாடங்களும் பொருத்துகளும் (கொபெநஅக) | **60** | 64 |
| | கணனியும் துணைக் கருவிகளும் (கொபெநஅக) | **484** | 43 |
| | லுனாவ கருத்திட்ட சொத்துகள் | **50,896** | 65,442 |
| | கொபெநஅக சொத்துகள் | **50,394** | - |
| | | **134,399** | 91,858 |
| **5.3** | **விற்பனை செலவுகள்** | | |
| | வரா மற்றும் ஐயக் கடன்படுநருக்கான ஏற்பாடு | **(31,773)** | (80,894) |
| | பதிவழிக்கப்பட்ட வராக் கடன்கள் | - | 28,192 |
| | வரா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு (சுதுநெலும்புர) | **19,998** | - |
| | விளம்பர மற்றும் ஊக்குவித்தல் செலவுகள் | **984** | 3,015 |
| | கண்காட்சி செலவுகள் | **4,257** | 6,847 |
| | | **(6,534)** | (42,840) |
| **5.4** | **ஏனையவை** | | |
| | கருத்திட்டங்களுக்கு செலவிடப்பட்ட மேலதிகச் செலவுகள் | **(7,004)** | (234) |
| | பொறித் தொகுதி மற்றும் உபகரண பிரிவு மீதான பற்றாக்குறை/ மிகை | **21,651** | 36,088 |
| | கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | **37,283** | 18,988 |
| | | **51,930** | 54,842 |
| | | **200,569** | 128,197 |
| **6** | **நிதி கட்டணங்கள்** | | |
| | வங்கிக் கட்டணங்கள் | **307** | 219 |
| | விற்கப்பட்ட காணிகள் மீதான நட்டஈட்டுக்கான வட்டி | **1,263** | 1,386 |
| | முத்திரை தீர்வை | **23** | 11 |
| | குத்தகை காணி பெறுமதி கழிவு | **24** | 24 |
| | நிர்மாண அறவீடு | **4,227** | 2,721 |
| | கருதப்பட்ட பங்கிலாப வரி | - | 11,351 |
| | தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி | **7,910** | 5,320 |
| | | **13,754** | 21,032 |

## அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | 2013 ரூபா.000 | 2012 ரூபா.000 |
|---|---|---|---|
| **7** | **தொழிற்பாடற்ற வருமானம்** | | |
| **7.1** | **வட்டி வருமானம்** | | |
| | திறைசேரி உண்டியல் வருமானம் | - | 15,264 |
| | முதலீட்டு வருமானம் | **66,177** | 95,049 |
| | ரெபோ வட்டி வருமானம் | **28,402** | 42,293 |
| | | **94,579** | 152,606 |
| **7.2** | **சொத்துகள் பெறுமதி கழிவு** | | |
| | லுனாவ சொத்துகள் பெறுமதி கழிவு | **50,895** | 65,442 |
| | கொபெநகஅக சொத்து பெறுமதி கழிவு | **50,393** | - |
| | மின்சாரக் கார் பெறுமதி கழிவு | - | 243 |
| | வாகன பெறுமதி கழிவு – அமைச்சு | **1,000** | 500 |
| | | **102,288** | 66,185 |
| 7.3 | ரீல் முதலீட்டு ஏற்பாடுகள் | - | (2,000) |
| | | **196,867** | 216,791 |
| **8** | **வட்டிச் செலவுகள்** | | |
| | வருமான வரி ஏற்பாடு | **18,448** | - |
| | பிற்போடப்பட்ட வரி | **(4,052)** | 25,646 |
| | | **14,396** | 25,646 |
| **8.1** | **கணக்கீட்டு வருமானம் மற்றும் வருமான வரி இணக்கம்** | | |
| | வரி விதிப்புக்கு முன்னர் இலாபம் / நட்டம் | **118,295** | (42,529) |
| | முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்கள் | - | - |
| | கூட்டுக: அனுமதியளிக்க முடியாத செலவுகள் | **134,416** | 180,183 |
| | | **252,711** | 137,655 |
| | கழி: அனுமதிக்கத்தக்க செலவுகள் | **(539,748)** | (437,287) |
| | வர்த்தக இலாபம்/(நட்டம்) | **(287,037)** | (299,632) |
| | வட்டி வருமானம் | **101,365** | 153,810 |
| | 2010/2011 இலிருந்து நட்ட எதிரீடு | **(35,478)** | - |
| | வரி விதிக்கத்தக்க வருமானம்/(நட்டம்) | **65,887** | (145,821) |
| | அதன் மீது செலுத்தத்தக்க வருமான வரி | **18,448** | |
| | வரி செயற்படு வீதம் | **52%** | 0% |

**அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)**

**9 (அ) ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்**

| | காணியும் கட்டடமும் ரூபா.000 | பொறித் தொகுதியும் இயந்திரமும் ரூபா.000 | மோட்டார் வாகனங்கள் ரூபா.000 | உபகரணம் ரூபா.000 | மொத்தம் ரூபா.000 |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 132,091 | 228,311 | 101,644 | 96,417 | 558,463 |
| சேர்க்கப்பட்டவை | 8,684 | 20,970 | 12,459 | 22,165 | 64,278 |
| அகற்றப்பட்டவை | - | (1,640) | (210) | (2,904) | (4,754) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 140,775 | 247,641 | 113,893 | 115,678 | 617,987 |
| **தேய்மானம்** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 73,578 | 154,002 | 40,927 | 43,548 | 312,055 |
| ஆண்டுக்கான அறவீடு | 3,738 | 35,005 | 28,281 | 9,778 | 76,802 |
| அகற்றல்கள் | - | (2,364) | (210) | (2,005) | (4,579) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 77,316 | 186,643 | 68,998 | 51,321 | 384,278 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **63,459** | **60,998** | **44,895** | **64,357** | **233,709** |
| **கருவிகளின் பெறுமதி** | | | | | **39,903** |
| **குறிப்பு 9 (ஈ) கொண்டு செல்லப்பட்ட மீதி** | | | | | **273,612** |

## 9 (ஆ) ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் - பாரிய கொழும்பு வெள்ளத் தடுப்பு சூழல் மேம்படுத்தல் கருத்திட்டம்

| | காணியும் கட்டடமும் ரூபா.000 | பொறித் தொகுதியும் இயந்திரமும் ரூபா.000 | மோட்டார் வாகனங்கள் ரூபா.000 | உபகரணம் ரூபா.000 | மொத்தம் ரூபா.000 |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 47,605 | 555,811 | 38,327 | 51,419 | 693,162 |
| சேர்க்கப்பட்டவை | - | - | - | - | - |
| அகற்றப்பட்டவை | - | (837) | (210) | (13,209) | (14,256) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 47,605 | 554,974 | 38,117 | 38,210 | 678,906 |
| **தேய்மானம்** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 28,800 | 555,810 | 38,327 | 51,418 | 674,355 |
| ஆண்டுக்கான அறவீடு | 2,380 | - | - | - | 2,380 |
| அகற்றல்கள் | - | (836) | (210) | (13,209) | (14,255) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 31,180 | 554,974 | 38,117 | 38,209 | 662,480 |
| | **16,425** | - | - | **1** | **16,426** |

## 9 (இ) ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் - லுனாவ சூழல் மேம்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டம்

| | காணியும் கட்டடமும் ரூபா.000 | பொறித் தொகுதியும் இயந்திரமும் ரூபா.000 | மோட்டார் வாகனங்கள் ரூபா.000 | உபகரணம் ரூபா.000 | மொத்தம் ரூபா.000 |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 56,125 | 218,427 | 34,228 | 2,879 | 311,659 |
| சேர்க்கப்பட்டவை | - | - | - | 2,831 | 2,831 |
| அகற்றப்பட்டவை | - | - | (3,000) | (5) | (3,005) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 56,125 | 218,427 | 31,228 | 5,705 | 311,485 |
| **தேய்மானம்** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 1,403 | 178,510 | 27,641 | 1,892 | 209,446 |
| ஆண்டுக்கான அறவீடு | 2,806 | 39,917 | 5,294 | 3,094 | 51,111 |
| அகற்றல்கள் | - | - | (2,812) | (2) | (2,814) |
| சரிப்படுத்தல்கள் | - | - | - | (157) | (157) |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 4,209 | 218,427 | 30,123 | 4,827 | 257,586 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **51,916** | - | **1,105** | **878** | **53,899** |

## 9 (ஈ) ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் - கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்தி கருத்திட்டம்

| | காணியும் கட்டடமும் ரூ.000 | பொறித் தொகுதியும் இயந்திரமும் ரூ.000 | மோட்டார் வாகனங்கள் ரூ.000 | உபகரணம் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | - | - | - | - | - |
| சேர்க்கப்பட்டவை | - | 410,650 | - | - | 410,650 |
| அகற்றப்பட்டவை | - | - | - | - | - |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | | 410,650 | | | 410,650 |
| **தேய்மானம்** | | | | | |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | - | - | - | - | - |
| ஆண்டுக்கான அறவீடு | - | 50,394 | - | - | 50,394 |
| அகற்றல்கள் | - | - | - | - | |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | | 50,394 | | | 50,394 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | - | **360,256** | - | - | **360,256** |
| **கருவிகளின் பெறுமதி** | | | | | **21** |
| **குறிப்பு 9 (அ)** | | | | | **273,612** |
| **குறிப்பு 9 (ஆ)** | | | | | **16,426** |
| **குறிப்பு 9 (இ)** | | | | | **53,899** |
| | | | | | **704,214** |

## நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

### 10. முதலீட்டு ஆதனங்கள்

## குத்தகை காணிகள் (நீண்டகால அடிப்படையில்)

இக்குறிப்புக்கான அட்டவணையில் காட்டப்பட்டவாறு கூட்டுத்தாபனம் நீண்ட கால அடிப்படையில் காணிகளை குத்தகைக்கு வழங்கியுள்ளது. பொதுவாக முழுக் காலத்திற்குமான குத்தகை வாடகை முற்பணமாக செலுத்தப்படுகிறது. ஏனவே ஆண்டுக்கான குத்தகை வருமானம் குத்தகை வருடங்களின் எண்ணிக்கையினால் மொத்த குத்தகை கொடுப்பனவை பிரிப்பதன் மூலம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

ஆதற்கமைய, நடைமுறை ஆண்டுடன் தொடர்புடைய வருமானம் வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் மீதி ஐந்தொகையில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டுளளது.

ரூபா. 501,354,118.73 தொகையுடைய நீண்ட கால குத்தகையுடன் தொடர்புடைய காணிகளின் பெறுமதி ஐந்தொகையில் குத்தகைக் காணிகள் என வேறாகக் காட்டப்பட்டுள்ளது.

<u>குத்தகைக் காழிகளின் பெறுமதி</u>

| குத்தகைதாரரின் பெயர் | இடம் | விஸ்தீரனம் | காலம் | குத்தகை அடிப்படையில் காணியின் பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|
| ஏசியா சியாகா வெயாஹவுஸ் (பிரைவட்) லிமிடட் | முத்துராஜவெல | 6ஏ 1ஆர் 28பி | 50 வருடங்கள் | 45,540,400.00 |
| செல் டர்மினல் லிமிடட் | முத்துராஜவெல | 26 ஏ | 50 வருடங்கள் | 184,288,000.00 |
| ஜப்பனீஸ் ஸ்கூல் கொழும்பு | லேக் டிரைவ் | 1ஏ 12பி | 30 வருடங்கள் | 1,596,100.33 |
| சென்சரி புரபடி லிமிடட் | வெடமுல்ல | 3 ஏ | 50 வருடங்கள் | 40,913,908.80 |
| ஏ பி டிவலொப்மன்ட் | வெடமுல்ல | 1 ஏ | 50 வருடங்கள் | 13,637,969.60 |
| பராஸ் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிடட் | முத்துராஜவெல | 3ஏ 2ஆர் 2பி | 50 வருடங்கள் | 24,896,600.00 |
| போபஸ் என்ட் வோகர்ஸ் வெயாஹவுஸிங் (பிரைவட்) லிமிடட் | முத்துராஜவெல | 4ஏ | 50 வருடங்கள் | 28,352,000.00 |
| எக்கோர் இன்டஸ்ரீஸ் | முத்துராஜவெல | 4ஏ | 50 வருடங்கள் | 28,352,000.00 |
| ஜோன் கீல்ஸ் வெயாஹவுஸிங் | முத்துராஜவெல | 6ஏ 0ஆர் 30பி | 50 வருடங்கள் | 43,857,000.00 |
| பிரமிட் லங்கா | முத்துராஜவெல | 6ஏ 0ஆர் 2பி | 50 வருடங்கள் | 42,616,600.00 |
| ஸ்ரீ சிராக் லங்கா (பிரைவட்) லிமிடட் | முத்துராஜவெல | 4ஏ 2ஆர் 11பி | 50 வருடங்கள் | 32,383,300.00 |
| சிலோன் இலக்ட்ரிசிடி போர்ட் | முத்துராஜவெல | 176.8 பி | 30 வருடங்கள் | 7,832,240.00 |
| டெஸ் எக்ரோ லிமிடட் | முத்துராஜவெல | 1ஏ | 30 வருடங்கள் | 7,088.000.00 |
| | | | | 501,354,118.73 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| | | | ரூபா.000 | ரூபா.000 |
| **11** | **துணைக் கம்பனிகளில் முதலீடு** | | | |
| | காணி மீட்டல், கம்பனி லிமிடட் நிறுவனத்தில் பங்குகள் இது காணி மீட்டல், கம்பனி லிமிடட் நிறுவனத்தின் விறியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தின 80மு இனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. | | **2,000** | 2,000 |
| **12** | **ஏனைய முதலீடுகள்** | | | |
| | ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (பிரைவட்) லிமிடட் | | | |
| | ஒவ்வொன்றும் ரூபா. 100/- கொண்ட 20,000 பங்குகள் இது ரீல் நிறுவனத்தின் விறியோகிக்கப்பட்ட பங்குகளின் 14% ஆகும். | | **2,000** | 2,000 |
| | கழி: முதலீட்டுப் பெறுமதியில் குறைதலுக்கான ஏற்பாடுகள் | | **(2,000)** | (2,000) |
| | பணிக்கொடைக்கான நிதியங்கள் | | - | 275,693 |
| | பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கு இதுவரை கொடுப்பனவு செய்யப்படாத நட்டஈடுகளுக்கான ஏற்பாடுகள் | | - | 517,352 |
| | | | | 793,045 |
| **13** | **பதிவேட்டுப் பொருட்கள்** | | | |
| | கடல் கையிருப்பு | | **1,975,225** | 1,367,090 |
| | பொதுவான கையிருப்பு | 162,183 | - | 119,507 |
| | கழி: மெதுவாக நகரும் பொருட்களுக்கான ஏற்பாடுகள் | (49,344) | - | (45,658) |
| | | | **112,839** | 73,849 |
| | பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கான செலவு | | **287,353** | 513,500 |
| | முன்னெடுக்கப்படும் பணி – சுய கருத்திட்ட அபிவிருத்தி | | **272,937** | 199,796 |
| | முன்னெடுக்கப்படும் பணி – சேவை நாடி கருத்திட்ட அபிவிருத்தி | | **21,445** | 28,934 |
| | முன்னெடுக்கப்படும் பணி – வேரஸ்கங்க கருத்திட்டம் | | **144.952** | - |
| | பணி நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் | | **815,419** | 824,197 |
| | | | **3,630,170** | 3,007,366 |
| **14** | **வர்த்தகமும் ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவையும்** | | | |
| | பதவியினர் கடன்படுநர் | | **142,036** | 134,575 |
| | ஏனைய கடன்படுநர் | | **29,882** | 50,383 |
| | ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் திரட்டுதல் - வேரஸ்கங்க | | **19,513** | - |
| | ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் திரட்டுதல் - ஏனையோர் | | **42,110** | 35,739 |
| | வர்த்தக கடன்படுநர்கள் | 431,951 | - | 369,484 |
| | கழி ; வரா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு | (49,370) | - | (81,142) |
| | | | **382,581** | 288,342 |
| | கடன்படுநர் – சுதுநெல்புர வீடமைப்புத் திட்டம் | 20,141 | | |
| | கழி ; வரா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு | (19,998) | **143** | - |
| | | | **616,265** | 509,039 |

## நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | 2013<br>ரூபா.000 | 2012<br>ரூபா.000 |
|---|---|---|---|
| **15** | **காசும் காசுக்கு சமமானவையும்** | | |
| | நிலையான மற்றும் அழைப்பு வைப்புகள் | **626,604** | 350,258 |
| | அழைப்பு வைப்புகள் - வேரஸ்கங்க கருத்திட்டம் | **200,034** | - |
| | கையிலுள்ள காசு | **481** | 524 |
| | வங்கியிலுள்ள காசு | **34,648** | 44,462 |
| | வங்கியிலுள்ள காசு (ரூபாவிற்கு மாற்றிய தொகை) | **1,846** | 1,755 |
| | | **863,613** | 396,999 |
| | வங்கி மேலதிகப் பற்று | **(1,194)** | - |
| | | **862,419** | 396,999 |
| | கடல் மண் கருத்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் அமெரிக்க நாணயக் கணக்கு ஒன்றினை பேணி வருகின்றது. (சேமிப்பு) 2013 இறுதியில் உள்ளவாறு நிலுவை அ.டொ. 14,118.46 ஆகும். | | |
| **16** | **ஏனைய நடைமுறையற்ற் பொறுப்புகள்** | | |
| | பிற்போடப்பட்ட வருமானம் (GCFC & EIP) | **16,426** | 18,806 |
| | பிற்போடப்பட்ட வருமானம் (LEI & EIP) | **53,899** | 102,213 |
| | பிற்போடப்பட்ட வருமானம் - MCUDP | **360,256** | - |
| | பிற்போடப்பட்ட வருமானம் - மோட்டார் வாகனங்கள் (அமைச்சு) | **2,500** | 3,500 |
| | குத்தகை காணிகளுக்கு எதிராக கிடைக்கப்பெற்றற முற்பணங்கள் | **339,683** | 346,298 |
| | | **772,764** | 470,817 |
| **17** | **விசேட கருத்திட்டங்கள் மீதான பொறுப்புகள்** | | |
| | பாரிய கொழும்பு வெள்ள கட்டுபாட்டு மற்றும் சூழல் மேம்படுத்தல் கருத்திட்டம் | **660,730** | 660,730 |
| | கிடைக்கப் பெற்ற நிதி - 21சூரியவெவெ வீடுகள் | **23,615** | 2,001 |
| | றாகம களு ஓயா | **56,245** | 56,245 |
| | கிடைக்கப் பெற்ற நிதி- அம்பாந்தோட்டை மயூராபுர | **5,794** | 5,794 |
| | கிடைக்கப் பெற்ற நிதி- வேரஸ் கங்க | **400,000** | 9,190 |
| | | **1,146,384** | 733,960 |
| **18** | **வரத்தகமும் ஏனைய செலுத்தப்படத்தக்கவையும்** | | |
| | ஒப்பந்த கடன் கொடுநர் | **33,525** | 28,244 |
| | டிப்பர் வாடகை கடன் கொடுநர் | **869** | 644 |
| | சில்லறை கடன் கொடுநர் | **258,099** | 148,301 |
| | ஒன்று சேர்த்த செலவுகள் | **118,061** | 48,309 |
| | சில்லறை வைப்புக்களும் பாதுகாப்பு வைப்புக்களும் | **22,592** | 23,105 |
| | காணி விற்பனைக்கு எதிரான முற்பணங்கள் | **517,471** | 518,528 |
| | கிடைக்கப்பெற்ற ஏனைய முற்பணங்கள் | **434,209** | 247,327 |
| | கடல் மணல் மீது கிடைக்கப்பெற்ற முற்பணங்கள் | **35,812** | 35,812 |
| | கடன் கொடுநர் - ரெஜிங் இன்டநெஷனல்ஸ் | **-** | 89,741 |
| | கடன் கொடுநர் - ரொதே நெல்ஷன் | **84,768** | 84,768 |
| | கடன் கொடுநர் - இமெச காணிக்கான கடல் மணல் கடன் | **186,996** | 229,521 |
| | கடன் கொடுநர் - 1 மற்றும் 2 குவியலை நிரப்புவதற்கான மணல் | **180,272** | 180,272 |
| | | **1,872,674** | 1,634,572 |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

### 20 கடல் மணல் கையிருப்பு

பெல்ஜியம் ட்ரெட்ஜின் இன்டர்நெ'னல் என்வி என்ற கம்பனி 3,000,000 கன மீற்றர் கடல் மணலினை அகழ்ந்து குவித்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மொத்த செலவு வரிகள் அடங்காது அ.டொ. 19,860,000. விலை மற்றும் எரிபொருள் விலை உயர்விற்கான மேலதிக கோரிக்கையொன்று அ.டொ. 1,411,456.80 தொகையும் ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது.

அ.டொ. 5,197,539.44 விலையில் மேலதிக கோரிக்கைகள் உள்ளடங்கலாக (வரிகள் உள்ளடங்காது) மேலதிகமாக 756,595 கன மீற்றர் கடல் மணலினை இறைத்து வழங்குவதற்காக ட்ரெட்ஜின் இன்டர்நெ'னல் நிறுவனத்திற்கு 2013இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இவ்வொப்பந்தம் இவ்வாண்டின்போது பூர்த்தியடைந்தது.

ரூபா 1,975,225,408/- பெறுமதிமிக்க 2,424,015.19 கன மீற்றர் கொண்ட கடல் மண் கையிருப்பு 2013.12.31 அன்று உள்ளவாறு நிதியியல் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 21. பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் மீதான நட்ட ஈடும் வட்டியும்.

முதுன்எல (பிபிஜிஏளம் (2774, 2813, 2837, 3088 மற்றும் 3068) பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட உண்மையான நட்டஈடு மற்றும் வட்டியினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 207,307,834.97 2013ஆம் ஆண்டில் முன்னய மேலதிக ஏற்பாடொன்றாக சரி செய்யப்பட்டது

தளகொட்டுவ எனுமிடத்தில் உள்ள (பிபிசிஓ 6286) காணியின் உரிமை அரசாங்கத்தினுடையது என்பதனால் செலுத்தப்படத்தக்க நட்டஈடு 2013 இல் மீள் சரிசெய்யப்பட்டது.

வெதமுல்ல கட்டம் I (பிபிஜிஏளம் 1435) நட்டஈடு நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதனால் நட்டஈடு மீதான வட்டி வீதம் 2013இல் சரி செய்யப்பட்டுள்ளது.

வெதமுல்ல எனுமிடத்தில் இலங்கை புகையிரதத்திடமிருந்து உரித்தளிக்கப்படவுள்ள முன்மொழியப்பட்ட காணிக்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 10,000,000/- ஆகும். உரித்தளிக்கப்படவுள்ள காணிக்காக கூட்டுத்தாபனம் ரூபா 356,633.93 தொகையினை நட்டஈடு மற்றும் வட்டியாக களனி பிரதேச செயலாளருக்கு கொடுப்பனவு செய்தல்

அத்திட்டியவில் பிபிசிஓ 6804 காணி பெற்றுக் கொள்ளப்பட்டமைக்காக மாற்றுக்காணி பெல்லன்வில விகாரைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே நட்டஈடு வழங்கப்பட மாட்டாது.

### 22. பிற்போடப்பட்ட வருமானம்

பாரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு மற்றும் சூழல் மேம்படுத்தல் கருத்திட்டம் லுனாவ சூழல் மேம்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்தி கருத்திட்டம் அத்துடன் கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்தி கருத்திட்டம் என்பவற்றின் கீழ் கூட்டுத்தாபனம் சொத்துகளைப் பெற்றுக் கொண்டது. இச்சொத்துக்களும் நோரொத்த பொறுப்புகளும் நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் இம்மூன்று கணக்ககளினதும் கொண்டு செல்கின்ற தொகை தேய்மான கட்டணமொன்றுக்கு சமமான தொகையொன்றினால் கழிக்கப்பட்டுள்ளன. 2006ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையில் ஆக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கிணங்க பொறுப்பு கணக்கு (அளிப்பு) பிற்போடப்பட்ட வருமானமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

## 23. நிர்மாண ஒப்பந்தங்கள்

நிர்மாண ஒப்பந்தத்தின் பெறுபேறு நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக உள்ளபோது நிர்மாண வருமானம், ஐந்தொகைத் திகதியன்று ஒப்பந்த செயற்பாடுகளில் முடிவுறுத்தல் கட்டத்திற்கு தொடர்புபடுத்தி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட அனைத்து பணிகளும் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 24. சுதுநெலும்புர வீடமைப்பு கருத்திட்டம்

2012இன் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கப்பெற்ற வருமானத்தினையும் 2013 வரையான நிலுவையினையும் கூட்டுத்தாபனம் கணக்கிட்டுள்ளது. கிடைக்கப்பெறும் தகவல்களுக்கமைய சொத்துக்களை மாற்றுவது தொடர்பில் சாத்தியங்களில்லை. எனவே நேரொத்த கருத்திட்ட செலவு மற்றும் காணிச் செலவு ஐந்தொகையில் எஞ்சியுள்ளது.

